விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 19 திங்கட்கிழமை (05.12.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 351

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இலங்கைக்கு ஆபத்து இன்னமும் நீங்கவில்லை

### ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கைக்கு ஆபத்து இன்னமும் இருப்பதால் பாதுகாப்புக்கு அதிக நிதியை ஒதுக்குவதை விட வேறு வழி ஏதும் இல்லை என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அலரிமாளிகையில் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவை விடுவிக்குமாறு அழுத்தங்களை பிரயோகிக்கவில்லை

### அமெரிக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் உள்விவகாரங்களில் தலையீடுசெய்யவில்லை எனவும் சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு அழுத்தங்களைபிரயோகிக்கவில்லை எனவும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா விடுதலை தொடர்பில் அமெரிக்கா அழுத்தங்களை பிரயோகிப்பதாக ஊடகங்களில் தகவல்கள் வெளியிடப்பட்டிருந்தன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவுடன் அமெரிக்க தூதரக அதிகாரி நடத்திய சந்திப்பின் போது சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு கோரப்பட்டிருந்ததாகவும் அமெரிக்க தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும் மைத்திரிபால சிறிசேனவுடன் நடைபெற்ற சந்திப்பு சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்காக அல்ல எனக் குறிப்பிட்டுள்ளதுடன் பல்வேறு விடயங்கள் பற்றி பேசப்பட்டதாகவும் அவை தொடர்பில் கருத்து வெளியிட முடியாது எனவும் அமெரிக்க தூதரக அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

## அமெரிக்க விமானத்தை ஈரான் சுட்டு வீழ்த்தியது

(தெஹறான்)

ஈரானிய வான்பரப்பிற்குள் ஊடுருவிய ஆர்.கியூ-170 ரக விமானத்தை ஈரானிய புரட்சிப் படையினர் சுட்டு வீழ்த்தியதாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி அல் ஆலம் தொலைக்காட்சி நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் ஆளில்லாத உளவு விமானமொன்றை ஈரானிய படையினர் சுட்டு வீழ்த்தியதாக ஈரானிய தொலைக்காட்சியொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஈரானிய வான்பரப்பிற்குள் ஊடுருவிய இந்த ஆர்.கியூ-170 ரக விமானத்தை ஈரானிய புரட்சிப்படையினர் சுட்டு வீழ்த்தியதாக இராணுவ (20ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல்போன பிள்ளைகளை இன்னமும் தேடிவரும் பெற்றோர்

### த எக்னொமிஸ்ற் சஞ்சிகை விபரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது காணாமல்போன தமது பிள்ளைகளை அவர்களின் பெற்றோர் இன்னமும் தேடிவருவதாக பிரித்தானியாவிலிருந்து வெளிவரும் தஎக்னொமிஸ்ற் (The Economist) என்னும்சஞ்சிகை தெரிவித்துள்ளது.

2009ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் விடுதலைப்புலிகளால் கட்டாய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் இணைத்துக் கொள்ளப்பட்ட தனது மகனை தயாரான சாந்தகுமார் கமலா இன்னும் தேடிவருவதாக இச்சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது.

இவ்விவகாரம் தொடர்பில் இச் சஞ்சிகையின் கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கியமான விபரங்கள் வருமாறு,

இலங்கை (20ஆம் பக்கம் பார்க்க)



வரவுசெலவுத் திட்டத்திற்கெதிராக ஜே.வி.பி. ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை கிரிபத்கொடை நகரில் இடம்பெற்றது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத் மற்றும் சுனில் ஹந்துன்நெத்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டக்காரர்களைப் படத்தில் காணலாம்.

## ஐ.தே.கவின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்க கருவுக்கு அழைப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் கரு ஜெயசூரியவுக்கு எதிர்க் கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ளுமாறு உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார இந்த வேண்டுகோளை விடுத்தார்.

கட்சியின் யாப்பிற்கிணங்க எதிர்காலத்தில் இடம்பெறும், தலைமைத்துவத் தேர்தலில் கட்சித்தலைமையின் பொருட்டு போட்டியிடுமாறு அவர், கரு ஜெயசூரியவிடம் கோரிக்கை முன்வைத்திருந்தார்.

இந்த அழைப்பை ஏற்றுக்கொள்வதாக எதிர்க் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய நேற்றுமாலை அளவில் தமது இணக்கத்தை வெளியிட்டுள்ளார்.

குறித்த (20ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் பீரிஸின் அழுத்தமே பேச்சு முறிவடைய காரணம்

### நிலைமையை விளக்கி அறிக்கை வெளியானது

(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது பிரதிநிதிகளை நியமிக்காத பட்சத்தில் இரு தரப்பு பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்வது சாத்தியமாக இருக்காது என்ற அரசாங்கத்தின் பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகிக்கும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் அழுத்தம் காரணமாக அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கும் இடையேயான பேச்சுவார்த்தையில் விரிசல் நிலை ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு தமது பிரதிநிதிகளை நியமிப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னர் முன்வைத்த கருத்துக்கள் இரண்டு கூட்டங்களில் அரசாங்கத் தரப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நேற்று முன்தினம் நடைபெற்றக் கூட்டத்தில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வழங்கிய அழுத்தமே பேச்சுவார்த்தையில் விரிசல் ஏற்படக் காரணமாகியுள்ளது.

இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

**பேச்சை முன்னெடுக்க தயார்**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தைகளை ஆக்கபூர்வமாக முன்னெடுக்க வேண்டும் என்ற தீர்மானத்திலேயே இன்னமும் இருக்கின்றது. அதேவேளை, இருதரப்பினருக்கும் இடையில் (02ஆம் பக்கம் பார்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சவூதி கொலை வழக்கில் மூவருக்கு மரண தண்டனை

சவூதி அரேபியாவின் ஜித்தா நகரில் நான்கு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கொலைச் சம்பவமொன்று தொடர்பாக இலங்கை மற்றும் இந்தியாவைச் சேர்ந்த நபர்களைக் கொண்ட குழுவொன்றின் உறுப்பினர்களில் மூவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் எட்டுப் பேருக்கு சிறைத்தண்டனையும் கசையடித் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

ஜித்தா பொது நீதிமன்றத்தில் 3 நீதிபதிகள் கொண்ட குழாம் நேற்று முன்தினம் இத்தீர்ப்பை அளித்துள்ளது.

கயான், இஸ்க் மற்றும் பர்ஷான் ஆகிய மூவரும் சிரச்சேதம் செய்யப்படவுள்ளனர். அத்துடன் அஷ்ரப், குமார், ரஜிஸ், ரங்கீத், முகமத் கொனா ஆகியோருக்கு 5 வருட சிறைத் தண்டனையும் கசையடிகளும் வழ்ங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

அதேவேளை நௌரா எனும் பெண்ணுக்கு 4 வருடசிறைத்தண்டனையும் 400 கசையடிகளும் விதிக்கப்பட்டுள்ளது. ராஜியா எனும் பெண்ணுக்கு 6 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அஸீஸ் எனும் ஆணுக்கு 6 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இத்தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கு 30 நாட்கள் அவகாசம் உள்ளது என சவூதி கஸெட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

வர்த்தகர் ஒருவரை அவரின் வீட்டில் கட்டி வைத்து துவாய் ஒன்றை வாயில் திணித்து விட்டு இரும்பு பொருளொன்றினால் அடித்துக் கொன்றதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இவர்கள் அனைவரும் கொலையில் சம்பந்தப்பட்டதை ஒப்புக் கொண்டிருந்த்னர் எனவும் அவர்களின் கொடூரச் செயல்களுக்காக அவர்கள் அனைவருக்கும் மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் சவூதி அரேபிய புலனாய்வு மற்றும் வழக்குத் தொடுநர் பணியகம் நீதிமன்றத்தைக் கோரியது.

மேற்படி வர்த்தகர் வீட்டில் பணம் வைத்திருப்பதாக அங்கு பணியாற்றிய பணிப்பெண் ஒருவர் இந்திய வாடகைக் கார் சாரதியொருவருக்கு தெரிவித்ததாகவும் அது குறித்து அச்சாரதி இலங்கை நண்பர்களுக்கு கூறியபின் வர்த்தகரை கொலைசெய்து பணத்தை திருட தீர்மானிக்கப்பட்டதாகவும் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தமது வாக்கு மூலத்தில் தெரிவித்திருந்தனர். (எ-5)

## இரண்டு பெண்கள் யாழ். பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

விபசாரத் தொழிலில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் இரண்டு பெண்கள் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்களை எதிர்வரும் 19 ஆம் திகதி மட்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் யாழ். ஐந்து சந்திப் பகுதியில் வைத்து இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (எ-5)

## கொழும்பு பங்குச்சந்தை சரிவுக்கு உள்ளாகும்?

கொழும்பு பங்குச்சந்தை பங்களாதேஷ் பங்குச் சந்தையை போன்று சரிவு நிலைக்கு உள்ளாகும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. கடந்த வியாழக்கிழமையன்று கொழும்பு பங்குச் சந்தையின் தலைவராக பணியாற்றிய இந்திராணி சுகததாஸ பதவி விலகிய நிலையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில மாதங்களாக கொழும்பு பங்குச் சந்தை அரசியல் அதிகாரம் மிக்கவர்களின் ஆதிக்கத்தில் இருந்து வருகிறது. இதன் காரணமாக கொழும்பு பங்குச் சந்தை தொடர்ந்தும் சரிவுநிலையை எதிர்நோக்கி வருகிறதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்த கொழும்பு பங்குச் சந்தையின் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ)

# பிச்சைக்காரர்களை கொன்ற சந்தேக நபர் கைதானார்!

பிச்சைக்காரர்கள் பலர் தொடர்ச்சியாக கொல்லப்பட்டமை தொடர்பாக பல பெறுமதியான தகவல்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இக்கொலைகள் தொடர்பாக பிச்சைக்காரர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் கொட்டாஞ்சேனை, பேலியகொடை, கொம்பனித்தெரு, மருதானை, கிரிபத்கொடை, களனி, பம்பலப்பிட்டி, கல்கிஸை பகுதிகளில் 15 பிச்சைக்காரர்கள் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இப்பிச்சைக்காரர்கள் மேற்படி பகுதிகளில் பிச்சையெடுப்பதை சந்தேக நபர் விரும்பாததால் இக்கொலைகளை செய்துள்ளதாக கூறப்படுகின்றது. பிச்சைக்காரர்கள் பிச்சையெடுப்பற்கு தத்தமக்கென இடங்களை ஒதுக்கிக் கொள்வதுண்டு.

இச்சந்தேகநபர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் ஆவார். இவர் தான் காது கேளாதவர் போல் நடிப்பதற்கு ஆரம்பத்தில் முற்பட்டுள்ளார்.

எனினும் இரத்மலானையிலுள்ள செவிப்புல, கட்புல குறைபாடுடையோருக்கான பாடசாலையில் நடத்தப்பட்ட சோதனை மூலம் இவர் காது கேளாதவர் அல்லர் எனத் தெரிய வந்துள்ளது. (எ-5)

## ஆட்டோ தடம்புரண்டதில் முதியவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஆட்டோ தடம்புரண்டதில் அதில் பயணம் செய்த முதியவர் ஒருவர் படுகாயம் அடைந்தார்.

அல்லாரை வடக்கைச் சேர்ந்த வேலன் கணபதி (வயது 63) என்ற முதியவரே படுகா யமடைந்தவர் ஆவார். கச்சாய் வீதியூடாக ஆட்டோவில் சென்று கொண்டிருந்தபோது அது தடம்புரண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. படுகாயமடைந்தவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். சாரதி எவ்வித காயமுமின்றி தப்பிக்கொண்டார். (எ-11)

## கல்வியியல் கல்லூரியில் ஆற்றுகை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தென்னிந்திய நாட்டார் கலைகளின் ஆற்றுகை நிகழ்வு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தேசிய கல்வியியல் கல்லூரியின் இரண்டாம் வருட மாணவர்களையும் உள்ளகப் பயிற்சி பெறும் மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் கேட்டுள்ளார். (ந)

## பன்னிரு திருமுறை முற்றோதல்

அராலி ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதேஸ்வரர் ஆலய கார்த்திகை மாத முதலாவது சோமவாரத்தினை தொடர்ந்து தினமும் பன்னிரு திருமுறை முற்றோதல் நிகழ்வு காலை 7 மணியிலிருந்து மாலை 5 மணி வரை நடைபெறுகின்றது என அகில இலங்கை ஓதுவார் சபை செயலாளர் அறிவித்துள்ளார். (அ)



தேசிய ரீதியாக பாடசாலை மட்டங்களுக்கிடையே நடத்தப்பட்ட உடற்பயிற்சி போட்டியில் முதலாம் இடத்தை பெற்ற ஊர்காவற்துறை சென். அன்டனிஸ் கல்லூரி மாணவர்களை கௌரவிக்கும் முகமாக போட்டியில் பங்கு பற்றிய மாணவர்கள் 29 பேருக்கும் சம்பத் வங்கி ஊர்காவற்துறை கிளை சார்பாக கணக்கு ஆரம்பிக்கப்பட்டு ஒரு தொகை பணம் ஆரம்ப வைப்பாக இடப்பட்டு வழங்கப்பட்டது. இதில் மாணவர்களுக்கு பரிசில் வழங்கப்படுவதையும் மாணவர்களுடன் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# அமைச்சர் பீரிஸின்......

ஏற்கெனவே காணப்பட்ட பரஸ்பர உடன்படிக்கையை கௌரவிக்கும்படியும் மக்கள் அனைவராலும் விரும்பப்படும் ஒரு அரசியல் தீர்வை அமைப்பதற்கு புதிய இடையூறுகளை ஏற்படுத்தவேண்டாம் என அரசாங்கத்திற்கு வலியுறுத்துகின்றோம்.

கடந்த நவம்பர் மாதம் 16 ஆம் திகதி அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையே நடைபெற்ற இருதரப்புப் பேச்சுவார்த்தைகளின் போது அரசியல் தீர்வொன்றினை உருவாக்குவதில் கலந்துரையாட வேண்டிய அம்சங்களை இரு தரப்புகளும் அடையாளம் கண்டறிந்தன.

குறிப்பிட்ட ஒழுங்கில் இந்த அம்சங்கள் குறித்து கலந்துரையாட இரு தரப்புகளும் உடன்பட்டதுடன், இந் நோக்கத்திற்காக பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக இம் மாதம் 01ஆம், 6ஆம், 14ஆம் மற்றும் 15 ஆம் திகதிகள் கால அட்டவணைப்படுத்தப்பட்டன.

**அட்டவணை பரிமாற்றம் :**

இருதரப்பினருக்கும் இடையில் கால அட்டவணையும் கலந்துரையாட வேண்டிய அம்சங்களும் அடங்கிய பிரசுரம் பரிமாறிக் கொள்ளப்பட்டது. இம் மாதம் முதலாம் திகதி கூடிய போது ஆரம்பத்திலேயே வெளி விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் உத்தேச நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு தன் பிரதிநிதிகளை நியமிக்காத பட்சத்தில் இரு தரப்பு பேச்சுவார்த்தைகளை ஏற்கனவே உடன்பட்டபடி முன்கொண்டு செல்லமுடியாதென சுட்டிக் காட்டினார்.

இந்த பேச்சு வார்த்தைகளில் அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் உடன்பாடு ஏற்பட்டவுடன் அது முன்னரே பிரேரிக்கப்பட்டபடி நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் வைக்கப்படும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழு நடவடிக்கைகளில் இணைந்து கொள்வார்கள் என இரு தரப்பினரிடையேயும் ஏற்பட்டிருந்த உடன்பாட்டுக்கு அமைச்சர் ஜி.எல். பீரிஸின் வேண்டுகோள் முரணாகவுள்ளது என்பது அவருக்கு ஞாபகப்படுத்தப்பட்டது.

இந்த உடன்பாடு கடந்த செப்டெம்பர் 11ஆம் திகதி நடைபெற்ற கூட்டு அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கடுத்து அக்டோபர் 20 ஆம் திகதி நடந்த கூட்டத்திலே அவ்விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கையின் அடிப்படையிலேயே அதற்கடுத்ததாக நடைபெற்ற நவம்பர் 16 ம் திகதி கூட்டத்தில் டிசம்பர் முற்பாதியில் நான்கு கூட்டங்கள் நடத்த தீர்மானிக்கப்பட்டது. இந்த விடயம் நவம்பர் 24ம் திகதி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸினால் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

**தெளிவற்ற நிலை:**

ஏற்கெனவே செய்து கொள்ளப்பட்ட தீர்மானங்கள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு ஞாபகமூட்டிய போதும், அரசாங்கம் இக்காரியத்தை நிதானித்து செய்ய கால அவகாசம் கோரியதுடன் அதன் விளைவாக நேற்று முன்தினம் ஒரு புதிய பேச்சுவார்த்தைக்கு நாள் குறிக்கப்பட்டது. நீண்ட அரசாங்கத் தரப்பு பிரதிநிதிகளின் நிலைப்பாடு தெளிவற்றதும் ஒரு முடிவுக்கு வராத நிலையிலுமாக இருந்தது.

அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான தற்போதைய இந்தத் தொடர்பின் வரலாற்றைப் புரிந்து கொள்ளுதல் முக்கியமானதாகும். அரசியல் தீர்வு தொடர்பான பேச்சு வார்த்தைகள் ஜனாதிபதியினால் முன் மொழியப்பட்ட தற்கமைய அரசாங்கத்தின் சார்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சிப்பிரதிநிதிக்கும் இலங்கைத் தமிழ் பேசும் மக்களைப் பிரதி நிதித்துவப்படுத்தும் பிரதான கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையே இவ்வருடம் ஜனவரி மாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகியது.

முதலாவது கூட்டத்திலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உத்தேச அரசியல் தீர்வு குறித்து கோடிட்டுக் காட்டியது. தொடர்ந்து வந்த பெப்ரவரி மூன்றாம் திகதி கூட்டத்தில் அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கமைய உத்தேச அரசியல் தீர்வுத்திட்டத்தை எழுத்தில் சமர்ப்பித்தது.

அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கமைய மேலும் பரந்த அளவிலான பிரேரணைகள் மார்ச் 18 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் எழுத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. மேற்குறித்த பிரேரணைகளின் அடிப்படையில் அர்த்தமுடைய இலக்கை நோக்கியதுமான பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவது சம்பந்தமான மறுமொழியைத் தெரிவிப்பதாக அரசாங்கம் அப்போது உடன்பட்டிருந்தது.

**5மாதங்களில் ஏழு பேச்சுக்கள் :**

அடுத்த ஐந்து மாதகாலங்களில் ஏழு பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றன. ஆனால் அரசாங்கம் தனது மறுமொழியைத் தெரிவிப்பதாக திரும்பத் திரும்ப சொல்லி வந்த போதும் அவ்வாறு செய்யவில்லை.

இந்த சந்தர்ப்பத்திலேயே ஆகஸ்ட் 04 ஆம் திகதி நடந்த பேச்சுவார்த்தையின் போது அர்த்தபுஷ்டியானதும் ஒரு இலக்குடையதுமான பேச்சு வார்த்தை தொடங்குவதற்கு வாய்ப்பில்லா வகையில் அரசாங்கம் இதுவரையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சமர்ப்பித்த பரந்துபட்ட பிரேரணைகளுக்கு மறுமொழி அளிக்காதிருப்பதன் காரணமாக அரசாங்கம் தன் மறுமொழியை கிடைக்கச் செய்யும் வரை மேற்கொண்டும் பேச்சுவார்த்தைக்கு நாள் குறிப்பது அர்த்தமற்றதாகுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்தது.

அதன் பின்னர் செப்டம்பர் இரண்டாம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவருக்குமிடையிலான சந்திப்பின் பின்னர் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு நாள் நியமனம் செய்வதற்கான சில நடைமுறைகள் தீர்மானிக்கப்பட்டன. அதன்படி இரு தரப்புப் பிரதிநிதிகள் மீண்டும் செப்டெம்பர் 16 ஆம் திகதி சந்தித்து நடைமுறைகளைக் கவனத்திலெடுத்து கூட்ட அறிக்கையிலே சேர்த்துக் கொண்டனர். இது அக்டோபர் 20 ஆம் திகதி கூட்டத்திலே உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த நடைமுறைக்கமையவும் சட்ட அறிக்கையில் உறுதி செய்யப்பட்டதற்கு அமையவும் அரசாங்கத்தரப்பு பிரதிநிதிகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான இரு தரப்பு பேச்சு வார்த்தை தொடரப்பட வேண்டுமெனவும் இப்பேச்சுவார்த்தைகளினால் எய்தப் பெறும் உடன்பாடுகள் உத்தேச நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் முன் வைக்கப்படுமெனவும் இரு தரப்பினரும் ஏற்றுக்கொண்டனர். இதன்படி இரு தரப்பு பேச்சுவார்த்தைகளில் போதுமான அளவில் இரு தரப்பு சம்மதம் ஏற்படும் வரையில் நாடாளுமன்றக் குழுவுக்கு பிரதிநிதிகளை நியமிப்பது தாமதமாகுமென தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பலமுறை வலியுறுத்திக் கூறியிருந்தது என இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-5)

# இன்று ஒரு தகவல்

## பாவம் எது?

ஒருவன் ஒரு திருட்டு வேலையைச் செய்துவிட்டு சிறைக்குச் சென்றான்.

இவனை சிறை அதிகாரி பார்த்துவிட்டு "என்னப்பா அதற்கு இடையில் திரும்பவும் சிறைக்குள் நுழைந்து விட்டாய்?'' என்றான்.

"வேறு வழி இல்லையே?" என்றான் அவன்.

''சரி இந்தத்தடவை என்னபிழை செய்தாய்?'' என்று விசாரித்தார்.

"பகல் வேளையிலே... ஆட்கள் நடமாட்டம் இல்லாத வீட்டிலே உள்நுழைந்து கொள்ளையடித்தேன். பிடிபட்டேன். அது தான் சிறையில் அடைத்து விட்டார்கள்" என்றான்.

''அடப்பாவி! முன்பெல்லாம் இரவு வேளையிலேதான் திருட்டு வேலை செய்து கொண்டிருந்தாய். இப்போது பகல் வேளையிலும் திருட ஆரம்பித்து விட்டாயா? இது நியாயமா?" என்று கேட்டார்.

இல்லை சேர்! எவ்வளவு நாள்தான் நான் கண் விழித்துக் கொண்டிருக்கிறது? என்றார்.

இவனுக்கு தான் செய்வது பாவமென்று புரிகிறது.

முதல் தடவை வேறு வழி தெரியாமல் ஒரு இடத்திலே திருடினான். பசிக் கொடுமை.

பசித்த போது திருட ஆரம்பித்தவன். இப்போது பசி இல்லாத போதும் தனது திருட்டுத் தனத்தைக் குறைக்கவில்லை.

ஏனென்றால், "தலைக்கு மேலே வெள்ளம் போய்விட்டது. இனிமேல் சாண் என்ன முழம் என்ன?'' என்றான்.

தொடர்ந்து ஒருவன் பாவம் செய்வதற்கே இதுமாதிரி மனோ பாவம்தான் காரணம்.

ஒருவன் தனக்கு வேறு வழி இல்லாமல், ஒரு நிர்ப்பந்தத்தினால் தவறு செய்கிறான் என்றால்,அது பாவம் இல்லை.

ஆனால், நிர்ப்பந்தமே இல்லாமல், வேண்டுமென்றே தவறு செய்வது பாவம்.

முன்பொரு காலத்திலே "உஷ்ஸ்தி'' எனும் ஒரு முனிவர் இருந்தார்.

ஒரு சமயம் ஆலங்காட்டி மழை பெய்து, ஊரிலே பயிர்கள் எல்லாம் அழிந்து போய்விட்டது. எங்கு பார்த்தாலும் பஞ்சம் தாண்டவமாடத் தொடங்கி விட்டது. எல்லோரும் பசியின் விளிம்பில் உண்ண உணவின்றி கஷ்டப்பட்டார்கள். இந்த முனிவரும் பல நாட்களாகப் பட்டினி கிடந்தார்.

ஊர் மக்கள் பட்டினி கிடக்கும் போது, முனிவருக்கு மட்டும் என்ன கிடைக்கப் போகிறது? எப்படி தனது பசியை அடக்கி பல்லைக்கடித்துக் கொண்டிருந்து அமைதியாக இருந்து பார்த்தார். ஒரு கட்டத்திலே அவராலே முடியவில்லை. செய்வதறியாது நின்றார்.

அந்த நேரத்திலே ஒரு யானைப் பாகன் அவ்வழியாக வந்தான். அவை எதையோ சாப்பிடுவதுபோல் தெரிந்தது. முனிவர் அவனைப் பார்த்து, "ஏதாவது இருந்தால் சாப்பிடுவதற்குத் தரும் படியாகக் கேட்டார்.

யானைப்பாகன் முனிவரை இரக்கத்துடன் பார்த்தான்.

"ஐயா! நான் எச்சில்படுத்திய உழுந்து தான் இருக்கிறது. அதை எப்படி உங்களுக்குத் தரமுடியும்" என்று இழுத்தான்.

"பரவாயில்லை கொடு! என்று கூறி அவன் கொடுத்த எச்சில் உழுந்தை வாங்கி சாப்பிட ஆரம்பித்தார்.

அவ்வாறே இந்தத் தண்ணீரையும் குடிக்குமாறு நீட்டினான் அந்த யானைப்பாகன்.

"அது எச்சில்! நான் குடிக்கமாட்டேன்" என்றார் முனிவர்.

யானைப் பாகனுக்கு எதுவுமே புரியவில்லை!

"என்ன சுவாமி! என் எச்சில்பட்ட உழுந்தை மட்டும் சாப்பிடுகிறீர்கள். தண்ணீர் வேண்டாம் என்று கூறுகிறீர்கள்?'' என்று கேட்டான்.

இப்போது வேறு எங்கேயும் அன்னம் கிடைக்கவில்லை. இதைச் சாப்பிடவில்லையென்றால், என் உயிர் பிரிந்து விடும். ஆனால், தண்ணீர் எங்கேயும் கிடைக்கும். அதனாலே உன் எச்சில் தண்ணீரை நான் அருந்தமாட்டேன்" என்றார்.

இந்தக் கதையை வாசிக்கும்போது, நம்மில் பலருக்கு சிரிப்பு வரலாம்.

"உழுந்துக்கு இல்லாத எச்சில் தண்ணீருக்கு மட்டும் வந்து விட்டதோ? என்று கேட்கலாம்.

எவ்வளவுதான் தத்துவவிளக்கம் கொடுத்தாலும் சில பேருக்கு சுபாவத்தை மாற்றவே முடியாது. மிகவும் கஷ்டம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இளையோருக்கான இலவச தொழிற்பயிற்சி நெறிகள்

(மல்லாவி)

அவுஸ்திரேலியா சிறுவர் நிதியத்தின் நிதி அனுசரணையுடன் இலங்கை சிறுவர் நிதியத்தினால் கிளிநொச்சி மாவட்டத்தில் இளைஞர் யுவதிகளுக்கு பல்வேறு தொழிற் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்தொழிற் பயிற்சிகளில் 50 இளைஞர், யுவதிகளுக்கான சித்திர வேலையுடன் கூடிய ஆடை வடிவமைப்பு பயிற்சி நெறி இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பல்லவராயன்கட்டு முழங்காவிலிலுள்ள டொன்பொஸ்கோ தொழிற் பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டு 6 மாதத்திற்கு இலவசமாக வழங்கப்படவுள்ளது.

மேற்படி பயிற்சியில் ஆண், பெண் பயிற்சியாளர்கள் பயிற்சி பெறவுள்ளனர்.

இப் பயிற்சி நெறியில் பங்கு கொள்ளும் 17 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இதற்கான உபகரணங்கள், துணிகள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

பயிற்சி முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படுவதோடு தொழிற் பயிற்சியினை நிறைவு செய்து கொள்பவர்களுக்கு தொழில் வாய்ப்பும் வழங்கப்படவுள்ளது.

இங்கு கணிதம், சிங்களம், ஆங்கிலம் ஆகிய பாடங்களும் கற்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறியில் இணையவுள்ள இளைஞர், யுவதிகள், சிரேஷ்ட உத்தியோகத்தர் இளைஞர் வேலைவாய்ப்பு, இலங்கை சிறுவர் நிதியம், இலக்கம் 100, நாவலர் வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறும் அல்லது 077 3764794, 021 2285482 என்ற தொலைபேசி இலக்கங்களுடனும் தொடர்பு கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இப்பயிற்சியை தொடர்ந்து தச்சு வேலைப் பயிற்சி மற்றும் விவசாய இயந்திரங்கள் திருத்துவதற்கான பயிற்சி ஆண், பெண்களுக்கான பயிற்சி என்பனவும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-15)

# பாதை சீரின்மை காரணமாக போக்குவரத்து தடைப்பட்டது

வலைப்பாடு கிராமத்தில் இருந்து மல்லாவி ஊடாக வவுனியா செல்லும் பேருந்து சேவை பாதை சீரின்மை காரணமாக தடைப்பட்டுள்ளது. வலைப்பாட்டுக் கிராமத்தில் இருந்து வெள்ளாங்குளம், கல்விளான், மல்லாவி, மாங்குளம் ஊடாக வவுனியா செல்கின்ற பேருந்து சேவையானது, பலநூற்றுக்கணக்கான மக்களின் போக்குவரத்து தேவையை வழங்கி வருகின்றது.

கடந்த வாரம் வன்னியில் பெய்த கடும் மழை காரணமாக வெள்ளாங்குளத்திற்கும் கல்விளானுக்கும் இடைப்பட்ட சேந்த மாவில்குளம் வான்பாய்வதன் காரணமாக இவ் வீதியால் பயணிக்க முடியாத நிலை உருவாகியுள்ளது.

இவ்வீதியின் 100 மீற்றர் தொடக்கம் 150 மீற்றருக்கு இடைப்பட்ட பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இவ்வீதியில் பேருந்துகள் பயணிக்கின்ற பொழுது பேருந்துகள் புதையும் அபாய நிலையுள்ளது. இதனால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. எனவே, உரியதரப்பினர் இவ்வீதியை விரைவில் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவ நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-15)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 65 | 90 | 70 |
| பச்சைமிளகாய் | 240 | 280 | 250 |
| தக்காளி | 140 | 160 | 140 |
| மரவள்ளிக் கிழங்கு | 20 | 30 | 30 |
| கோவா | 80 | 80 | 60 |
| கரட் | 100 | 120 | 100 |
| பூசணி | 60 | 70 | 70 |
| புடோல் | 50 | 60 | 40 |
| வாழைக்காய் | 30 | 40 | 30 |
| சின்ன வெங்காயம் | 80-100 | 100 | 70-100 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 60 |
| பாகற்காய் | 100 | 180 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 30 |
| கருணைக் கிழங்கு | 70 | 60 | -- |
| பயற்றங்காய் | 120 | 160 | 100 |
| லீக்ஸ் | 40 | 80 | 80 |
| பீற்றூட் | -- | 60 | 60 |
| கறிமிளகாய் | 150 | 160 | 130 |
| முருங்கைக்காய் | -- | 120 | 110 |
| போஞ்சி | 150 | 140 | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 15 | 30 | 30 |
| தேசிக்காய் | 150 | 160 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 20-30 | 25 | 25 |

# இராசி பலன்

*05.12.2011*
*(கார்த்திகை 19, திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.09 மணிக்கு*
*தசமி முற்பகல் 11.22 மணிவரை*
*உத்தரட்டாதி காலை 7.45 மணிவரை*
*இராகுகாலம் 7.46-9.16 மணிவரை*
*சுபநேரம் 12.16-1.46 மணிவரை*
*மூன்றாம் கார்த்திகை சோமவாரம்.*

**மேடம்** சுப செலவுகள் அதிகரிக்கும், தொழிலில் புதிய மாற்றங்கள் செய்யும் எண்ணம் உருவாகும், சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்புடன் செயற்படுவீர்கள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**இடபம்** அஞ்சல் வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம்,புதிய நண்பர்களின் அறிமுகத்தால் பொருளாதார நிலை உயரும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், போசன சுகமுண்டு.

**மிதுனம்** வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், அரசு வழி அனுகூலமுண்டு, தொட்ட காரியம் வெற்றி பெறும், தந்தை வழியில் ஏற்பட்ட தகராறுகள் அகலும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், புகழ் மிக்கவர்களின் சந்திப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள்,உடல் நலம் சீராகும், மங்கையரால் ஏற்பட்ட மனக்கலக்கம் மாறும்.

**சிங்கம்** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், விரயங்கள் தவிர்க்க இயலாமல் போகும், வாகனங்களில் செல்லும் போது விழிப்புணர்ச்சி தேவை, குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் தோன்றி மறையும்.

**கன்னி** நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரும், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், மறைமுக எதிர்ப்புக்கள் விலகும், விழாக்களில் கலந்துகொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும்,பிள்ளைகளால் பெருமை சேரும், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**தனுசு** திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடக்கும், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், பெற்றோர் மீது பிரியம் கூடும், பம்பரமாகச் சுழன்று பணிபுரிய வேண்டிய நாள்.

**மகரம்** சகோதர வழி ஒற்றுமையால் பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், நட்பு வட்டம் விரிவடையும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரும், குடும்ப சுகமுண்டு.

**கும்பம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில சம்பவங்கள் நடைபெறலாம், பண வரவு திருப்தி தரும், எதிர்பார்ப்புகள் எளிதில் ஈடேறும், வாரிக் கொடுத்த தொகை வந்து சேரும், வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்** திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவத்தை நாடுவீர்கள்,கற்பனைகள் அதிகரிக்கும், தெய்வ வழிபாட்டால் திருப்தி காணவேண்டிய நாள்.

வளவன்

# வடமராட்சிப்பகுதியில் திருடர்கள் தொல்லை

## மக்கள் அச்சத்தில்

(பருத்தித்துறை)

வடமராட்சியிலுள்ள இமையாணன், நவிண்டில் பகுதிகளில் திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளதால் அப்பகுதி மக்கள் அச்சத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

மேற்குறித்த பகுதியில் இரவு வேளைகளிலும் மற்றும் பகல் நேரங்களிலும் திருடர்கள் வீடுகளுக்குள் உட்புகுந்து வீட்டில் இருப்போரை அச்சுறுத்தி திருட்டு முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக வயது முதிர்ந்தவர்கள் தனியே உள்ள வீடுகளிலேயே இத்திருடர்கள் திருட்டு முயற்சியில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதனால் அச்சம் காரணமாக அப்பகுதி மக்கள் சிலர் பாதுகாப்புத்தேடி வேறு இடங்களில் உள்ள உறவினர்கள் வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

எனவே உரிய தரப்பினர் மக்களின் அச்ச நிலையைக் கருத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-10)

# ஜனாதிபதி தங்கக்கிண்ணப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் அணி சம்பியன்

(சாவகச்சேரி)

டயலொக் நிறுவனத்தின் அனுசரணையுடன் இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தினர் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட ஜனாதிபதி தங்கக்கிண்ண கரப்பந்தாட்ட இறுதி சுற்றுப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் அணி வெற்றி பெற்று சம்பியனாகியது.

கைதடி குமரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. 3 செற்களைக் கொண்ட இப்போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி 3 செற்களையும் வெற்றிகொண்டு சம்பியனாகி ஜனாதிபதி தங்கக்கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. (அ-3-29)

# கைவிரல் அடையாளம் பெறும் செயற்றிட்டம்

யாழ்.மாவட்டத்தில் ஊழியர் சேமலாப நிதியினை மீளளித்தல் செயற்பாட்டினை இலகு படுத்தவும் ஊழியர் சேமலாப நிதி மீளளிப்பில் ஏற்படக்கூடிய மோசடிகளை தவிர்ப்பதற்காகவும் ஊழியர் சேமலாப நிதி செலுத்தும் அங்கத்தவர்களின் கைவிரல் அடையாளம், தேசியஅடையாள அட்டையின் பிரதி மற்றும் புகைப்படம் எடுக்கும் செயற்திட்டம் என்பன நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

இச்செயற்திட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணிவரை பருத்தித்துறை, உடுப்பிட்டி, நிறுவன ஊழியர்களுக்கு கரவெட்டி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது கைவிரல் அடையாளத்தினை உறுதிப்படுத்த தேசியஅடையாள அட்டையினையும், முகாமையாளர் அல்லது தருநரால் ஊழியர்களின் பெயர், அடையாள அட்டை இலக்கம், ஊழியர் சேமலாப நிதி இலக்கம் என்பவற்றை உறுதிப்படுத்திய கடிதம் வழங்கப்பட வேண்டும்.

இச் செயற்றிட்டத்திற்கு பங்கெடுக்க வரும் ஊழியர்கள் சேமலாப நிதி அங்கத்தவர்களுக்கு விசேட விடுமுறை வழங்கப்பட வேண்டும் என்று யாழ். மாவட்ட தொழில் அலுவலக அலுவலர் யாமினி நாகராஜா அறிவித்துள்ளார். (அ)

# மின்தடைபற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களிலுள்ள மின்விநியோகத் தூண்கள் சிலவற்றை இடமாற்றம் செய்யவிருப்பதனால் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர்பாதுப்பு வலயப்பகுதி, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின் தடைப்படும்.

நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கோம்பயன்மணல் பிரதேசம், யாழ். பட்டணப்பகுதி, கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு, சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்படும் என யாழ். பிராந்திய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (அ)

# அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாண வலயத்தை சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான ஆண்டிறுதி மீளாய்வுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை பி.ப ஒரு மணிக்கு யாழ்.வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறும். பாடசாலை அதிபர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாண வலயக்கல்வி பணிப்பாளர் வி.செல்வராஜா கேட்டுள்ளார். (அ)

# அனுமதி அட்டைகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யா/விக்டோரியா கல்லூரியில் க.பொ.த சாதாரணப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படவுள்ளதாக யா/விக்டோரியா கல்லூரி அதிபர் வ.சிறீகாந்தன் அறிவித்துள்ளார். (அ-3-15)

# பாலத்தை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மருதங்கேணி பிரதான வீதி நாகர் கோவில் பகுதியில் உள்ள இரும்புப் பாலம் புனரமைக்கப்படாதுள்ளது. இதனால் அப்பகுதியூடாக ஆயிரக்கணக்காக பயணிக்கும் பொதுமக்கள் பெரும் அச்சத்திற்குள்ளாகியுள்ளனர்.

மேற்குறித்த பாலத்தின் இரண்டு பகுதியும் எவ்வித காவல் கட்டுக்களும் இல்லாது தரை நிலமாக உள்ளது.

எனவே உரிய தரப்பினர் இதனை கருத்திற்கொண்டு பாலத்தைப்புனரமைத்து தருமாறு மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-10)

## யாழ்.செய்திகள்

# 10 பவுண் தங்கநகைகளை திருடிய சந்தேகநபர் கைது

(யாழ்ப்பாணம்)

10 பவுண் தங்க நகைகளை திருடினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பெண் ஒருவரை கைது செய்துள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நல்லூர் சங்கிலியன் வீதியிலுள்ள வீடொன்றில் கடந்த முதலாம் திகதி காலையே இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற வீட்டில் வேலை செய்யும் குறித்த பெண் வீட்டில் யாரும் இல்லாதபோது அங்கிருந்த தங்க நகைகளை திருடியுள்ளார் என பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

விசாரணையின் பின் யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ-4)

# சமாதானத்திற்கான சமயங்களின் இலங்கை பேரவையின் மருத்துவமுகாம்

(யாழ்ப்பாணம்)

சமாதானத்திற்கான சமயங்களின் இலங்கை பேரவையின் யாழ். மாவட்டக்கிளையின் ஏற்பாட்டில் நேற்று நாவலடி உதயநிலா முன்பள்ளி மண்டபத்தில் இலவச மருத்துவ முகாம் ஒன்று நடைபெற்றுள்ளது.

இவ் இலவச மருத்துவ முகாமில் நாவலடி, பூம்புகார், கிழக்கு அரியாலை, அரியாலை ஆகிய பகுதி மக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றுள்ளனர்.

அதேவேளை மீளக்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள பகுதியில் இவ் இலவச மருத்துவ முகாமானது நடத்தப்பட்டுள்ளது. இவ் மருத்துவ முகாம் மூலம் அப்பகுதியில் உள்ள மக்களில் பெரும்பாலானோர் தமது தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளனர்.

இப்பேரவையினர் மீள்குடியேற்றம் செய்யப்பட்டமக்களின் வாழ்வாதாரம் தொடர்பாகவும் அத்துடன் விதவைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது குறித்தும் கேட்டறிந்தனர்.

இம்மருத்துவ முகாமில் யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியரும் சமாதானத்திற்கான சமயங்களின் இலங்கைப்பேரவையின் யாழ் மாவட்ட கிளையின் தலைவருமாகிய பொ.பாலசுந்தரம்பிள்ளை இப்பேரவையின் யாழ். மாவட்ட கிளையின் செயலாளர் நாச்சியார் செல்வநாயகம் மற்றும் மருத்துவர்கள் பலரும் கலந்து கொண்டனர். (அ-3-6)

# நாவன்மைப்போட்டியில் முதலாமிடம்



(யாழ்ப்பாணம்)

விவேகானந்தர் சபையினரால் அவரது நினைவாக தேசிய மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையில் நாவன்மைப் போட்டி நடைபெற்றது.

இப்போட்டியில் யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவி செல்வி ரஜினா-இரட்ணகுமார் முதலாமிடத்தினைப் பெற்றுக்கொண்டார். (அ)



யா/ கோண்டாவில் இந்து மகா வித்தியாலய பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி கிருபாகரி இளங்கோவன் மாணவன் ஒருவனுக்கு பரிசில் வழங்குவதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் நடத்தப்படும் வைத்தியசாலையும் அதன் பணிகளும்

**ஆச்சிரமத்தின் வைத்திய சேவை 10 வருடங்களை பூர்த்தி செய்துள்ளதையிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் சமய, சமூகப் பணிகளை ஆற்றி வருகின்ற ஒரு நிறுவனமாக அமைந்து விளங்குவது சந்நிதியான் ஆச்சிரமமாகும். அன்னதானப் பணியையே தனது ஆரம்ப சேவையாகவும் மூலாதாரப் பணியாகவும் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆச்சிரமமானது காலப்போக்கில் தனது சேவைகளை சமய,சமூக மயப்பட்ட பணிகளாக ஆற்றி வருகின்றது.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக ஆச்சிரமத்தின் பணிகள் யாவும் விஸ்தரிக்கப்பட்டு கால ஒழுங்கமைப்பு தவறாது நிறைவேற்றப்பட்டு வருவதால் சைவத் தமிழ் மக்களுடைய வாழ்வியலுடன் மிக நெருங்கிய தொடர்பாடல்களைக் கொண்டதாகவும் இந்த ஆச்சிரமம் இனங்காணப்படுகின்றது.

செல்வச் சந்நிதிப் பெருமானுடைய அடியார்களுக்கு அவனருளாலே அன்னமளித்து வந்த சந்நிதியான் ஆச்சிரமம்... அந்த வேலவனுடைய நித்திய கடாட்சம் பெற்ற ஒரு சேவை நிலையமாக உருப்பெற்றதன் காரணமாக, சந்நிதிப் பெருமானை நாடி வந்து அவனடியே சரணாகதி என்றவர்க்கும், தினம்தினம் ஆலயத்திற்கு வந்து செல்லும் அடியவர்களுக்கும் ஆச்சிரமம் தன்னாலியன்ற பணிகளை ஆற்றி வருகின்றது. அன்னதானமளித்தல் என்ற நித்திய பணியோடு, தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கான சத்துணவு வழங்குதல், அம்முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வேதனம் வழங்குதல், பாடசாலை மாணவர்களுக்கான பலநோக்கு உதவிகளையும் வழங்குதல், குறைவருமானமுள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகளை வழங்குதல், வறிய குடும்பத்தினருக்கான மாதாந்த, வாராந்த உதவிகள், இடம் பெயர்ந்தோருக்கான நிவாரணங்களை வழங்குதல் போன்ற பல்வேறு சமுதாயப் பணிகளும் ஆச்சிரமத்தின் நிகழ்வு நிரலில் இடம்பெற்று வருகின்றன.

இது தவிர ஆன்மீகப் பணிகளின் வரிசையிலே வாராந்த ஆன்மீக நிகழ்வுகள், குருபூசைகள் சமய அறிவுப் போட்டிகள் என்பவற்றை நடத்தி வருவதோடு சைவத் தமிழ் மக்களிடையே நீக்கமற்ற ஆன்மீக சாசனமாக விளங்கும் ஞானச்சுடர் என்ற சஞ்சிகையையும் மாதந்தோறும் வெளியிட்டு வருகின்றது.

இவ்வாறான பல்துறை சார்ந்த பணிகளினது வரிசையிலே ஆச்சிரமத்தின் மற்றுமொரு முயற்சியாக விளங்குவதே வைத்திய சேவையாகும். எம்பெருமானாம் சந்நிதி வேலவனுடைய திருவடியே தஞ்சமென்று சரணடைந்த அடியார்களின் சுகநல்னை அடிப்படையாக வைத்து ஆரம்பிக்கப்பட்ட இந்த வைத்திய சேவையானது இன்று தொண்டைமானாறு மக்களுக்கு மட்டுமன்றி அயற் கிராமத்தவர்களுக்கும் பயன்பாடுடைய ஒரு சேவையாக மாறிவிட்டது.

சந்நிதியான் ஆச்சிரமத்தின் எல்லைக்குள்ளேயே 14.10.2001 இல் சாதாரணமாக ஆரம்பிக்கப்பட்ட இப்பணியானது இன்று முன்னாள் இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரன் ஞாபகார்த்தமாக தனியாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் தொகுதியிலே தனது அளப்பரிய சேவையை வழங்கி வருகின்றது.

முற்றிலும் இலவசமாக ஆற்றப்பட்டு வரும் இந்த வைத்திய சேவையில் துறைசார் வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளும் மருத்துவ சிகிச்சைகளும் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டு வருகின்றன.

தீராத நோய் பிணி தீர்க்கும் எம்பெருமானுடைய திருவடியில் இவ்வாறானதொரு சேவை இடம்பெற்று வருவது அடியார் பெருமை பேசும் யாவர்க்கும் மகிழ்ச்சி தர வல்லதே என்பதுடன் ஆற்றங்கரை வேலவனை தீராப்பிணி தீர்க்கும் வைத்தியனாக உள்ளூர் உணர்ந்து ஈடேற்றம் கண்டவர்களின் வரலாறுகளையும் இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தமானதே.

இவ்விதமாக சந்நிதியான் ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்டு வரும் இச்சேவைகள் பணிகளுக்கான ஆதரவுகள், ஆதாரங்கள் யாவும் எந்த மூலத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றது என்பதுவும் இந்தப் பகுதியை வாசிக்கும் யாரிடமாவது ஒரு வினாவாக எழுமாயின்... இவை யாவற்றுக்கும் விடையாக அமைவது ஆற்றங்கரையோரத்தில் கோயில் கொண்டருளும் "வள்ளல் பிரான் சந்நிதி வேலவனுடைய அருளாட்சியே" ஆகும். இதனையே ஆச்சிரமத்தின் சுவாமிகளும் "எல்லாம் அவன் பார்த்துக் கொள்வான்" என்று கூறி வழமையான தனது பணிகளிலே ஈடுபடுகின்றார்.

"அவனின்றி ஓர் அணுவு மசையாது"

ஆசிரியர் துரை.கணேசமூர்த்தி
யாழ்ப்பாணக் கல்லூரி

# மல்லாவி நகர் பகுதியில் பேருந்து தரிப்பிடமின்மை

## மக்கள் அவலம்

மல்லாவி நகரப் பகுதியில் பேருந்து தரிப்பிடம் இன்மையால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மல்லாவி நகரப் பகுதியிலிருந்து தனியார் பேருந்து தரிப்பிடமானது துணுக்காயில் புதிதாக அமைக்கப்பட்ட பேருந்து சாலைக்கு மாற்றப்பட்டதன் காரணமாக பயணிகளுக்கு பேருந்து தரிப்பிடம் இன்றி உள்ளது.

கொட்டும் மழையிலும் வெயிலிலும் மக்கள் மரங்களின் கீழேயும் கடைகளிலும் காத்திருக்க வேண்டிய நிலையுள்ளது.

அத்துடன் இப்பகுதியில் மலசல கூடங்கள் வசதியின்மை காரணமாக மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கருத்திற் கொண்டு பேருந்து தரிப்பிடத்தை மல்லாவி நகரப் பகுதியிலும் பழைய பேருந்து தரிப்பிடம் இருந்த இடத்தி லுமாக 2 பேருந்து தரிப்பிடங்களை அமைத்துத் தருமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-15)

# எகிப்தின் வரலாற்றில் அதிகபட்சமாக 62 வீதமான வாக்குப் பதிவுகள்

(கெய்ரோ)

எகிப்தில் சமீபத்தில் நடந்து முடிந்த பாராளுமன்ற முதற்கட்ட தேர்தலில் 62 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக அந்நாட்டு தேர்தல் குழு அறிவித்துள்ளது.

எகிப்தில் ஜனாதிபதியாக இருந்த ஹோஸ்னி முபாரக்கின் பதவி விலகலுக்குப் பின் எட்டு மாதங்களுக்குப் பின் கடந்த நவம்பர் 28, 29 ஆம் திகதிகளில் பாராளுமன்றிற்கான முதற்கட்ட தேர்தல் நடந்தது. மொத்தம் உள்ள 27 மாகாணங்களில் ஒன்பது மாகாணங்களில் இத்தேர்தல் நடந்தது. இதில் 70 சதவீதம் வரை வாக்குகள் பதிவாகலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த முதலாம் திகதி தேர்தல் குழு வெளியிட்ட அறிக்கையில் மொத்தம் 62 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாகவும் இது எகிப்தின் வரலாற்றில் மிக அதிகபட்சம் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அடுத்தாண்டு மார்ச் மாதம் வரையில் மூன்று கட்டங்களாக இத்தேர்தல் நடக்க உள்ளது. இதற்கிடையில் நேற்று முன்தினம் தேர்தல் முடிவுகள் பற்றிய தகவல்கள் சில கசிந்துள்ளன. அவற்றின்படி முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் அரசியல் பிரிவான விடுதலை மற்றும் நீதிக்கட்சி 45 சதவீதம் வரை வாக்குகளைப் பெற்று வெற்றி பெறும் எனத் தெரிகிறது. (அ-2)

# ரஷ்ய தேர்தலின் முதலாம் கட்ட வாக்குப்பதிவு கொழும்பிலும்

(கொழும்பு)

ரஷ்ய பாராளுமன்றத் தேர்தலின் முதலாம் கட்ட வாக்குப் பதிவு நேற்று ஆரம்பமானது.

ரஷ்யாவின் கிழக்குப் பிராந்தியத்திலுள்ள கம்ச் செட்டிகா மற்றும் ச்சூகோடிகா ஆகிய பிரதேசங்களுக்கான வாக்குப் பதிவு நேற்று தொடக்கம் இடம்பெற்று வருகின்றது.

ரஷ்யாவில் 96 ஆயிரம் வாக்களிப்பு நிலையங்களிலும் 140 நாடுகளில் அமைக்கப்பட்ட 369 வாக்களிப்பு நிலையங்களிலும் தேர்தல் நடைபெறுகின்றது.

இதற்கமைய இலங்கைக்கான வாக்களிப்பு நிலையம் கொழும்பிலுள்ள ரஷ்ய தூதரகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள ரஷ்ய வாக்காளர்களுக்கு வாக்குகளைப் பதிவு செய்வதற்காக நேற்று நண்பகல் 12 மணியிலிருந்து கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

ரஷ்ய பாராளுமன்றத்திலுள்ள 450 ஆசனங்களுக்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் வகையில் நடைபெறும் இந்தத் தேர்தலில் ஏழு கட்சிகள் போட்டியிடுகின்றன.

இந்தத் தேர்தலில் 11 மில்லியன் பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதுடன் அந்த எண்ணிக்கை ரஷ்ய சனத்தொகையில் 55 வீதமாகும்.

இதேவேளை, பகிடிவதையில் ஈடுபடும் சிரேஷ்ட மாணவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உபவேந்தர்களுக்கான அடுத்த மாநாட்டை ருஹுணு பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# எரிபொருள் கசிவினால் ரயில் தடம்புரண்டது

கலபொட மற்றும் வட்டவளை புகையிரத நிலையங்களுக்கு இடையே எரிபொருள் ஏற்றிச் சென்ற புகையிரதத்தில் ஏற்பட்ட கசிவே நேற்று அதிகாலை புகையிரதம் தடம்புரண்டமைக்கான காரணமென ரயில்வே திணைக்களம் குறிப்பிடுகின்றது.

இதனால் மலையக மார்க்கத்திலான புகையிரதப் போக்குவரத்து நாவலப்பிட்டி வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக புகையிரத போக்குவரத்து அத்தியட்சகர் எல்.ஏ. ஆர். ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.


தடம்புரண்ட ரயிலை மீள தண்டவாளத்தில் நிறுத்தும் பணிகளில் விசேட குழுவொன்றை ஈடுபடுத்தியுள்ளதாக அவர் கூறினார்.

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கிச் செல்கின்ற பயணிகளின் வசதிகருதி ஹட்டன் புகையிரத நிலையத்தில் இருந்து நாவ லப்பிட்டி புகையிரத நிலையம் வரையிலும் கொழும்பிலிருந்து பதுளை செல்கின்ற பயணிகளுக்காக நாவலப்பிட்டியில் இருந்து ஹட்டன் வரையிலும் பஸ் சேவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் குறிப்பிட்டார்.

புகையிரதத்தில் எரிபொருள் கசிவு ஏற்படுவதைத் தற்போது கட்டுப்படுத்தியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# மத்திய அரசு முடிவால் இலட்சக்கணக்கான வர்த்தகர்கள் வேலை இழப்பார்கள்

## அத்வானி தெரிவிப்பு



(டில்லி)

மத்திய அரசின் முடிவால் இலட்சக்கணக்கான வர்த்தகர்கள் வேலை இழப்பார்கள் என்றும் அதை பா.ஜனதா ஒருபோதும் அனுமதிக்காது என்றும் பா.ஜனதா மூத்த தலைவர் அத்வானி தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீட்டுக்கு மத்திய அரசு அனுமதி அளிக்க தீர்மானித்துள்ளது.

இதனால் நாடு முழுவதும் உள்ள இலட்சக்கணக்கான சில்லறை வியாபாரிகள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள் என்பதால் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

பா.ஜனதா, இடதுசாரி உள்ளிட்ட அனைத்து எதிர்க்கட்சிகளும் மத்திய அரசின் முடிவை திரும்பப்பெற வலியுறுத்தி வருகின்றன.

ஆனால், அதை மத்திய அரசு ஏற்கவில்லை. அந்த முடிவை வாபஸ் பெற முடியாது என திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

இந்த நிலையில் ஆங்கில நாளிதழ் சார்பாக டில்லியில் நடந்த தலைவர்கள் மாநாட்டில் பா.ஜனதா மூத்த தலைவர் அத்வானி கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் உரையாற்றுகையில்,

பல்வேறு வகையான பொருட்களின் சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிப்பதை பா.ஜனதா கட்சி எப்போதுமே எதிர்த்து வருகின்றது.

வர்த்தக சமுதாயமே பா.ஜனதா கட்சியின் அடித்தளமாகும். சமூகத்தில் பெருமளவில் உள்ள ஒரு பிரிவினர் பாதிக்கப்படுவதை பா.ஜனதா ஒருபோதும் அனுமதிக்காது.

பலதரப்பட்ட மக்களை பாதிக்கும் என தெரிந்தும் இதுபோன்ற முடிவை மத்திய அரசு ஏன் எடுத்தது? அதற்கான காரணம் எனக்கு தெரியவில்லை. இந்த முடிவால் விவசாயிகளும் நுகர்வோரும் பயன் அடைவார்கள் என்பதையே அரசின் அதிகாரபூர்வ செய்தித் தொடர்பாளர்கள் கூறி வருகின்றனர்.

சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீட்டை அனுமதித்தால் பணவீக்கம், விலைவாசி உயர்வு, வேலை இல்லா திண்டாட்டம் போன்ற அனைத்து பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு விடும் என்பது போன்ற தோற்றத்தை உருவாக்கி மக்களை மத்திய அரசு முட்டாளாக்கப் பார்க்கின்றது. இந்த முடிவால் இலட்சக்கணக்கான வேலைவாய்ப்பு உருவாகும் என கூறுகின்றது. அதுபோன்று நடக்காது.

மூன்று ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவுடன் அணுசக்தி ஒப்பந்தம் போடும்போதும் இதேபோன்று கூறப்பட்டது. இந்தியாவின் மின்சார பற்றாக்குறை தீர்ந்து விடும் என அரசு சார்பிலான தலைவர்கள் பாராளுமன்றத்தில் கூறினார்கள்.

அதுபற்றி என்னால் எதுவும் கூற முடியாது. அதுபோல 2014 ஆம் ஆண்டுக்கு முன்பே பாராளுமன்றத்துக்கு தேர்தல் வரக் கூடும். விபத்துக்களை யாராலும் முன்கூட்டியே கணிக்க முடியாது.

ஸ்பெக்ட்ரம், கறுப்பு பணம் என ஊழல்களின் மொத்த உருவமாக மத்திய அரசு இருக்கின்றது. 2012 ஆம் ஆண்டு பொறுப்பான ஆண்டாக அமையட்டும் என கூறினார். (அ-2)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு ஆரியகுளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அனைத்துத் தொண்டராசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (அ)

# பொலிஸ் திணைக்களங்கள் மீது அரசியல்வாதிகள் கடும் அழுத்தம்

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



பொலிஸ் திணைக்களத்தின் மீது அரசியல்வாதிகள் கடும் அழுத்தங்களை பிரயோகித்து வருவதாக பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன் அடிப்படையில் கடந்த மூன்று மாத காலப்பகுதியில் ஆயிரத்து500 பொலிஸ் உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களினாலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும்அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் தாம் ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகளின் கோரிக்கைப்படி ஆயிரத்து 500 பொலிஸ் உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்திருந்தால் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு இன்னும் ஆயிரத்து 500 பொலிஸ் உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்திருக்க வேண்டும்.

அரசியல்வாதிகளின் தேவைகளுக்கு ஏற்றவகையில் பொலிஸ் திணைக்களத்தில் மாற்றங்களை மேற்கொண்டால் நிர்வாக நடவடிக்கைகள் பாதிக்கப்படும் என்று பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (அ-2)

# மேம்பாலத்தின் உடைவுகளை புனர்நிர்மாணம் செய்யுங்கள்

## ரவி கருணாநாயக்க எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)



இலங்கையின் புறநகர் பகுதியான தெஹிவளையில் அமைக்கப்பட்டுள்ள மேம்பாலத்தில் உடைவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் பாலம் புனரமைப்பு செய்யப்படாவிட்டால் எதிர்காலத்தில் எந்த வாகனமும் அதில் செல்ல முடியாத நிலை ஏற்படும் எனவும் ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் மேற்குறிப்பிட்டவாறு தெரிவித்துள்ளார். இரண்டு வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட இந்த பாலத்துக்கு 20 வருட கால உத்தரவாதம் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தது என வும் இந்த நிலையில் குறித்த பாலத்தில் உடைவுகள் ஏற்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டி யுள்ளார்.

சுமார் 5.2 பில்லியன் ரூபாய்கள் செலவிடப்பட்ட இந்த பாலம் உரிய வகையில் நிர்மாணிக்கப்படவில்லை என்றும் இதேவேளை களனி மேம்பாலத்தை தவிர ஏனைய மேம்பாலங்கள் இதே நிலைமையை கொண்டுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

# இந்திய பாடகர் சித்தார்த்திற்கு கார்டியன் விருது கிடைத்தது



அமெரிக்க வாழ் இந்திய டாக்டர் சித்தார்த்த முகர்ஜி என்பவர் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் மருந்து துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிகிறார்.

இவர் புற்றுநோய் குறித்த தி எம்பரர் ஆப் ஆல் மால்டீஸ் என்ற புத்தகம் எழுதியுள்ளார். அந்தப் புத்தகத்துக்கு மருத்துவ துறையில் உயரிய கார்டியன் விருது கிடைத்துள்ளது.

அத்துடன் ரூ. 75 இலட்சம் பரிசு தொகையும் வழங்கப்படுகின்றது. இது அவர் எழுதிய முதல் புத்தகம் ஆகும். டாக்டர் முகர்ஜி எழுதிய இந்த புத்தகத்துடன் அமி வால்ட்மேன் உள்ளிட்ட 4 பேர் எழுதிய புத்தகங்களும் போட்டியில் இடம்பெற்றன. அவற்றையெல்லாம் முந்தி டாக்டர் முகர்ஜியின் புற்றுநோய் குறித்த புத்தகம் விருதை வென்றது.

இந்தப் புத்தகத்தில் புற்றுநோய் என்றால் என்ன? அது எப்படி எப்போது உருவானது என்பன போன்ற முழு ஆராய்ச்சி கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இது அடுத்து வர இருக்கின்ற இளைய தலை முறையினரின் ஆராய்ச்சிக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என டாக்டர் முகர்ஜி தெரிவித்துள்ளார். ஏற்கனவே இவர் புலித்ஷர் விருதும் பெற்றுள்ளார். (அ-2)







வடமாகாண முன்பள்ளிகளின் கண்காட்சியும் கலாசார நிகழ்வும் அண்மையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் ஆளுநரின் பிரதிச் செயலாளர் ஆர். சிவசுவாமி ஆகியோர் இணைந்து நாடாவெட்டி கண்காட்சியினை திறந்து வைப்பதனையும் முன்பள்ளி சிறார்களின் கலை நிகழ்வுகளையும் ஆளுநர் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதனையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார்)

# நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பதில்லை

## எதிர்க்கட்சிகள் தீர்மானம்

(கொழும்பு)

தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் அரசாங்கத்தினால் அமைக்கப்படும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கப் போவதில்லை என்று எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன. நாட்டின் பிரதான எதிர்க்கட்சிகள் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஆகிய கட்சிகள் இந்த அறிவிப்பை விடுத்துள்ளன.

அரசியல் தீர்வுத் திட்டமொன்றை ஏற்படுத்துவது குறித்து நீண்டகாலமாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே பல்வேறு பரிந்துரைகளும் செய்யப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன. இவ்வாறான ஓர் நிலையில் மீண்டும் தெரிவுக்குழுக்களை அமைப்பது அவசியமற்றது என்று இந்தக் கட்சிகள் அறிவித்துள்ளன.

இந்த நிலையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு காலத்தை கடத்தும் முயற்சியாகவே கருதப்பட வேண்டுமென எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன.

இதேவேளை, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கப் போவதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. (அ-2)

# எலிக்காய்ச்சல் நோய் 6,700 பேரை பீடித்தது

## தொற்றுநோய் தடுப்புப்பிரிவு தெரிவிப்பு

(கொழும்பு)

இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் இது வரையிலான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 6 ஆயிரத்து 700 பேர் எலிக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளனர். 78 பேர் பலியாகியும் உள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் பபா பலிகவதன தெரிவித்துள்ளார்.

எலிக்காய்ச்சல் பெரும்பாலும் வயல்களில் வேலை செய்யும் விவசாயிகளையே தாக்குகின்றது. எனவே, வயல்களில் வேலை செய்வதற்கு முன்னர் எலிக்காய்ச்சலைத் தடுப்பதற்காக பாவிக்கப்படும் டெக்சி சைட்லி என்ற மாத்திரைகளைப் பயன்படுத்துமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

குருநாகல், கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களிலேயே எலிக்காய்ச்சல் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நான்கு மாவட்டங்களில் மாத்திரம் ஜனவரி முதல் நேற்று வரை 2 ஆயிரத்து 745 பேர் எலிக்காய்ச்சலுக்கு உள்ளாகியுள்ளதுடன் 39 பேர் பலியாகியும் உள்ளனர். (அ-2)

# அதிவேக நெடுஞ்சாலை திறக்கப்பட்டு 7 நாட்களுக்குள் எட்டு விபத்து சம்பவங்கள்

## மூவருக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித்ரோஹண தெரிவித்துள்ளார்.

காலியிலிருந்து கொழும்புக்கு வந்த கார் ஒன்றே 30 ஆவது கிலோ மீற்றர் கம்பமொன்றில் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது என்றும் காயமடைந்தவர்கள் இருவரும் ஆண்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தெற்கு அதிவேக வீதி ஒழுங்குகளை மீறிய மூவருக்கெதிராக நேற்று முன்தினம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியால் கடந்த மாதம் 27 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட அதிவேக வீதியில் ஏழு நாட்களுக்குள் எட்டு விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

மேற்படி வீதியில் இதுவரை 30 நாய்கள் விபத்துக்குள்ளாகியுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (அ-2)

# கிராம அலுவலர்களுக்கான தடைதாண்டல் பரீட்சை

(கொழும்பு)

கிராம அலுவலர் சேவையின் I ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட, சேர்த்துக்கொள்ளும் நடைமுறையின் ஏற்பாடுகளுக்கேற்ப வினைத்திறமை தடைகாண் பரீட்சை ஒன்று பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2012 ஆம் ஆண்டின் பங்குனி மாதத்தில் நடத்தப்படவுள்ளது.

2010.09.29 ஆம் திகதி தொடக்கம் செயற்படும் கிராம அலுவலர்களுக்கான சேர்த்துக் கொள்ளும் நடைமுறைக்கேற்ப கிராம சேவையாளர் சேவையின் I ஆம் தரத்திற்கு உள்ளீர்க்கப்பட்ட அலுவலர்கள் இப்பரீட்சைக்கு தோற்றமுடியும்.

இதேபோன்றே கிராம அலுவலர் சேவையின் II ஆம் வகுப்பின் அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையும் நடைபெறவுள்ளது.

2010.09.29 ஆம் திகதி தொடக்கம் அமுலில் உள்ள கிராம அலுவலர் ஆட்சேர்ப்பு நடைமுறையின்படி கிராம அலுவலர் சேவையின் II ஆம் வகுப்பிற்கு உள்ளீர்க்கப்பட்ட அலுவலர்கள் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவங்களை விண்ணப்பதாரர்கள் தமது கடமைப் பிரதேசத்திற்கு பொறுப்பான பிரதேச செயலாளர் ஊடாக எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கு அமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக்கிளை, பெலவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். பரீட்சை நடைபெறும் நகரங்கள் பரீட்சை நடைமுறைகள் வினாப்பத்திர விபரங்கள் மற்றும் ஏனைய விபரங்களை வலம்புரி அலுவலகத்திலோ அல்லது 02.12.2011 ஆம் திகதி வெளியாகிய வர்த்தமானிப் பத்திரிகையிலோ பார்வையிட முடியும். (அ)

# மொரிஷியஸ் தீவிற்கு நாடு கடத்தப்பட்ட 17 குடும்பங்களின் தகவல் திரட்ட முடிவு

## கலாசார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

ஆங்கிலேய காலனித்துவ ஆட்சியின் போது மொரிஷியஸ் தீவிற்கு நாடு கடத்தப்பட்ட 17 குடும்பங்கள் தொடர்பான தகவல்களை அதிவிசேட வர்த்தமானி மூலம் வெளியிட கலாசார அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுதந்திரப் போராட்டத்திற்காக இந்தக் குடும்பங்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளதாக அமைச்சர் ரீ.பி.ஏக்கநாயக்க கூறினார்.

மேற்படி குடும்பங்களுக்காக மொரிஷியஸ் தீவில் நினைவுச் சின்னம் ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நாடு கடத்தப்பட்ட இலங்கையர்களின் தனித்துவத்தைப் பிரதிபலிக்கும் வகையில் நினைவுச் சின்னத்திற்கு கௌரவ அஞ்சலி செலுத்துவதற்காக மொரிஷியஸ் தீவின் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் எண்ணியுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்பொருட்டு ஜனாதிபதியின் பங்களிப்புடன் திட்டமொன்றை முன்னெடுக்க எண்ணியுள்ளதுடன் மொரிஷியஸ் தீவிற்கு நாடு கடத்தப்பட்ட இலங்கையர்கள் குறித்த தகவல்களை அடுத்த வருடம் ஜனவரி மாதம் அதிவிசேட வர்த்தமானி மூலம் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

இந்தக் குடும்பங்களின் மூன்றாம், நான்காம் மற்றும் ஐந்தாம் தலைமுறையினர் அந்த தீவில் வாழ்ந்து வருவதாக அமைச்சர் தெரிவித்தார். (அ-2)

# இரட்டை குடியுரிமை வழங்கப்படவுள்ளது

## குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இரட்டை குடியுரிமை 500 இற்கும் மேற்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்படவுள்ளதாக குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

கடந்த ஓராண்டு காலமாக குறித்த விண்ணப்பங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இரட்டைக் குடியுரிமை தொடர்பில் அரசாங்கம் பல புதிய விதிகளை அறிவித்ததன் பின்னர் முதல் தடவையாக இரட்டைக் குடியுரிமை வழங்கப்படவுள்ளது.

விண்ணப்பதாரிகளில் இலங்கையர்களும் வெளிநாட்டுப் பிரஜைகளும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. சுமார் ஆயிரம் விண்ணப்பதாரிகளிலிருந்து இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இரட்டைக் குடியுரிமை வழங்குதல் தொடர்பான புதிய சட்ட யோசனைத்திட்டம் சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக் கூடியோருக்கு குடியுரிமை வழங்குவதனை தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

வெளிநாடுகளில் பிரஜாவுரிமை பெற்றுக் கொண்ட பலர் யுத்தத்தின் பின்னர் இலங்கையில் குடியுரிமை பெற்றுக்கொள்ள விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# அருங்காட்சியகங்களுக்கு பாதுகாப்பு வழங்க முடிவு

## மரபுரிமைகள் அமைச்சு

(கொழும்பு)

அருங்காட்சியகங்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்குவது குறித்து தேசிய மரபுரிமைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

கடந்த காலத்தில் பெரும்பாலான அருங்காட்சியங்களில் தொல்பொருள் பெறுமதியுடைய பொருட்கள் திருடப்பட்டமை மற்றும் இடம்மாறியமை தொடர்பான சம்பவங்கள் பதிவானதாக அமைச்சின் செயலாளர் காந்தி விஜேதுங்க கூறினார்.

அருங்காட்சியகங்களில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் அவர்களிடம் துப்பாக்கி இல்லாததால் பொருட்களை திருடுகின்றவர்களை எதிர்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக பாதுகாப்புச் செயலாளருக்குத் தெளிவுபடுத்தியதை அடுத்து பொலிஸ்மா அதிபர் ஊடாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய மரபுரிமைகள் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# திரையரங்குகளை புதுப்பிக்க திட்டம்

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள திரையரங்குகளை புதுப்பிப்பதற்கும் புதிய திரையரங்குகளை நிர்மாணிப்பதற்கும் தேசிய திரைப்படக்கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

அதற்கான பணிகளை கூட்டுத்தாபனம் தற்போது முன்னெடுத்துள்ளதாக தேசிய திரைப்பட கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் இணைந்து செயற்பட விரும்புபவர்கள் கொழும்பு -07, இல.303 பௌத்தலோக மாவத்தையிலுள்ள தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத்தின் வெளியீட்டு முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அவரது 011-2593431 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தத் திட்டத்தில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் தமது எழுத்து மூல விண்ணப்பங்களுடன் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறும் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் கேட்டுக்கொண்டுள்ளது. (அ-2)






ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ். பிராந்தியக் காரியாலயத்தின் ஏற்பாட்டில் அந்நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நிறுவனத்தின் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் மனிதவள முகாமையாளர் சமிணா அபேயவர்த்தன உரையாற்றுவதையும் ரெலிகொம் நிறுவனத்தின் வடக்கு, கிழக்கிற்கான பொது முகாமையாளர் அ.கிருபாகரன் மாணவி ஒருவருக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:– அலுவலகச் செய்தியாளர்)

### ஜனாதிபதித்தேர்தல் காலத்தில்

# சரத் பொன்சேகா தொடர்பான கருத்தையும் அமெ.நம்பவில்லை

## விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான மங்கள சமரவீரவின் கருத்துக்களை அமெரிக்கா முழுமையாக நம்பவில்லை என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

குறிப்பாக ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற காலத்தில் முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனாதிபதி வேட்பாளருமான சரத் பொன்சேகா தொடர்பில் மங்கள வெளியிட்ட க்ருத்துக்கள் குறித்து அமெரிக்க தூதரகம் இவ்வாறான நிலைப்பாட்டை கொண்டிருந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சரத் பொன்சேகா தொடர்பில் மங்கள சமரவீர வெளியிட்ட சில கருத்துக்கள் மிகைப் படுத்தப்பட்டவை என்றே கருதுகின்றோம் என அமெரிக்க தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்சவின் எண்ணம் மற்றும் தந்திரோபாயங்கள் பற்றி மிகவும் துல்லியமான அறிவினை மங்கள கொண்டிருப்பதாக புட்டினீஸ் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவிற்கு மங்கள ஆதரவளிப்பதனை ஆபத்தாகவே ஆளும் கட்சி கருதுகின்றது என'அவர் குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்ச தமிழ் மக்களின் ஆதரவினை இழந்து வருவதாகவும் சரத் பொன்சேகாவிற்கு சிறுபான்மை மக்களிடையே செல்வாக்கு அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய நல்லிணக்கம் ஏற்படுத்தல், குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் போன்றன தொடர்பிலும் சரத் பொன்சேகா தரப்பினர் உறுதி மொழிகளை வழங்கியதாக குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# வாகரை பிரதேசத்தில் ஆயுதங்கள் மீட்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கதிரவெளி பிரதேசத்தில் ஒரு தொகை ஆயுதங்களை இராணுவத்தினர் மீட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை சிகை அலங்கார நிலையத்திற்கு அருகாமையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே இந்த் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்படி ரி-56 ரக துப்பாக்கி -01, கைக் குண்டுகள் -02, ரவைக்கூடுகள்-04, துப்பாக்கி ரவைகள்-120 போன்றனவே இவ்வாறு மீட்கப்பட்டதாக தெரிவித்தனர்.

பொது மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த இந்த பிரதேசத்தில் அவர்களால் இவை இப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.(அ-2)

# ஐ.தே.கட்சிக்குள் முறுகல்நிலை; கலந்தாலோசனைக்கு ஏற்பாடு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் தொடர்பில் மீண்டும் முறுகல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச மீண்டும் ஒருமுறை மற்றும் ஒரு பிரதித்தலைவரான கரு ஜயசூரியவை கட்சியின் தலைமைக்கு போட்டியிடுமாறு கோரியுள்ளமையை அடுத்தே இந்தநிலை ஏற்பட்டுள்ளது.

கட்சியின் பிரச்சினைகளை களைவதற்காக இந்த முனைப்பு அவசியமானது என்று சஜித் பிரேமதாச நேற்று முன்தினம் ஜயசூரியவுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஏற்கனவே இவ்வாறான ஒரு அழைப்புக் காரணமாக கட்சிக்குள் பாரிய பிரச்சினை ஏற்பட்டதுடன் கரு ஜயசூரியவுக்கும் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான உறவிலும் விரிசல் ஏற்பட்டது.

இதன் காரணமாக கடந்த ஒரு மாத காலத்துக்கு முன்னர் இங்கிலாந்து சென்ற போது ரணில் விக்கிரமசிங்க பதில் தலைவர் பதவியை எவருக்கும் வழங்காமல் பதில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்கவுக்கு வழங்கிச் சென்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கட்சித் தலைவர் பதவிக்காக தாம் போட்டியிடப்போவதாக ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை கட்சியின் முக்கியஸ்தர்களுடன் கலந்தாலோசனை ஒன்றும் நடத்தப்படவுள்ளது. (அ-2)

# சரத் பொன்சேகாவின் விடயத்தை ஜனாதிபதியிடம் முறையிடுங்கள்

## அமெ.க்கு முறையிட வேண்டாம் என்கிறார் பந்துல

(கொழும்பு)

சிறையில் உள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் குடும்பத்தினர் வெள்ளை மாளிகையிடம் விண்ணப்பிக்காமல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடம் விண்ணப்பிக்க வேண்டும் என்று ஜனாதிபதியின் பேச்சாளர் பந்துல ஜெயசேகர தஹிந்து செய்தித் தாளுக்கு தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவின் மனைவி அனோமாவும் அவருடைய மகள்மாரும் சரத் பொன்சேகா தொடர்பில் அமெரிக்காவிடம் மனு ஒன்றை கையளிக்க தயாராக உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன என பந்துல ஜெயசேகர குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் நியூயோர்க்கில் உள்ள அமெரிக்க ஜனாதிபதியின் வாசஸ்தலத்துக்கு செல்லாமல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடம் நேரடியாக தமது விண்ணப்பத்தை மேற்கொள்ளலாம் என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஜனாதிபதி நிச்சயமாக அவர்களின் கோரிக்கையை கருணையுடன் பரிசீலிப்பார் என்று குறிப்பிட்டுள்ள பந்துல, கொழும்பு 3 இல் இலங்கை ஜனாதிபதியின் வாசஸ்தலம் அமைந்துள்ளது எனவும் அமெரிக்க ஜனாதிபதியின் வாசஸ்தலம் பல மைல்களுக்கு அப்பால் அமைந்துள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி இன்று உலகத் தலைவர் கள் மத்தியில், மிகவும் எளிமையானவராக திகழ்கின்றார். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வெளிநாடுகளுக்கு ஓடிக் கொண்டிருப்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சரத் பொன்சேகாவின் நெருங்கிய உறவினர் இறந்த போது அதில் பங்கேற்பதற்கு சரத் பொன்சேகாவுக்கு மனிதாபிமான அடிப்படையில் ஜனாதிபதி அனுமதியளித்தார் எனவும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இலங்கை மாகாணசபைகளுக்கு அதிகாரப் பகிர்வு அவசியமானது

## சுமந்திரன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் மாகாண சபைகளுக்கு மீளப் பெற்றுக்கொள்ள முடியாத வகையிலான அதிகாரப் பகிர்வு அவசியமானது என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மங்கள முனசிங்க ஆணைக்குழு அறிக்கை, பண்டாரநாயக்க ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் முன்வைக்கப்பட்ட யோசனை, அனைத்து கட்சிப் பேரவை பரிந்துரைகள் போன்றவற்றின் அடிப்படையில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினால் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுகின்றது.

இந்நிலையில் அரசாங்கம் விட்டுக்கொடுப்புடன் செயற்படும் என்று தமது தரப்பு எதிர்பார்ப்பதாக சுமந்திரன் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம் அரசாங்கத்திற்கும் கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சுவார்த்தை எதிர்காலத்தில் நிச்சயமற்ற நிலையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஆணைக்குழுவின் அறிக்கையை சமர்ப்பித்து ஜனாதிபதி விசேட உரை ஆற்றுவார்

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசேட உரை ஒன்றை நிகழ்த்துவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட உரைக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் இதில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் சர்வதேசத்தின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஒரு நாளில் சமர்ப்பிக்கும் ஜனாதிபதி விசேட உரையை வேறு ஒரு நாளில் மேற்கொள்வார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது பெரும்பாலும் வரவு செலவுத்திட்ட விவாதம் முடிவடையும் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதியின் உரையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அதனை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது, போர்க்குற்ற சாட்சியங்களை குற்றப்புலனாய்வுத் துறையினரிடம் கையளிப்பது, அரசாங்கத்தினால் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் என்பன அடங்கியிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)


# சாதாரணத்திலிருந்து மிக சாதாரணத்திற்கு



ஆன்மீகம் 10

## கனவுச் சிறைக்குள்...

கேள்வி:சற்குரு,உணர்ச்சியின் உச்சியில் நான் இருக்கும் போது சரணாகதி என்பது அருகாமையில் இருப்பது போல் தெரிகிறது. வேறு பலவிடயங்கள் என்னைத் தாக்கும், அது என்னிடமிருந்து மறைந்து விடுகிறது. விழிப்புணர்வுடன் நான் சரணாகதியை பயிற்சி செய்ய முடியுமா?.



சற்குரு: சரணடைய முயற்சிக்காதீர்கள், ஏனெனின் எதை நீங்கள் சரணடைய வைப்பீர்கள்? நீங்கள் குனிவது சரணாகதி அல்ல, அது ஒரு நல்ல உடற்பயிற்சி. நான் சரணடைந்து விட்டேன் என்று அறிவிப்பு வெளியிடுவதே ஒரு கொடுமையான அகங்காரச்செயல். எனவே, எப்படி சரணடைவீர்கள்? எதை சரணடையச் செய்வீர்கள்? முதலில் சரணடையச் செய்வதற்கு உங்களிடம் என்ன இருக்கிறது? ஒரு குறிப்பிட்ட உணர்தலிலிருந்து தான் சரணாகதி பிறக்கிறது. உங்கள் வாழ்வை வளமாக்க சுயமதிப்பீடு, சுயநம்பிக்கை, சுயபெருமிதம் போன்றவை அவசியம் என்று நீங்கள் தொடர்ந்து பயிற்று விக்கப்படிருக்கிறீர்கள். சரணாகதி என்பது இவைகள் அனைத்திற்கும் எதிரானது. நீங்கள் மதிப்பு அற்றுப் போகும் போது தான் சரணாகதி அடையமுடியும். சுயமதிப்பீடு, சுயபெருமிதம் சுயநம்பிக்கை, ஆகியவற்றுடன் இருக்கும் போது எப்படி சரணடைவீர்கள்? நம்பிக்கை இல்லாமல் உங்களால் வாழ முடியுமா? சுயபெருமிதம், சுயமதிப்பீடு, இல்லாமல் உங்களால் வாழ முடியுமா? தற்போதைக்கு முடியாது. எனக்கு சுயமதிப்பீடு அல்லது சுயபெருமிதம் போன்ற எண்ணங்கள் எதுவும் கிடையாது. எனவேதான் எந்த கணத்திலும் தேவைப்படின், வாழ்வை விடுவதற்கும் தயாராக இருக்கிறேன். ஏனெனில் இந்த வாழ்வு எதையும் மதிப்பானதாக நான் நினைக்கவில்லை. தனிப்பட்ட முறையில் இந்த வாழ்வை எதுவும் எனக்கு உபயோகமானதாக தெரியவில்லை. ஆனால், என்னைச்சுற்றி உள்ள பல உயிர்களுக்கு எனது வாழ்க்கை உபயோகமானதாக இருப்பதால்தான் எனது இந்த வாழ்வை தொடரும்படி பார்த்துக் கொள்கிறேன். ஆனால், எனக்கு சுயமதிப்பு என்பது கிடையாது. ஏனெனில் சுயம் என்ற உணர்வே போய்விட்டது, எனவே எதற்காக மதிப்பு?

சுயம் என்பதே அருகதையற்ற ஒன்று. அருகதையற்ற ஒன்றுக்கு பெருமிதத்தையும் நீங்கள் சேர்த்தீர்கள் என்றால், பிறகு நிறைய பிரச்சனைகள் வரும். இந்த பெருமிதமே நம்பிக்கையாகவும் மாறிவிட்டால், பின் உண்மையாகவே பிரச்சனைதான். உன்னில் நீ நம்பிக்கை வைக்க வில்லையென்றால் பிழைக்க முடியாது என்று மக்கள் நம்புகிறார்கள், மக்களுக்கு அது உண்மையாகவும் மாறுகிறது, ஏனெனில் எதில் நீங்கள் நம்பிக்கை வைக்கிறீர்களோ அதில் நீங்கள் சிறு கவனமும் உணர்சியும் செலுத்தும் போது, அது உங்களுக்கு உண்மையாகவே மாறுகிறது. (தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# மலையக முஸ்லிம் கிராமங்களின் மண் மணக்கும் பாடல்கள்

01

ஈழத் திருநாட்டில் பிரதான இனங்கள் மூன்று காணப்பட்ட போதிலும் அவற்றினுள்ளே தெளிவான பல இனத்துவக் குழுக்களையும் அவதானிக்க முடிகிறது. இந்த வகையில் இலங்கைவாழ் முஸ்லிம்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட இஸ்லாமிய இனத்துவக் குழுவாகும். இலங்கை முஸ்லிம்களை பிரதேச வாரியாக நோக்கும் போது மத்திய மாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட மலயகப் பகுதியில் வாழ்வோரையும் தனியொரு இனத்துவக்குழுவாக நோக்கலாம். இவர்கள் பெரும்பான்மை சிங்கள கிராமங்களால் சூழப்பட்ட தனித்தன்மையான கிராமங்களில் வாழ்ந்த போதிலும் தமிழையே தமது தாய்மொழியாக கொண்டு வாழ்கின்றனர். இவர்கள் மத்தியில் ஆரம்பகாலம் தொட்டே அறிஞர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் என்போர் தோன்றி இலக்கிய சேவையாற்றி வருகின்றனர். இதற்கு உதாரணமாக அருள்வாக்கி அப்துல் காதர் புலவர், கசாவத்தை ஆலிம் அப்பா, அறிஞர் சித்திலப்பை ஆகியோரைக் குறிப்பிடலாம். அவர்களுக்கும் முன்னைய காலந்தொட்டே தமிழில் எழுத்து மூல இலக்கியங்கள் வளர முன்னர் நாட்டார் இலக்கியம் இவர்களிடமும் தோன்றி நாடோடியாக செவிவழியாக சிறப்புற்றுத் திகழ்ந்தது. ஆனால், சில பிரதேச வாசிகள் நாட்டார் இலக்கியம் என்பது தமக்கே உரிய முதுசொமாக மார்பு தட்டிக் கொள்வது தான் வேடிக்கை.

நாட்டாரியல் என்பது கிராம மக்களின் பழக்கவழக்கம், பண்பாடு, நம்பிக்கைகள், கலை, கலாசாரம், இலக்கியம் என்பவற்றை ஆராயும் இயலாகும். நாட்டாரியலில் நாட்டார் இலக்கியம் என்பது தனியானதொரு தலைப்பாகும். அதனுள் நாட்டார் பாடல்களே சிறப்பிடம் பெறுகின்றன. அவை ஓசை நயமும் பொருள் நயமும் மிக்கவை. ஏட்டில் எழுதப்படாத, இயற்றியவர் யார் என்று அறியப் படாத இந்தப் பாமரப் பாடல்கள் மலையக முஸ்லிம் கிராமங்களிலும் தனித்துவம் பெற்றுத் திகழ்கின்றன. கணினி மயமாகிப்போன இந்த 21ஆம் நூற்றாண்டில் அவை இல்லாதொழியும் தறுவாயில் மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தின் பழம்பெரும் முஸ்லிம் கிராமமான தலவின்னை மடிகெ கிராமத்தில் 17 ஆம் நூற்றாண்டு முதல் 20 ஆம் நூற்றாண்டு வரை செவிவழியாகப் பேணப்பட்டு வந்த நாட்டார் பாடல்களை நயத்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

புதிய மழைத்தூறல் புழுதி மண்ணில் படாமல் மண்வாசம் வீசும் அந்த அளவிற்குத் தமிழன்னைக்குச் சேவை செய்யும் இலக்கிய வாதிகளைத் தந்தவள் தலவின்னைத் தாய். அது 20 ஆம் நூற்றாண்டின் பின்னர். இது 20

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"**

ஆம் நூற்றாண்டுக்கு முன்னர். இம் மண்ணில் மலர்ந்து மணம் வீசிய பாமர இலக்கியம் பற்றியது. கடந்த நான்கு தசாப்பத காலத்திற்கு முன்னர் பள்ளி வாயில்களில் கந்தூரி வைபவங்கள் களைகட்டியிருந்த காலங்களில் கிராமத்தில் வாழ்ந்த பாமரக் கவிஞர்கள் எதிர்ப் பாட்டுப்பாடி தமது இலக்கிய தாகத்தைத் தீர்த்துக் கொண்டனர்.

இந்த நாட்டார் பாடல்களை தாலாட்டு, ஒப்பாரி, கோலாட்டப் பாடல், கும்மிப்பாடல், ஊஞ்சல் பாடல், காதல்பாடல், கதைப்பாடல், தொழில்வகைப் பாடல் எனப் பல்வேறு தலைப்புக்களில் நோக்கலாம். இவற்றுள சில தலைப்புக்கள் தவிர ஏனைய தலைப்புகளுள் எமது கிராமப் பாடல்களைத் தொகுக்கலாம். நாட்டார் பாடல்கள் இன்னும் உயிர் வாழ்கிறதென்றால் அதற்கு ஒரே காரணம் கிராமங்களில் வாழும் பாட்டிமார்தான். ஆம் அவர்கள் தமது பேரக்குழந்தைகளை உறங்க வைப்பதற்காக தமது தாய்மாரின் மூலம் அறிந்த தாலாட்டுப் பாடல்களைப் பாடிவருகின்னறனர்.

தாலாட்டுதல் என்ற பதத்தை எமது கிராமப் பகுதிகளில் ஆராட்டுதல் என்றுதான் பயன்படுத்துவர். தாலாட்டுப் பாடல்கள் எல்லாம் ஆராரோ என்ற இராகத்துடன் ஆரம்பமாவதனால் அது காரணப் பெயராக ஆகியிருக்கலாம். முற்கால கிராமத்துத் தாய்மார் தீமது சேலையால் தொட்டில் கட்டி அதில் குழந்தையை வைத்து தாலாட்டித் தூங்கச் செய்வதே ஒரு கலைநயம்மிக்க காட்சியாகும். கணவனை இழந்த ஒரு விதவைத்தாயின் தாலாட்டு இவ்வாறு அமைகிறது.

ஆராரோ ஆரிரரோ...
ஆராரோ ஆரிரரோ...
தோள் மேலே ஒன்ன வச்சு
பூப்போல உலாவிடுவார்



பூமகனே கண்ணுறங்காய்
உன்மாமன் தோட்டத்துல
ஈச்சங் குலைகளுண்டாம்
குடிக்கு நல்ல ஐயமும் உண்டாம்
பொறுதியுடன் கண்வளராய்...

தனது குழந்தைக்குத் தந்தையில்லா விட்டாலும், தனது தாய் வீட்டினதும் குழந்தையின் தாய் மாமனினதும் பெருமைகளைப்பாடி அவ் ஏழைத்தாய் ஆறுதல் அடைவது சிறப்பல்லவா?

இவ்வாறு தாலாட்டி, பாலூட்டி, சீராட்டி வளர்த்த குழந்தைக்கு சோறூட்டுவது தாய்மாரின் கடமையல்லவா? ஒரு தாய் இரவு நேரம், சாப்பிடுவதற்கு மறுக்கும் தன் குழந்தைக்கு நீலவானில் நீந்தும் நிலவைக்காட்டி சோறூட்டுகிறாள் இவ்வாறு.

சந்திர மாமா
எங்கே போறாய்?
மண்ணெடுக்கப் போறேன்
என்னத்துக்கு மண்?

(தொடரும்)

தலவின்னை சியார்

# அடையாள அட்டை இல்லாதவர்கள் தேர்தலில் வாக்களிக்க முடியாது

## நாடுகடந்த தமிழீழ அரசு

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளாத எவரும் எதிர்வரும் காலங்களில் நடைபெறும் தேர்தல்களில் போட்டியிடவோ வாக்களிக்கவோ அனுமதிக்கப்படமாட்டார்கள் என அவ் அரசாங்கத்தின் உள் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உள்துறை அமைச்சகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இதுவரை அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக அதனைப் பெற்றுத் தங்களை நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் குடிமக்களாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும். அப்படிப் பதிவு செய்யாதவர்கள் எதிர்காலத்தில் நடைபெறும் எந்தத் தேர்தலிலும் போட்டியிடவோ வாக்களிக்கவோ தகுதியற்றவர்களாகவோ கணிக்கப்படுவார்கள்.

எனவே உங்கள் பகுதிகளிலுள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதிநிதிகளையோ அல்லது அவர்களது அலுவலகங்களையோ தொடர்பு கொண்டு விண்ணப்பித்தன் மூலம் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன் நிதி வழங்கல் முறைகளிலும் இறுக்கமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. வாரம் ஒரு டொலர் வரித் திட்டத்தில் இணைந்து கொள்ளாதவர்கள் தேர்தல் ஒன்றில் போட்டியிடவோ வாக்களிக்கவோ முன் வரும்போது அதனை முற்றாகச் செலுத்தியவராக இருக்க வேண்டும்.

அப்படி முழுத் தொகையையும் செலுத்தாதவர்கள் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் குடிமக்களாகக் கருதப்படமாட்டார்கள் எனவும் உள்துறை அமைச்சகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# துமிந்த சில்வாவின் கையொப்பமில்லாத ஆணழகன் சான்றிதழ் சட்டவிரோதமானது

## விளையாட்டு திணைக்கள பணிப்பாளர்

இலங்கையில் கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்ற தேசிய ஆணழகன் போட்டியின் போது முல்லேரியா துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் காயமடைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் அச்சுமுத்திரை இடப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

எனினும் அந்த சான்றிதழ்களில் துமிந்த சில்வாவின் கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை. எனவே இது ஒரு சட்டவிரோத செயலாகும் என்று இலங்கையின் விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் ரஞ்சினி ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஆணழகன் கழக தலைவராக துமிந்த சில்வா உள்ளார். இதன் அடிப்படையிலேயே அவரின் பதவி இடப்பட்ட அச்சுமுத்திரை குறித்த சான்றிதழ்களில் பொறிக்கப்பட்டுள்ளது.

எனினும் அவரது கையொப்பம் அந்த சான்றிதழில் இடப்படாமை செல்லுப்படியற்றதாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சான்றிதழ்களை பெற்றுக் கொண்டோர் முறைப்பாடு செய்தால் மட்டுமே சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து கவனம் செலுத்த முடியும் என்று இலங்கையின் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

போட்டி ஏற்பாட்டாளர்கள் குறித்த சான்றிதழ்களை சிங்கப்பூரில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கும் துமிந்த சில்வாவுக்கு அனுப்பி அவரின் கையொப்பத்தை பெற்றிருக்கலாம்.இந்நிலையில் தமது கையொப்பம் இல்லாமல் அச்சுமுத்திரையை குறித்த சான்றிதழில் பொறிக்க துமிந்த சில்வா அனுமதி வழங்கியமை செல்லுபடியற்ற செயலாகும் என்று விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பொதுவிடுமுறையான டிசெம்பர் மாதம் தலையிடி மாதமாக இலங்கைக்கு

(கொழும்பு)

டிசெம்பர் மாதம் பொதுவாக விடுமுறை மாதமாக இருக்கின்றபோதும் அரசுக்கு அது தலையிடி மாதமாக மாறியிருப்பதாகவும் விடுமுறையின்றி உழைக்க வேண்டிய மாதமாகவும் காணப்படுவதாகவும் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்ட பின்னர் மனித உரிமை நிலைமைகள் தொடர்பாக தற்காப்பு மூலோபாயங்களை வகுக்க வேண்டிய நிலையில் அரசாங்கம் உள்ளது.

அடுத்த மார்ச் மாதம் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கையின் மனித உரிமை விவகாரம் குறித்து கலந்துரையாடப்படுவதற்கு வாய்ப்புகள் இருப்பதால் டிசெம்பர் விடுமுறைக் காலங்களிலும் கடினமாக உழைக்க வேண்டிய நிலையில் இலங்கை அரசு இருப்பதாகவும் கொழும்பு வார இதழ் சுட்டிக்காட்டியுள்ளது.


இதற்கிடையே நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை ஆய்வு செய்வதற்கு தமது தூதுவர் பற்றீசியா புட்டினீஸ் அனுமதிக்குமாறு இலங்கை அரசிடம் அமெரிக்கா கோரியுள்ளதாகவும் மற்றொரு தகவல் வெளியாகியுள்ளது. (அ-2)



லயனல் திலகநாயகம் போலின் ஆண்டு நினைவு விழா நேற்று நடைபெற்றது. இதில் அவரது மாணவியான வேதாசினி நந்தகுமார் அணிசெய்கலைஞர்களுடன் ஆராதனை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். (படம்:-என்.குமார்)

# 10 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டும் பூரணமாக்கப்படாத கட்டடம்

(பூநகரி)



பூநகரி மட்டுவில் நாடு கிழக்கு கிராம சேவகர் பிரிவில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் கிராம முன்னேற்றச் சங்கம் அமைப்பதற்கு 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது.

இக் கட்டடத்திற்கான நிர்மாணப் பணியை ஒப்பந்தகாரர்கள் கடந்த ஆண்டும் டிசெம்பர் மாதம் ஆரம்பித்திருந்தனர்.

ஒப்பந்தகாரர்களால் வேலை 9 இலட்சத்து 68 ஆயிரம் ரூபா பெறுப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட வேலையானது கூட்டவேலைகள் செய்யப்பட்டதாக சங்க நிர்வாகிகளால் தெரிவிக்கப்படுகின்றது.

ஆயினும் அமைக்கப்பட்ட இக் கட்டடம் அரைகுறை வேலைகளுடன் காணப்படுகின்றது.குறிப்பாக நிலத்திற்கு சீமெந்து இடப்படாமை, கதவு, யன்னல்கள் வைக்கப்படாமை, பூச்சு வேலைகள் செய்யப்படாமல் என பல வேறு வேலைக்குறைபாட்டுடன் காட்சி தருகின்றது.

10 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டும் கையறு நிலையில் காணப்படும் இக்கட்டடத்தை அமைக்க மேலும் நான்கு இலட்சம் தேவை என அங்குள்ள அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக அப்பகுதிமக்கள் தமது பங்களிப்பை வழங்க வேண்டும் என பணிக்கப்பட்டிருப்பதால் மக்கள் விசனம் அடைந்துள்ளனர்.

எனவே இப்பகுதியில் அரைகுறையான தோற்றத்துடன் காட்சிதரும் இக் கட்டடத்தை அமைப்பதில் ஏற்பட்ட தடைகளை கண்டறிய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-84)

# ஒப்படைக்கப்படும் பொதிகளை வீடுகளுக்கே விநியோகிக்க திட்டம்

## புகையிரத திணைக்களம்

போக்குவரத்திற்காக ஒப்படைக்கப்படும் பொதிகளை வீடுகளுக்கே விநியோகிக்கும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு இலங்கை புகையிரதத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளதாக புகையிரதத் திட்டமிடல் பணிப்பாளர் விஜயசமரசிங்க தெரிவித்துள்ளார்.

பொதிகள் போக்குவரத்தின்போது அந்தந்த புகையிரத நிலையங்களுக்கு மாத்திரமே கொண்டுசெல்லப்படுகின்றன.

இலங்கை புகையிரதத் திணைக்களம் தனியார் நிறுவனமொன்றுடன் இணைந்து இந்த நடவடிக்கைக்கான திட்டங்களைத் தயாரித்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

புகையிரதத்தில் ஒப்படைக்கப்படுகின்ற பொதி, தபால் போன்றவற்றை வீடுகளுக்கே கொண்டு சென்று ஒப்படைக்கும் விரைவுதூதர் சேவையை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும் என்றும் விஜய சமரசிங்க கூறினார்.

இதன்மூலம் பயணிகள் தங்கள் பொருட்களையும் சேவைகளையும் இலகுவில் பரிமாற்றிக் கொள்வதற்கான வழிமுறை ஏற்படுத்திக் கொடுக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# ஐ.தே.கட்சியின் எம்.பிக்கள் சிலர் சுயாதீனமாக இயங்க முடிவு

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் சிலர் சுயாதீனமாக இயங்குவதற்கு தீர்மானித்துள்ளனர்.இந்த நடவடிக்கை கட்சி முரண்பாடுகளை மேலும் வலுவடையச் செய்யும் எனவும் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களான பாலித ரங்கே பண்டார,வசந்த அலுவிஹாரே ,பாலித தெவப்பெரும மற்றும் திலிப் வெதரச்ச ஆகியோரே இவ்வாறு சுயாதீனமாக இயங்க தீர்மானித்துள்ளனர்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களின் போது சுயாதீனமான தீர்மானங்கள் எடுக்கப்படும் என அறிவித்துள்ளார்.கட்சியின் தற்போதைய நிலைமை அதிருப்தி அளிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கட்சி மறுசீரமைப்பு குறித்து நீண்ட காலமாக வலியுறுத்தப்பட்டு வருகின்ற போதிலும் அவை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார். இதனால் சுயாதீனமாக இயங்கத் திட்டமிட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாக இயங்குவது குறித்து தமக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை என கட்சியின் தலைவர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

கட்சியில் கருத்து முரண்பாடு நிலவுகின்றமை உண்மை என அவர் ஒப்புக் கொண்டுள்ளார். கட்சி உறுப்பினர்கள் ஆளும் கட்சியில் இணைந்து கொள்வதனை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சுற்றுலாவுக்கு வரும் பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபடுகின்றனர்

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கைக்கு சுற்றுலாப்பயணிகளாக வரும் பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபடுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினிஜயவிக்கிரம பெரேரா நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஆசிய நாடுகள் சிலவற்றிலிருந்தே இவர்கள் இலங்கைக்கு வருவதாக தெரிவித்துள்ள அவர் இப்பெண்கள் 3 மாத கால சுற்றுலா விசாவில் வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். (அ-2)

# வெளிநாட்டில் உயர் கல்வியை குறைந்த செலவில் தொடர்வது எப்படி?

வெளிநாட்டிற்கு சென்று அதிகம் செலவழித்துப் படிப்பதைவிட வேறொரு புதிய முறையை மாணவர்கள் விரும்புகிறார்கள். Twinning programme என்று அழைக்கப்படும் அந்த முறையின்படி ஒரு படிப்பின் பாதியை உள்நாட்டிலும் பாதியை வெளிநாட்டிலும் மேற்கொள்ளலாம்.

இந்தமுறையில் இலங்கையில் இருக்கும் கல்வி நிறுவனங்கள் வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களுடன் இணைப்பு வைத்துக் கொள்ளும். வெளிநாட்டு கல்வி நிறுவனங்களும் இந்த முறையைப் பெரிதும் விரும்புகின்றன.


ஏனெனில் இந்த முறையில் அவர்களுக்கு சிக்கல் குறைவு என்பதுடன், வருமானமும் அதிகம். அதேபோல், இங்குள்ள மாணவர்களுக்கும் முழுவதும் வெளிநாட்டிற்கு சென்று படிப்பதோடு ஒப்பிடுகையில், செலவும் குறைவு,வெளிநாட்டு பட்டம் பெற்றது போன்றும் ஆகிவிடும் மற்றும் வெளிநாட்டு அனுபவமும் கிடைக்கும்.

இம்முறையில் ஒரு இலங்கை கல்வி நிறுவனம் ஒன்றுக்கும் மேற்பட்ட வெளிநாட்டு கல்வி நிறுவனங்களுடன் ஒத்துழைப்பை வைத்திருக்கும். அவற்றுள் நமக்குப் பிடித்தமான மற்றும் சிறந்த கல்வி நிறுவனங்களை நாம் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். பல வசதிகள் இருக்கும். இந்த Twinning programme முறையில் மாணவர்கள் எச்சரிக்கையாக செயற்படுவதும் முக்கியம். ஏனெனில் அதற்கு பல காரணங்கள் உள்ளன. அந்தக் காரணங்களைப் பற்றி அலசலாம்.

### தரம்

முதலில் நமது உள்ளூர் கல்வி நிறுவனங்கள் இணைப்பை மேற்கொண்டிருக்கும் வெளிநாட்டு கல்வி நிறுவனங்களின் தரம் பற்றி ஆராய வேண்டும். ஏனெனில், பணத்திற்காக எதுவேண்டுமானாலும் நடக்கலாம். மேலும் இலங்கைக்கு பிரிட்டன், அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்துதான் அதிக கல்வி நிறுவனங்கள் வருகின்றனவே தவிர பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளிலிருந்து ஏன் பொதுவாக கல்வி நிறுவனங்கள் வருவதில்லை? என்ற கேள்வி எழுகிறது.

இதற்கு காரணம், ஆங்கில கல்வி நிறுவனங்கள் பற்றி செய்தி ஊடகங்கள் உட்பட பலவற்றில் செய்யப்படும் அதீத விளம்பரங்கள்தான். மேலும் அந்த மொழியின் மீது நமக்குள்ள மயக்கமும் ஒரு காரணம். எனவேதான், வேறுபல நல்ல ஐரோப்பிய பல்கலைகளை விட்டுவிட்டு ஆங்கில கல்வி நிறுவனங்களையே மக்கள் நாடுகிறார்கள் என்று தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.




பொறியியல், முகாமை, வடிவமைப்பு மற்றும் இன்னபிற துறைகளைச் சார்ந்த கல்வி நிறுவனங்கள் இந்த Twinning programmeகளை வழங்குகின்றன. ஒரு நிறுவனத்தில் சேரும் முன்பாக அவை அங்கீகாரம் பெற்றவையா? அவை வழங்கும் பட்டங்களுக்கு உண்மையிலேயே மதிப்பு இருக்கிறதா? என்று நாம் தீர விசாரிக்க வேண்டும்.

ஏனெனில், மேலை நாட்டு கல்வி நிறுவனங்கள் அனைத்துமே நல்லவை என்ற கருத்து மிகவும் தவறானது. அனைத்தும் பணத்திற்காக என்பதை மறந்து விடலாகாது. சுரண்டுவதில் அவர்கள் கை தேர்ந்தவர்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

### *விசா நடைமுறைகள்*

இதுபோன்ற படிப்புக்களில் விசா பெறுவதைப் பற்றி மாணவர்கள் தீவிரமாக திட்டமிட வேண்டும். ஏனெனில், பல மாணவர்களுக்கு விசா விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. ஒருமுறை விசா விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் மறு விண்ணப்பத்தில் விசா பெறுவது அவ்வளவு எளிதல்ல. ஆனால், இதுபோன்ற இக்கட்டான சூழலில் மாணவர்களுக்கு எவ்வாறு உதவுவது என்ற தெளிவான திட்டம் பல உள்நாட்டு கல்வி நிறுவனங்களுக்கு இருப்பதில்லை.

விசா நிராகரிக்கப்பட்டால் என்ன செய்ய வேண்டும் என்ற மாற்று வழியை பல கல்வி நிறுவனங்கள் இன்னும் யோசித்துக் கொண்டுள்ளன. எனவே, மாணவர்களின் எதிர்காலம் சிக்கலாகும் வாய்ப்புகள் உள்ளன. இது விடயத்தில் யோசித்து செயற்பட வேண்டியது முக்கியம்.

### *நிராகரிப்பு*

Twinning programme இல் சேர்ந்து விட்டாலே வெளிநாடு போய்விடலாம். பட்டம் மற்றும் அனுபவம் பெற்றுவிடலாம் என்று நினைக்கக் கூடாது. ஏனெனில் அதில் பல விடயங்கள் உள்ளன. உள்நாட்டில் படிக்கையில், உங்களின் செயற்பாடு வெற்றிகரமாக இருந்தால்தான், அதனோடு ஒத்துழைப்புக் கொண்ட வெளிநாட்டு கல்வி நிறுவனம் குறிப்பிட்ட மாணவரை ஏற்றுக் கொள்ளும். இல்லையேல் கஷ்டம் தான்.

மேலும் நல்ல ஆங்கிலப் புலமை இருப்பது அவசியம். சில கல்வி நிறுவனங்கள் TOEFL, IELTS போன்ற பரீட்சை பெறுபேறுகளை எதிர்பார்க்கின்றன. மேலும் உங்களின் நிதி நிலைமையும் திருப்திகரமாக இருக்க வேண்டும்.

### *படிப்பின் முக்கியத்துவம்*

Twinning programme இல் ஈடுபட்டிருக்கும் ஒரு வெளிநாட்டு கல்வி நிறுவனம் தரமானதா? என்று பார்ப் பது எவ்வளவு முக்கியமோ, அதே அளவு முக்கியம் நீங்கள் தேர்ந்தெடுக்கும் படிப்பு சிறப்பானதா? என்பதும். அந்தப்படிப்பு நடைமுறை அம்சங்களுடன் இணைக்கப்பட்டுள்ளதா? மற்றும் அதன் வாய்ப்புக்கள் என்ன என்பதைப் பற்றி தெளிவான பார்வை வேண்டும்.

அந்தப் படிப்பின் மூலம் நீங்கள் பெறும் கிரெடிட்டுக்களை (Credits) ஏனையய கல்லூரிகளும் ஏற்றுக் கொள்ளுமா? என்பதையும் பார்க்க வேண்டும். ஏனெனில் நீங்கள் அதே நாட்டில் வேறொரு கல்வி நிறுவனத்தில் வேறுபடிப்பில் சேர வேண்டியிருக்கலாம். சிறந்த கல்லூரிகளின் மூலம் பெறப்படும் கிரெடிட் பொயிண்டுகள் (points) பொதுவாக அனைத்து பிற கல்வி நிறுவனங்களாலும் ஏற்றுக் கொள்ளப்படும். எனவே, பாட விடயத்திலும் கவனமாக செயற்பட வேண்டும்.

# சர்வதேச ஆங்கிலமொழிப் பரீட்சை

### கவனித்தல் தேர்வு

40 கேள்விகள், 4 பிரிவுகள்,30 நிமிடங்கள், கூடுதலாக (மாற்றுதலுக்காக 10 நிமிடங்கள் தரப்படும்)

மதிப்பீட்டு அம்சங்கள், உண்மையான தகவல் மற்றும் முக்கிய எண்ணங்களை புரிந்து கொள்ளும் திறன், தகவல்களை ஒருங்கிணைக்கும் திறன் அறிதல், பேசுபவரின் நோக்கம், பண்பை அறிதல்

### பேசுதல் தேர்வு

3 பகுதிகள்: அறிமுகம் மற்றும் நேர்காணல் (4-5 நிமிடங்கள்), தலைப்பில் பேசுதல் (3-4 நிமிடங்கள்) , இரட்டை வழி கலந்துரையாடல் (4-5 நிமிடங்கள்), மொத்தம் 11-14 நிமிடங்கள், மதிப்பீட்டு அம்சங்கள், விரிவாக பேசும் திறனை மதிப்பிடல், பல சூழல்களில் பல விடயங்களை விவாதிக்கும் திறனை மதிப்பிடல்.

### எழுதுதல் தேர்வு

முதல் பகுதியில் குறைந்தபட்சம் 150 வார்த்தைகளும் இரண்டாம் பகுதியில் குறைந்த பட்சம் 250 வார்த்தைகளும் எழுதுதல். 60 நிமிடங்கள் மதிப்பீட்டு அம்சங்கள் தரவுகளை அமைத்தல், வழங்குதல், ஒப்பிடுதல் திறன், செயற்பாட்டு நிலைகளை விபரிக்கும் திறன், சம்பவங்களை விபரிக்கும் திறன், எண்ணங்களை வெளிப்படுத்தும் திறன் அறிதல்.

### டோபல் பரீட்சை: (டி.ஓ.இ.எப்.எல்)

ஆங்கில திறனை மதிப்பிடுவதற்கான சர்வதேச தேர்வுகளில் டோபல் பரீட்சை மிகவும் முக்கியமான ஒன்றாகும். சர்வதேச பல்கலைக்கழகங்களில் இடம்பெறுவதற்கு நமக்கு உதவும் காரணிகளில் டோபல் பரீட்சைப் புள்ளிகளும் முக்கியமான ஒன்று. ஆங்கில பிரியர்களிடையே அப்பரீட்சை பற்றிய ஆர்வம் எப்போதும் குறையாமல் இருக்கும். எனவே தற்போது அப்பரீட்சை பற்றி இங்கே விரிவாக அலசலாம்.

கடந்த 1965 ஆம் ஆண்டு முதல் டோபல் பரீட்சையானது கல்வி தேர்வு சேவை என்ற தனியார் இலாபநோக்கமற்ற அமைப்பாலும் கல்லூரி சபையாலும் நிர்வகிக்கப்படுகிறது. இந்தத் பரீட்சையைப் பற்றி நீங்கள் முந்தைய தலைமுறையினரிடம் விசாரித்தால் அந்த பரீட்சையில் முன்பு இருந்த நிலையைவிட தற்போது அபரிமிதமான மாற்றங்கள் நிகழ்ந்திருப்பதை தெரிந்து கொள்ளலாம். தாளில் எழுதும் பரீட்சையாக இருந்த இது 1998 இல் கணனிமயமாக்கப்பட்டதாகவும் 2005 இல் இணைய மயமாக்கப்பட்டதாகவும் ஆனது. ஆனால் ஈரான், ஈராக், கென்யா, மியன்மார், நோர்வே, ரஷ்யா, தென்னாபிரிக்கா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் சில குறிப்பிட்டநிலையங்களில்தாள்வழிபரீட்சைகுறிப்பிட்ட திகதிகளில் இன்னும் நடைபெற்று வருகின்றது.

### பரீட்சை எழுதும் முறை

பரீட்சைக்கு முன்னதாக முதலில் இடத்தை முக்கியமாக தேர்வு செய்து கொள்ள வேண்டும். ஏனெனில் இடத்தை வைத்து தாள் வழி பரீட்சையா? அல்லது இணைய வழி பரீட்சையா என்பதை முடிவு செய்து கொள்ளலாம். இணையவழி பரீட்சையானது படித்தல், கவனித்தல், பேசுதல் மற்றும் எழுதுதல் போன்ற தேர்வின் அனைத்து பிரிவுகளையும் முக்கியமாக எடுத்துக் கொண்டு மதிப்பிடுகிறது. இணையவழி பரீட்சையானது ஒருங்கிணைந்த திறன்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது.

பரீட்சையின் மொத்தநேரம் 4 மணிகள் மற்றும் ஒரே நாளில் எழுதப்பட வேண்டும். கணனிவழி பரீட்சை எழுத நீங்கள் கணனி

## அறிவுக் கலசம்

வலம்புரி

ஆர்.யூ.பாலமுருகன்

யின் சில அம்சங்களைப் பற்றி தெரிந்திருக்க வேண்டும். பரீட்சை எழுதுகையில் நேரம் பார்த்தல், அடுத்த பக்கத்திற்கு செல்லுதல், கேட்புமுறை கேள்விகளுக்கு ஒலியை சரி செய்தல், பத்திகளை விரிவாக படித்தல், பேசுமுறை பரீட்சையில் ஒலிப்பானை பயன்படுத்தல் போன்ற பல விடயங்களுக்கு கணனி அறிவு அவசியம்.

பேச்சு பரீட்சையில் உங்கள் பதில்கள் ஒன்லைன் மூலமாக மதிப்பீட்டு மையத்திற்கு சென்று விடும். எழுதுதல் பிரிவு இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. முதல் பிரிவில் நீங்கள் படித்த மற்றும் கேட்டவற்றுக்கு பதிலை தட்டச்சு செய்ய வேண்டும். இரண்டாம் பிரிவில் உங்கள் கருத்தை மையமாக வைத்து ஒரு கட்டுரை எழுத வேண்டும். மேற்கூறிய பிரிவுகள் இரண்டு, மூன்று அல்லது மொத்த மாக நான்கு பிரிவுகளின் கேள்விகளையும் கொண்டிருக்கும். இது எதை உணர்த்துகிறது என்றால் பத்தியை நீங்கள் படிக்க வேண்டும். தலைப்பை பற்றிய சிறிய விரிவுரையை நீங்கள் கேட்க வேண்டும்.

பின்னர் உங்கள் பதிலை வாயால் சொல்லவோ அல்லது எழுதவோ வேண்டும். இணைய வழி பரீட்சைக்காக பதிவு செய்பவர்கள் அதை முடித்த பின்னர் பரீட்சையின் நான்கு பிரிவுகளுடைய அணுகலையும் பெற முடியும். இத்தகைய மாதிரி முறையில் படித்தல் மற்றும் கவனித்தல் பிரிவுகளுக்கு நாமே பதில் கூறலாம். எழுதுதல் மற்றும் பேசுதல் பிரிவுகளுக்கு மாதிரி பதில்கள் கொடுக்கப்பட்டிருக்கும்.

தாள் வழி பரீட்சைக்கு 2.30 மணிகள் கொடுக்கப்படும். பிரிவு வாரியாக இந்த நேரம் பிரிக்கப்படும். ஒவ்வொரு பிரிவிலும் உள்ள கேள்விகளை தேர்ந்தெடுத்து எழுதலாம். தாள் வழி பரீட்சையில் ஆங்கில எழுத்து தேர்வு தேவை.

### பரீட்சை மற்றும் உங்கள் புள்ளிகளைக் கணக்கிடுதல்

டோபல் பரீட்சைக்கான புள்ளிகள் வெளிப்படையானது மற்றும் நம்பகமானது. எப்படியெனில பரீட்சை எழுதியவரின் ஆங்கில பேச்சுத்திறன் பதியப்பட்டு பரீட்சை நிலையத்தில் இருக்கும் ஒரே நிபுணருக்கு பதிலாக ஆறு நிபுணர்களால் மதிப்பாய்வு செய்யப்படுகிறது.

(தொடரும்)

# உலகளாவிய பயங்கரவாதத்திற்கு எதிரான போர்...



**அண்மையில் திருகோணமலை ஸாஹிரா கல்லூரியில் அ.வ. முஹ்சீனின் "ஜனநாயகம்-வெள்ளை-கிறிஸ்தவ சமூகங்களின் அரசியல் முறைமை" எனும் நூல் வெளியீட்டின் போது அரசியல் ஆய்வாளரும் எழுத்தாளருமான யதீந்திரா ஆற்றிய உரையின் கட்டுரை வடிவம்**

இந்நூல் அடிப்படையில் அமெரிக்கா தலைமையில் அணி சேர்ந்திருக்கும் மேற்குலகத்திற்கு எதிரானதொரு நூலாகும். அமெரிக்கா தலைமையில் முன்னெடுக்கப்படும் ஜனநாயக அரசியல் முறையை இந்த நூல் வன்மையாக எதிர்க்கிறது.

மேற்கால் முதன்மைப்படுத்தப்படும் ஜனநாயக அரசியல் முறைமையானது, மதச்சார்பற்றதாக கொண்டாடப்பட்டாலும் அது அடிப் படையில் கிறிஸ்தவமத உணர்வினாலேயே வழிநடத்தப்படுகிறது.

இதன் காரணமாகவே அமெரிக்காவால் தொடர்ந்தும் இஸ்லாமிய நாடுகள் இலக்கு வைக்கப்பட்டு வருகின்றன என்பதே இந்நூல் முன்னிறுத்த முயலும் வாதமாகும்.

ஆசிரியர் தனது தர்க்கத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் சிலுவை யுத்த காலத்தை நினைவு கொள்கின்றார். சிலுவையுத்த காலம் என்பது - போப்பின் தலைமையில் இஸ்லாமியர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களைக் குறிக்கும். இது 12 ஆம் 13 ஆம் நூற்றாண்டுகளில் இடம் பெற்றவை.

சிலுவை யுத்த காலத்தில் மேற்கிளம்பிய இஸ்லாமிய வெறுப்பின் தொடர்ச்சியே, தற்போது அமெரிக்காவால் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளாகும்.

தற்போது இஸ்லாமிய நாடுகள் மற்றும் தலைவர்களுக்கு எதிராக அமெரிக்கா முன்னெடுத்து வரும் நவீன யுத்தங்களிலும் மேற்படி சிலுவையுத்தகால இஸ்லாமியப் வெறுப்பே செல்வாக்கு செலுத்துகிறது என்பதே இந்நூல் முன்நிறுத்த முற்படும் தர்க்கமாகும்.

உண்மையில் இப்படி ஒரு பார்வை குறிப்பாக-2001-செப்ரெம்பர்-11ல் அமெரிக்கா மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்குலகின் தலையீடுகளை இஸ்லாமிய-கிறிஸ்தவ முரண்பாடுகளின் பின்னனியில் பார்க்கும் போக்கொன்றும் தீவிரமடைந்தது.

உண்மையில் பின்பு செப்ரெம்பர் சூழலில் இஸ்லாமிய நாடுகள் மட்டும் இலக்கு வைக்கப்படவில்லை. உண்மையில் செப்ரெம்பர் தாக்குதலானது அதுவரையான உலக ஒழுங்கையே மாற்றியமைத்தது.

> **இந்த பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் 2009-ல் பிரபாகரனின் கதையை முடித்து வைத்தது. 2010-ல் பின்லேடனின் கதையை முடித்து வைத்தது. 2011-ல் கொலம்பிய விடுதலை இயக்கத்தின் தலைவர் அல்போன்சின் கதையை முடித்து வைத்தது.**

மேற்படி அமெரிக்கா தலைமையில் முன்னெடுக்கப்பட்ட பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம்தான் இந்த மாற்றத்தின் அடிப்படையாக இருக்கிறது.

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் பிறந்த பின்னனியையும் நாம் பார்க்க வேண்டியது அவசியம்.

செப்ரெம்பர் தாக்குதல் இடம் பெற்றுவிட்டது. அடுத்து என்ன செய்வது எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொழ்வது என்ற கேள்விகள் அமெரிக்க மூளைசாலிகளை ஆட்கொள்கின்றன. பலரும் பலவிதமான ஆலோசனைகளை முன்வைக்கின்றனர்.

உடனடியாக ஆப்கானிஸ்தானை தாக்கியழிக்க வேண்டும் என்கின்றார் சிலர். இன்னும் சிலரோ எங்களது எதிரிகள் என்போரை இனியும் விட்டு வைக்கக்கூடாது என்கின்றனர். இதற்காக பாகிஸ்தானின் ஒத்துழைப்பைக் கோரவேண்டும். ஒத்துழைக்க மறுத்தால் அதற்கும் பாடமொன்று புகட்ட வேண்டும்.

இப்படி பலரும் பல விதமான பரிந்துரைகளைச் செய்து கொண்டிருந்த போது, ஒருவர் மட்டும் சற்று மாறுபட்ட வகையில் War on Terror என்ற வசனத்தை உச்சரிக்கிறார்- அவர் கோலின் பவல்- அமெரிக்காவின் வெளிவிவகாரச் செயலாளர், அத்துடன் அமெரிக்க அதிபர் புஷ்சின் மூளை என வர்ணிக்கப்பட்டவர்.

அவரது வாதம் வேறு விதமாக அமைந்திருந்தது-நாங்கள் இப்போது ஆப்கானிஸ்தான் மீது உடனடியாக தாக்குதல் தொடுக்கும் திட்டத்தை அறிவித்தால், அது இஸ்லாமிய நாடுகள் மத்தியில் எதிர்ப்புணர்வை அதிகரிக்கும். எனவே நாம் இதனை உலகளாவிய பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தமாக அறிவிப்போம். அவ்வாறு செய்வோமானால் உலகத்தின் ஆதரவை நாம் பெறமுடியும். அதே நேரம் எதிரிகளை இலக்கு வைப்பதும் சுலபம்ாகும் என்றவாறு, கோலின் பவல் தனது திட்டத்திற்கான நியாயங்களை சொல்லுகிறார். இறுதியில் அவரது திட்டமே ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

உண்மையில் இது பரந்ததொரு நிகழ்சித்திட்டத்தை உள்ளடக்கியிருந்தது. ஆனால், இந்த நிகழ்ச்சிநிரலில் இலக்கு வைக்கப்பட்ட அமைப்புகளின் அனேகமானவை இஸ்லாமிய அமைப்புக்கள் என்பதில் உண்மை இருக்கிறது. ஆனால், இந்தப் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தின் முதல் பலி இஸ்லாமிய அமைப்போ அல்லது இஸ்லாமிய தலைவரோ அல்ல.

இதன் முதலாவது பலி விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன்தான். பிராபாகரன் பின்லேடன் அல்ல. தவிர பிராபாகரன் அமெரிக்க நிகழ்ச்சி நிரலுக்கு எதிரான ஒருவரும் அல்ல. ஆனாலும் அது பிரபாகரைனையும் உலக அரசியல் அரங்கிலிருந்து பிடுங்கி எறிந்தது. அன்றைய சூழலில் இருந்த வெற்றிகரமான அரச எதிர்ப்பு அமைப்புக்கள் இரண்டு.

ஒன்று விடுதலைப்புலிகள் மற்றையது கொலம்பிய விடுதலை இயக்கம். உண்மையில் அமெரிக்க தலைமையில் முன்னெடுக்கப்படும் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் - உலகெங்கும் இயங்கிய ஆயுத விடுதலை அமைப்புக்களை இலகுவாக துடைத்தழிப்பதற்கானதொரு வாய்ப்பை வழங்கியது என்பதே உண்மை. அதில் முதலில் அகப்பட்டுக் கொண்டவர் தான் பிரபாகரன்.

இந்த பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் 2009 இல் பிரபாகரனின் கதையை முடித்து வைத்தது. 2011 மே மாதத்தில் பின்லேடனின் கதையையும் நவம்பர் மாதத்தில் கொலம்பிய விடுதலை இயக்கத்தின் தலைவர் அல்போன்சின் கதையையும் முடித்து வைத்தது.

உண்மையில் அமெரிக்காவின் இலக்கு பின்லேடன் போன்றவர்களே தவிர பிரபாகரன் அல்ல. ஆனால், பிரபாகரன் போன்றவர்கள் இயங்குவதற்கான வாய்ப்பையும் இந்தப் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் இல்லாமல் செய்தது.

அமெரிக்கா, இஸ்லாமிய அமைப்புக்களை இலக்கு வைப்பது போன்று இஸ்லாமிய அமைப்புக்களும் தங்களது பிரதான அரசியல் உள்ளடக்கமாகக் கொண்டிருப்பது-மேற்கு எதிர்ப்பு மற்றும் இஸ்ரேலிய எதிர்ப்பைத்தான்.

உண்மையில் 2001 ஆம் ஆண்டிற்குப் பிற்பாடு அமெரிக்காவிற்கு ஒரு பிரதான எதிரி உண்டென்றால் அது ஓசாமா பின்லேடன் மட்டுமே. அந்தளவிற்கு ஓசாமா ஒரு சிக்கலான நபராக மாறியிருந்தார்.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் மொழியில் சொல்வதானால்-அல்ஹறயிடா என்பது ஒரு அமைப்பல்ல. அது ஒரு நாடுகடந்த முஜாகிதீன்கள் வலையமைப்பு. செப்ரெம்பர் தாக்குதலைத் தொடர்ந்து அமெரிக்காவின் பாதுகாப்பு நிதி இரு மடங்காக உயர்த்தப்பட்டது. பின்லேடன் கொலையைத் தொடர்ந்து தற்போது பெரும்ளவில் அது குறைக்கப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் தாக்குதலால் அதிக நன்மை அடைந்தது அமெரிக்காவே என்றும் சிலர் வாதிட்டு வருகின்றனர். அதில் உண்மையில்லாமல் இல்லை. பின்பு செப்ரெம்பர் சூழல் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்ற பெயரில் அமெரிக்கா தனது செயற்பாடுகளை விஸ்தரித்துக் கொள்வதற்கானதொரு சாதகமான வாய்ப்பையே வழங்கியிருக்கிறது. விரும்பியோ விரும்பாமலோ அனைவரும் அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலுடன் நிற்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அளாகியிருக்கின்றனர்.

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தின் எச்சரிக்கை மிகவும் எளிமையானது-நீங்கள் எங்களுடனா? அல்லது இல்லையா?-இல்லையென்றால், அவ்வாறான நாடுகளையும் பயங்கரவாதத்திற்குத் துணை போபவர்கள் என்று இலக்கு வைப்பதற்கானதொரு சூழலை பின்பு செப்ரெம்பர் வழங்கியது எனலாம். ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் தொடுப்பதற்கு முன்னர் பாகிஷ்தானின் ஒத்துழைப்பைக் கோரிய கோலின் பவல் இவ்வாறுதான் முஷ்ரப்பிடம் கேட்டிருந்தார்.

இஸ்லாமிய-கிறிஸ்தவ முரண்பாட்டின் பின்னணியில் சமகால மேற்கின் அரசியல் நகர்வுகளை ஆராய்வோர், குறிப்பாக இஸ்லாமிய பின்புலம் தழுவி ஆராய்வோர் பேசும் விடயங்களை அவதானித்தால் அவர்கள் "இஸ்லாமிய அரசு" என்னும் நிலைப்பாட்டைக் கொண்வர்களாக இருப்பதைக் காணலாம்.

இவர்களது கருத்தியலை நாம் அரசியல் இஸ்லாம் என்று வரையறுக்கலாம். ஆனால், அரசியல் இஸ்லாமை முதன்மைப்படுத்துபவர்களிடமும் சரியானதொரு அரசியல் பார்வையில்லை என்றவாறான விமர்சனங்களும் உண்டு.

நான் இங்கு பொதுநிலையில் சில வாதங்களை ஆராய விழைகிறேனே தவிர சரிபிழை பற்றிய வாதப் பிரதிவாதங்களுக்குள் ஈடுபடவில்லை.

இவ்வாறு இஸ்லாமிய அரசு பற்றிப் பேசுவோரின் அரசியல் என்ன? இதனைப் பிறிதொரு வகையில் கூறுகின்றார் எகிப்திய மார்க்சியர் சமிர் அமீன்- அரசியல் இஸ்லாமை முதன்மைப்படுத்துவோரிடம் இருப்பது இஸ்லாமியச் சொற்கள் பூசப்பட்ட அமெரிக்க தாராளவாதமேயன்றி வேறொன்றுமில்லை என்கிறார் சமிர் அமீன்.

அவர் ஈரானில் இஸ்லாமிய அரசுபற்றி பேசும்போது-ஈரானில் மேற்கத்தைய தொப்பி அணிந்தவர்களுக்குப் பதிலாக கறுப்புத் தொப்பி அணிந்த முல்லாக்கள் இருக்கின்றனர். அவ்வளவுதான் வேறுபாடு என்றவாறு விமர்சிக்கின்றார்.

அதேவேளை இவ்வகை இஸ்லாமிய அரசுகளிடம் காணப்படும் பொதுப்பண்பு பற்றியும் அவர் கூறுகின்றார். இவர்களிடம் காணப்படும் பொதுப்பண்பு - இவர்கள் ஆட்சிக்கு வந்தபின்னர் எதிர்ப்பியக்கங்கள் 'அனைத்தையும் அழித்தொழித்து விடுவார்கள். (தொடரும்)

## கடலுக்கு அடியிலான மின்சார பரிமாற்ற திட்டத்திற்கு இந்தியா தொடர்ந்தும் அழுத்தம்

### சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



(கொழும்பு)

கடலுக்கடியிலான மின்சார பரிமாற்றத்திட்டம் தொடர்பில் இந்தியா, இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஆரம்ப ஆய்வு அறிக்கைகளையும் இந்தியா இலங்கையிடம் வழங்கியுள்ளதாகவும் எனினும் இந்தத் திட்டத்தை அமுல் செய்வதில் சில தொழில்நுட்ப பிரச்சினைகள் உள்ளதாக இலங்கையின் மின்சாரத்துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2014 ஆம் ஆண்டளவிலேயே கடலுக்கு அடியிலான இந்தத் திட்டத்தை அமுல்செய்யக் கூடியதாக இருக்கும். எனினும் இந்தியாவின் அனல் மின்சாரத்திட்டம் சம்பூரில் பூர்த்தியடையுமாக இருந்தால் அதன்மூலம் தேவையான மின்சார அலகுகளை பெறக்கூடியதாக இருக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, கடலுக்கு அடியிலான மின்சார பரிமாற்றத்திட்டத்துக்கு அதிகளவு செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்று இலங்கைஅரசாங்கம்அச்சம்கொண்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் இந்தியா சேது சமுகத்திரத் திட்டத்தை முன்னெடுத்தால் இந்தத் திட்டம் இன்னும் இலங்கைக்கு பாதகங்களை ஏற்படுத்தும் என்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## சென்னை நீதிமன்றின் கே.பிக்கு எதிரான ஆணை இலங்கை நாடாளுமன்றில்

### ஜயலத் சமர்ப்பிப்பு

விடுதலைப் புலிகளின் பிரதான ஆயுதக் கொள்வனவாளராக இருந்த கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதனுக்கு எதிராக சென்னை நீதிமன்றம் ஒன்று அனைத்துலக பொலிஸாருக்குபிறப்பித்ததேடுதல்ஆணையின் பிரதி இலங்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஐ.தே.க. உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தன இந்த தேடுதல் ஆணைய்யை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

ஆயுதங்களைப் பயன்படுத்தியமை, தீவிரவாதம், வெடிபொருட்கள் மற்றும் குற்றங்கள் தொடர்பாகவே கே.பிக்கு எதிராக சென்னை நீதிமன்றம் இந்த ஆணையை வழங்கியதாக ஜயலத் ஜெயவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன்சென்னைபிரதிபொலிஸ் அதிபரிடம் கே.பி. இலங்கையில் இருப்பது குறித்து தகவலை தான் கூறியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குற்றங்களுடன் தொடர்புடைய ஒருவருக்கு தங்குமிடம் அளிப்பதும் ஒரு குற்றமே. அண்மையில் சென்னை சென்றிருந்த போது கே.பி. இலங்கையில் இருப்பது குறித்து சென்னை பொலிஸாருக்கு எடுத்துக் கூறியுள்ளேன் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், அனைத்துலக பொலிஸின் இந்தப் பிடியாணை எப்போது பிறப்பிக்கப்பட்டது என்பது பற்றி அவர் குறிப்பிடவில்லை. (அ-2)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை- 2011 இல் 153 புள்ளிகள் பெற்று சித்தியடைந்த யா/ வல்வை சிவகுரு வித்தியாசாலையைச் சேர்ந்த



**செல்வி ஷிஷா வேலாயுதம்**

அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற

| | |
|---|---|
| செல்வி. பவிதா இரத்தினகுமார் | -144 |
| செல்வன்.சந்திரமோகன் சந்துரு | -133 |
| செல்வி.பொமினா யோகராசா | -133 |
| செல்வன். செல்லத்துரை கஜேந்திரன் | -132 |
| செல்வி.பிரியதர்சினி பாலச்சந்திரன் | -128 |
| செல்வி.கவிநிலா இராசசேகரம் | -125 |
| செல்வி.விந்துஜா டொனால்ட் | -124 |
| செல்வி.கஜந்தினி யசோதரன் | -115 |
| செல்வன்.பரமானந்தராசா யசிதரன் | -112 |
| செல்வி. மதுஷா விஜயகுமார் | -108 |
| செல்வன்.மணிவண்ணன் மதுஷன் | - 107 |
| செல்வன்.தயானந்தராசா தயாபரன் | -101 |
| செல்வி. தனுசியா தயானந்தன் | -101 |

ஆகியோரையும் பாராட்டுவதுடன் இவர்களை நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியை திருமதி ந.மணிராஜன் ஆகியோரையும் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

பாடசாலை அபிவிருத்தி சங்கம்,
வல்வை சிவகுரு வித்தியாசாலை, வல்வெட்டித்துறை

(சி-5091)





★1082-பார்சிலோனா மன்னன் இரண்டாம் ரமோன் பெரெங்கெர் கொல்லப்பட்டான்.

★1360-பிரெஞ்சு நாணயம் பிராங்க் அறிமுகப்படுத்தப்பட்டது.

★1492-கொலம்பஸ் ஹிஸ்பனியோலா தீவை அடைந்தார். இத்தீவை அடைந்த முதலாவது ஐரோப்பியர் இவரே.

★1497-போர்த்துக்கல்லின் மன்னன் முதலாம் மனுவேல் யூதர்கள் அனைவரும் கிறிஸ்தவத்துக்கு மதம் மாறுமாறும் அல்லது நாட்டை விட்டு வெளியேறுமாறும் பணித்தான்.

★1746-ஸ்பானிய ஆட்சிக்கெதிராக ஜெனோவாவில் கிளர்ச்சி ஆரம்பமானது.

★1848-கலிபோர்னியாவில் பெருமளவு தங்கம் கண்டுபிடிக்கப்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி ஜேம்ஸ் போக் அறிவித்தார்.

★1893-மின்சாரத்தில் இயங்கும் தானுர்ந்து அறிமுகமானது.

★1896-சென்னை கன்னிமாரா பொது நூலகம் ஆளுநர் சர் ஆர்தர் ஹாவ்லக் என்பவரால் பொது மக்களுக்காகத் திறந்து விடப்பட்டது.

★1933-யூட்டா 36 ஆவது மாநிலமாக ஐக்கிய அமெரிக்காவுடன் இணைந்தது.

★1934-இத்தாலியப் படைகள் அபிசீனியாவின் வால் நகரத்தைத் தாக்கின.

★1936-சோவியத் ஒன்றியம் தனது புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தியது. கிர்கிஸ்தான் சோவியத் ஒன்றியத்திற்குள் முழுமையான குடியரசாக அறிவிக்கப்பட்டது.

★1941-இரண்டாம் உலகப் போர்: பின்லாந்து, ஹங்கேரி, ருமேனியா நாடுகளின் மீது பிரித்தானியா போரை அறிவித்தது.

★1941-இரண்டாம் உலகப் போர்: கியோர்கி சூக்கொவ் தலைமையில் சோவியத் படைகள் ஜேர்மனிய ஆக்கிரமிப்புக்கு எதிராக மொஸ்கோவில் பெரும் தாக்குதலைத் தொடுத்தன.

★1957-இந்தோனேசியாவில் இருந்து 3 இலட்சத்து 26 ஆயிரம் டச்சு மக்களும் வெளியேற்றப்பட்டனர்.

★1958-STD தொலைபேசி இணைப்பு சேவை ஐக்கிய இராச்சியத்தில் இரண்டாம் எலிசபெத் மகாராணியால் ஆரம்பிக்கப்பட்டது.

★1969-அமெரிக்க படைத்துறை உயர் ஆய்வு நிறுவனத்தால் இணையம் நிறைவேறியது.

★1969-மை லாய் படுகொலைகள் தொடர்பான தகவல்களை லைஃப் இதழ் வெளியிட்டது.

★1978-சோவியத் ஒன்றியம் ஆப்கானிஸ்தானுடன் நட்புறவு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.

★1983-ஆர்ஜெண்டீனாவில் இராணுவ ஆட்சி கலைக்கப்பட்டது.

★2003-தெற்கு ரஷ்யாவில் தொடருந்து ஒன்றில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 46 பேர் உயிரிழந்தனர்.

★2003-இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் குளிர்திரவ ஏவுகணையை வெற்றிகரமாக சோதித்திருப்பதாக அறிவித்தது.

★2006-பிஜியில் இராணுவப் புரட்சி மூலம் அதன் இராணுவத் தளபதி வொரெக் பைனிமரமா அரசைக் கைப்பற்றினார்.

★2006-இந்திய நடுவண் அரசில் நிலக்கரித்துறை அமைச்சராக இருந்த சிபு சோரன் 1994 இல் அவரது உதவியாளரைக் கொலை செய்த குற்றத்துக்காக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டார்.

**பிறப்புக்கள்**

★1782-மார்ட்டின் வான் பியூரன், அமெரிக்காவின் 8 ஆவது குடியரசுத் தலைவர் (இ.1848)

★1901-வேல்ட் டிஸ்னி, உலகப் புகழ் பெற்ற ஓவியர் (இ.1966)

★1901-வேர்னர் ஐசன்பேர்க், ஜேர்மனிய இயற்பியலாளரும், நோபல் பரிசு பெற்றவரும் (இ.1976)

★1966-தயாநிதி மாறன், இந்தியாவின் தொலைத் தொடர்பு தகவல் தொடர்புத் துறையின் நடுவண் அமைச்சர்

★1985-ஜாஷ்ஸ்மித், அமெரிக்கக் கூடைப் பந்தாட்டக்காரர்

**இறப்புக்கள்**

★1791-மோட்ஸார்ட், ஐரோப்பிய செவ்வியல் இசையமைப்பாளர்(பி.1756)

★1926-குளோட் மொனே, பிரெஞ்சு ஓவியர் (பி.1840)

★1950-ஸ்ரீ அரவிந்தர்,இந்திய ஆன்மீகவாதி (பி.1872)

★1954-கல்கி கிருஷ்ணமூர்த்தி, தமிழ் எழுத்தாளர் (பி.1899)

**சிறப்பு நாட்கள்**

★தாய்லாந்து- தேசிய தினம், தந்தையர் தினம்

★பெல்ஜியம், செக் குடியரசு, நெதர்லாந்து, ஐக்கிய இராச்சியம்- புனித நிக்கலஸ் மாலை



★1879-சைவ ஆன்மீகவாதியும் தமிழ் உரை நடையின் தந்தையுமான ஆறுமுக நாவலரின் நினைவு தினம்

## முல்லைப்பெரியாறு தொடர்பான பேச்சில் தமிழக அரசு பங்கேற்காது

### தமிழக தலைமைச்செயலாளர்

முல்லைப்பெரியாறு அணை தொடர்பாக டில்லியில் இன்று திங்கட்கிழமை நடைபெறும் பேச்சுவார்த்தையில் தமிழக அரசு பங்கேற்காது என்று தமிழக தலைமைச் செயலாளர் தேவேந்திரநாத் சாரங்கி அறிவித்துள்ளார்.

முல்லைப்பெரியாறு அணை தொடர்பாக உச்ச நீதிமன்றம் அமைத்துள்ள குழுவின் முன்பு ஆஜராவதற்கான தமிழக அதிகாரிகள் டில்லி செல்கின்றனர். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இரு மாநில அதிகாரிகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தைக்கு மத்திய நீர் வளத்துறை அமைச்சகம் ஏற்பாடுகளை செய்து வந்தது.

ஆனால் உச்ச நீதிமன்றத்தில் முல்லைப் பெரியாறு அணை தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் அதிகாரபூர்வமற்ற இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதில்லை என்று தமிழக அரசு முடிவு எடுத்துள்ளது.

முல்லைப்பெரியாறு அணை அமைந்துள்ள பகுதியில் கடந்த 5 மாதங்களில் பலமுறை நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக அணை உடையும் அபாயம் இருப்பதாகவும் கேரள அரசு கூறிவருகிறது. இதையடுத்து இரு மாநிலங்களுக்கிடையே பதற்றமான சூழல் ஏற்பட்டது. இந்நிலையில் உச்ச நீதிமன்றத்தின் அதிகாரம் அளிக்கப்பட்ட குழு விசாரணை நடத்தி வரும் போது அதிகாரபூர்வமற்ற பேச்சுவார்த்தையில் பங்கேற்க வேண்டாம் என்று தமிழக அரசு முடிவு எடுத்துள்ளது.

(அ-2)

## மீனவர் பிரச்சினையில் தமிழகத்தின் நலனைக்காக்க மகஜர் கையளிப்பு



(சென்னை)

முல்லைப்பெரியாறு மீனவர் பிரச்சினையில் தமிழகத்தின் நலனைக் காக்க வலியுறுத்தி ஆளுநர் கே. ரோசய்யாவிடம் தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் மனு ஒன்றை அளித்துள்ளார்.

கிண்டி ஆளுநர் மாளிகையில் நேற்று காலை ஆளுநரை சந்தித்த அவர், கோரிக்கைகள் அடங்கிய மனுவை அளித்தார். அவருடன் பண்ருட்டி ராமச்சந்திரன் உட்பட தே.மு.தி.க எம்.எல். ஏக்கள் 26 பேர் சென்றனர்.

தனது மனுவில் விஜயகாந்த் கூறியிருப்பதாவது, முல்லைப் பெரியாறு அணை பலவீனமாக இருப்பதாக கூறி 132 அடி வரை மட்டுமே அணையில் நீரை தேக்க வேண்டும் என்று 1979 ஆம் ஆண்டு தமிழக அரசுக்கு கேரள அரசு கோரிக்கை வைத்தது. அதனைத்தொடர்ந்து மத்திய நீர்வள ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி பழுது பார்க்கும் பணியை தமிழக அரசு மேற் கொண்டது. அணைபலமாக இருப்பதும் உறுதிப்படுத்தப்பட்டது. அணை பலமாக இருப்பதால் 156 அடிவரை தண்ணீர் தேக்க அனுமதிக்க வேண்டும் என்கிற தமிழகத்தின் கோரிக்கையை ஏற்காமல் அணை பலவீனமாக இருப்பதாக கேரளம் பிரசாரம் செய்துவருகிறது.

இந்தப்பிரச்சினை தொடர்பாக தமிழக அரசு தொடர்ந்த வழக்கில் அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆனாலும் கேரள அரசு திட்டமிட்டு வதந்திகளைப் பரப்பிவருகிறது.

புதிய அணைகட்ட முயற்சிப்பதுடன் அணையின் நீர்மட்டத்தை 120 அடியாக குறைக்கவும் நடவடிக்கை எடுத்துவருகிறது. எனவே முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தவும் கேரளத்தின் தவறான பிரசாரத்தை தடுக்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**தமிழக மீனவர் பிரச்சினை**

இராமேஸ்வரத்தில் இருந்து மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து தாக்கப்பட்டு வருகின்றனர். இதனால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது.

இப்பிரச்சினையில் மத்திய அரசு தலையிட்டு 1974 இல் இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட மீன் பிடி ஒப்பந்தத்தை அமுல்படுத்த வேண்டும்.

இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக மத்திய அரசு ரூபா ஆயிரத்து319 கோடியில் 49 ஆயிரம் வீடுகள் கட்டித்தருவதை வரவேற்கிறோம்.

அதுபோல தமிழக மீனவர்களின் நலன்களை பாதுகாக்கவும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க ஆளுநர் வலியுறுத்த வேண்டும் என அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

(அ-2)

## பழம்பெரும் இந்தி நடிகர் தேவ் ஆனந்த் மரணம்



(லண்டன்)

பழம்பெரும் இந்தி திரைப்பட நடிகரும் எவர்கிரீன் ரொமான்டிக் சுப்பர்ஸ்டார் என்று அழைக்கப்பட்டவருமான தேவ்ஆனந்த் மாரடைப்பால் காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 88 ஆகும்.

கடந்த சில மாதங்களாக உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த தேவ்ஆனந்த் மருத்துவப் பரிசோதனைக்காக லண்டன் சென்றுள்ளார். இந்நிலையில் லண்டனில் நேற்று முன்தினம் இரவு மாரடைப்பால் தேவ் ஆனந்த் மரணமடைந்ததாக அவருடைய உறவினர்கள் தெரிவித்தனர்.

கடந்த 1946 இல் ஹம் ஏக் பெயின் படம் மூலம் நடிகராக அறிமுகமான தேவ் ஆனந்த் ஜித்தி என்ற படம் மூலம் 1947 இல் இருந்து சுப்பர்ஸ்டாராக வலம் வரத் தொடங்கினார்.

பேயிங் கெஸ்ட், பாஸி ,ஜெவல் தீஃப், சிஐடி, ஜானி மேராநாம், அமீர் கரீப், வாரண்ட் என தேவ் ஆனந்தின் வெற்றிப் படங்களின் பட்டியல் மிகவும் நீளமானது. இந்திய சினிமாவுக்கு ஆற்றிய பணியைச் சிறப்பிக்கும் வகையில் தேவ் ஆனந்துக்கு 2001 இல் பத்ம பூஷண் விருதும் 2002 இல் தாதா சாகேப் பால்கே விருதும் வழங் கிய இந்திய அரசு கௌரவித்துள்ளது.

தேவ் ஆனந்தின் மறைவு இந்தித்திரைப்பட உலகை மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது. (அ-2)

## குண்டுத் தாக்குதலில் 10பேர் உயிரிழப்பு

மாவோயிஸ்ட்டுக்கள் நிகழ்த்திய வெடிகுண்டு தாக்குதலில் இருந்து ஜார்க்கண்ட் மாநில சுயேச்சை எம்.பி இந்தர் சிங் நம்தர் அதிர் ஷ்டவசமாக உயிர் தப்பினார். ஆனால் அவருக்கு பாதுகாப்பாகச் சென்ற பொலிஸாரில் 6 பேரும் பொதுமக்களில் நால்வரும் உயிரிழந்தனர்.

ஜார்க்கண்டில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுவிட்டு அங்குள்ள லத்திஹார் நகருக்கு காரில் இந்தர்சிங் வந்துகொண்டிருந்தார். அவருடன் பாதுகாப்பு படையினரும் வந்தனர். அப்போது வீதியில் மறைத்துவைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்தது. இந்தர் சிங் இருந்த காருக்கு பின்னால் வந்த பொலிஸ் ஜீப் இதில் சிக்கி வெடித்துச் சிதறியது. இத்தாக்குதலுக்கு பிரதமர் மன்மோகன் சிங் கண்டனம் தெரிவித்துள்ளார். (அ-2)

## பாரதச் செய்திகள்

## 2 ஜி ஊழல் வழக்கில் சிதம்பரத்தையும் இணைக்கக்கோரிய வழக்கு ஒத்திவைப்பு

(புதுடில்லி)

2ஜி அலைக்கற்றை ஊழல் வழக்கில் அப்போதைய நிதி அமைச்சரும் இப்போதைய உள்துறை அமைச்சருமான ப.சிதம்பரத்தைச் சேர்க்க வேண்டும் என்று தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பை சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றம் எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு ஊழல் வழக்கு பாட்டியாலா சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கில் ப.சிதம்பரத்தையும் சேர்க்க வேண்டும்.

அவருக்கு எதிராக மூத்த சி.பி.ஐ அதிகாரிகள் உள்ளிட்ட சாட்சிகளை விசாரிக்க வேண்டும் என்று ஜனதா கட்சி தலைவர் சுப்பிரமணிய சுவாமி வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கில் ஆ.ராசாவுக்கும் சிதம்பரத்துக்கும் இடையே எழுதப்பட்ட கடிதங்கள், பரிமாற்றப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை நீதிமன்ற உத்தரவுப்படி சுப்பிரமணிய சுவாமிக்கு சி.பி.ஐ வழங்கியது. இந்த வழக்கின் விசாரணை சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றத்தில் நேற்று முன் தினம்நடைபெற்றபோதுசுப்பிரமணிய சுவாமி ஆஜராகி 100 பக்கங்கள் கொண்ட ஆதாரங்களை நீதிபதியிடம் வழங்கினார்.

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு 2001 ஆம் ஆண்டு விலைக்கே வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அப்போதைய தொலைத் தொடர்பு அமைச்சர் ஆ.ராசாவும் அப்போதைய நிதியமைச்சர் சிதம்பரமும் ஆலோசித்து முடிவு எடுத்துள்ளனர். ஆகையால் முன்னாள் அமைச்சர் ராசா மீது பதிவு செய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் சிதம்பரம் மீதும் பதிவு செய்யப் படவேண்டும். ஸ்வான் டெலிகொம் யூனிடெக் ஆகிய தனியார் நிறுவனங்கள் இந்தியாவில் தொழில் செய் யக்கூடாது என்று மத்திய உள்துறை அமைச்சகம் எச்சரித்துள்ளது. அப் படி இருந்தும் அந்தப் பெரு நிறுவ னங்களும் 2ஜி உரிமங்கள் வழங் கப்பட்டுள்ளன. ஆ.ராசா எடுத்துள்ள அனைத்து முடிவுகளிலும் சிதம்பரத்துக்கும் சமமான பங்கு உள் ளதுஎன்று சுப்பிரமணியசுவாமி கூறினார்.


இதைக்கேட்ட நீதிபதி ஓ.பி. சைனி இந்த வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 8 ஆம் திகதி வெளியிடப்படும் என்று தெரிவித்தார். விசாரணைக்கு பிறகு செய்தியாளர்களிடம் பேசிய சுப்பிரமணியசுவாமி, சிதம்பரத்துக்கு எதிரான சாட்சிகளை விசாரணைக்கு அழைப்பது, சிதம்பரத்தை விசாரணைக்க அழைப்பது ஆகிய இரு கேள்விகள் தொடர்பாக மேற்படி திகதியில் நீதிமன்றம் முடிவெடுக்கும்.

(அ-2)



ஸ்பெக்ட்ரம் வழக்கில் இருந்து பிணையில் வெளிவந்த கனிமொழியை சென்னை சி.ஐ.டி காலனியில் உள்ள அவரது வீட்டில் தி.மு.க பொதுச் செயலாளர் அன்பழகன் மற்றும் ஆற்காடு வீராசாமி ஆகியோர் சால்வை அணிந்து வரவேற்றதை படத்தில் காணலாம்.

## இந்தியர்கள் பதுக்கியுள்ள கறுப்புப்பண விபரங்கள் வெளியிடப்படும்- விக்கிலீக்ஸ் தகவல்



வெளிநாட்டு வங்கிகளில் இந்தியர்கள் பதுக்கி வைத்துள்ள கறுப்புப்பண விபரங்களை அடுத்த வருடம் வெளியிடப் போவதாக விக்கிலீக்ஸ் நிறுவுநர் ஜூலியன் அசாஞ் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வங்கிகளில் இந்தியர்கள் பதுக்கி வைத்துள்ள கறுப்புப்பணம் பற்றிய தகவல்கள் அவர்களின் வங்கிக் கணக்குகளுடன் எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு வெளியிடப்படும் என விக்கிலீக்ஸ் நிறுவுநர் தெரிவித்துள்ளார்.

இந்தியத் தலைநகர் டில்லியில் நடந்த ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை நிகழ்ச்சி ஒன்றில் வீடியோ மாநாடு மூலம் லண்டனில் இருந்து கலந்து கொண்ட அசாஞ் கூறியதாவது, மத்திய புலனாய்வுத் துறை மின்னஞ்சல்களில் இருந்து சீன உளவுத்துறை தகவல்களைத் திருடியதற்கு என்னிடம் ஆதாரங்கள் உள்ளன. இந்தியாவின் தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் தொடர்பு களை மேற்கத்தேய நாடுகள் தொடர்ந்து ஒட்டுக் கேட்ட வருகின்றன. அதனால் இந்தியா பாதுகாப்பான தகவல் தொடர்பைக் கையாள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். (அ-2)

# டமாஸ்கஸ்ஸில் போராட்டம்; 25 இற்கும் மேற்பட்டோர் பலி



சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் அசாத்தின் 30 ஆண்டு கால ஆட்சிக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். தற்போது போராட்டம் கலவரமாக மாறியுள்ளது. எனவே கலவரக்காரர்களை அடக்க இராணுவம் துப்பாக்கி சூடு நடத்தி வருகின்றது. அதில் சுமார் 3 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் டமாஸ்கஸ்சில் போராட்டம் நடத்திய மக்கள் மீது இராணுவம் நடத்திய தாக்குதலில் 25 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இது அரபு நாடுகள் கூட்டமைப்புக்கு கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதை தொடர்ந்து அரபு நாடுகளில் இருக்கும் ஜனாதிபதி அசாத்தின் அதிகாரிகள் சொத்துக்கள், வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள பணம் மற்றும் தங்க நகைகளை முடக்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் குழுவிற்கு கோரிக்கை விடுத்தது. இந்த கோரிக்கையை அரபு நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

எனவே சிரியாவை சேர்ந்த 19 அதிகாரிகளின் சொத்துக்கள் முடக்கப்படுகின்றன. மேலும் அவர்கள் அங்கு பயணம் செய்ய தடை விதிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே ஐரோப்பிய நாடுகள் மற்றும் துருக்கியும் இந்த கோரிக்கையை ஏற்றுள்ளன.

அரபு நாடுகளின் இந்த முடிவுக்கு ஜனாதிபதி அசாத்தின் ஆதரவாளர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். டமாஸ்கஸ் நகரில் ஆயிரக்கணக்கான மக்கள் திரளாக கூடி நின்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். (அ-2)

# ஆப்கானில் 26 இலட்சம் பேர் வறுமையில் அவதிப்படுகின்றனர்

## அந்நாட்டு அரசு தெரிவிப்பு

(மஸார் இ ஷரீப்)

போரால் சீரழிந்துள்ள ஆப்கானிஸ்தானின் வட பகுதியில் நிலவி வரும் கடும் பஞ்சத்தால் 26 இலட்சம் பேர் வறுமை மற்றும் பசியின் பிடியில் சிக்கி அவதிப்படுவதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

ஆப்கானின் வடபகுதியில் உள்ள 14 மாகாணங்களில் கடந்த 8 ஆண்டுகளாக கடும் பஞ்சம் நிலவுகின்றது. அந்த மாகாணங்களில் உள்ள நீர்நிலைகள் அனைத்தும் வற்றி விட்டன. ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தங்கள் வாழ்விடத்தை காலி செய்து வேறிடங்களுக்கு செல்கின்றன.

நூற்றுக்கணக்கான குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் அவதியுறுகின்றனர். சாப்பாட்டுக்காக மக்கள் தங்கள் கால்நடைகளை விற்று வயிற்றுப்பாட்டை சமாளித்து வருகின்றனர். இந்நிலையில் பனிக்காலம் நெருங்கி வருவதால் அரசு மற்றும் நிவாரண அமைப்புக்கள் மக்கள் பனிக்காலத்தை சமாளிப்பதற்காக பல்வேறு ஏற்பாடுகளை விரைந்து செயற்படுத்தி வருகின்றன.

பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடும் குளிர் அடிக்கும் என்பதால் அங்குள்ள குடும்பங்கள் மிகவும் அபாயக்கட்டத்தில் உள்ளதாக அதி காரிகள் கூறுகின்றனர். (அ-2)

# இந்திய திரைப்படங்களை தடைசெய்வது குறித்து பதிலளிக்க கோரிக்கை- லாகூர் உயர் நீதிமன்றம்

(லாகூர்)

இந்தியத் திரைப்டங்களை வெளியிடத் தடை கோரும் மனு குறித்து இரு வாரங்களுக்குள் பதிலளிக்கும்படி பாகிஸ்தான் அரசுக்கு லாகூர் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தியாவின் பாலிவுட் திரைப்படங்கள் இந்தியாவில் வெளியான அன்று அல்லது மறுநாள் பாகிஸ்தானிலும் வெளியாகிவிடும். முஷராப்புக்கு முன்பு வரை இந்திய படங்கள் பாகிஸ்தானில் வெளியாகத்தடை விதிக்கப்பட்டிருந்தது. முஷராப்பின் ஆட்சியில் அத் தடை விலக்கப்பட்டது. இதனால் பாலிவுட் படங்களுக்கு அங்கு அமோக வரவேற்பு உள்ளது.

இந்நிலையில் பாக்.திரைப்பட தயாரிப்பாளர் கம்ரான் இஜாஸ் லாகூர் உயர்நீதிமன்றில் இந்தியத்திரைப்படங்களை பாகிஸ்தானில் வெளியிடத் தடைகோரி மனு தாக்கல் செய்திருந்தார். இந்தியப் படங்களின் வரவால் பாக். திரைப்பட உலகம் பெரும் நட்டத்தை சந்திக்க நேரிடுவதாக அவர் தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வழக்கு விசாரணையில் உரிய பதில்களை இன்னும் இரு வாரங்களுக்குள் அளிக்க வேண்டும் என பாக்.வர்த்தக அமைச்சகம் மற்றும் திரைப்பட தணிக்கை வாரியத்துக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-2)

# அமெரிக்காவில் 2012 நவம்பரில் ஜனாதிபதித்தேர்தல்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் அடுத்தாண்டு நவம்பரில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. அதற்கான பிரசாரத்தில் ஜனாதிபதி பராக் ஒபாமா ஈடுபட்டுள்ளார். இத்தேர்தலில் ஒபாமா வெற்றி பெற்று மீண்டும் ஜனாதிபதியாவார் என முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிங்டன் கூறியுள்ளார்.

மேலும் கிளின்டன் கூறுகையில், அவரை யாரும் தோற்கடிக்க முடியாது என கூறினார். அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் நேற்று முன்தினம் வெள்ளை மாளிகை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தற்போதைய துணை ஜனாதிபதி ஜோ பிடன் தான் அடுத்தாண்டு ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக கட்சியின் சார்பில் துணை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே அடுத்த ஆண்டு நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் ஹலாரி கிளிண்டன் துணை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுவார் என வெளியான தகவலை வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் மறுத்துள்ளார். (அ-2)






அமெரிக்கா தலைநகர் வோஷிங்டனில் கட்டடத்துறை கருத்தரங்கில் அந்நாட்டு ஜனாதிபதி ஒபாமா மற்றும் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிங்டன் கலந்து கொண்டு உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

# மீண்டும் பொருளாதார மந்தநிலை ஏற்படும்

## ஐ.நா. எச்சரிக்கை

எதிர்வரும் 2012 ஆம் ஆண்டில் மீண்டும் பொருளாதார மந்தநிலை ஏற்படலாம் என ஐ.நா. எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த முறை பொருளாதார மந்தநிலை ஏற்பட்ட போது உதவி செய்த இந்தியாவும் சீனாவும் இந்த முறை பாதிப்புக்கு உள்ளாகலாம் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த நிதியாண்டில் ஏற்பட்ட சர்வதேச பொருளாதார மந்த நிலையிலிருந்த உலகம் இன்றளவும் மீளாத காரணத்தினால் மந்த நிலை ஏற்படும் அபாயத்தில் உள்ளதாக ஐ.நா. எச்சரித்துள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளில் ஏற்படும் பாதிப்புக்கள் காரணமாக ஏற்பட்டுளள இந்த பொருளாதார மந்த நிலையின் போது வளரும் நாடுகளும் பாதிக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# சூடான் அமைச்சரை கைது செய்ய சர்வதேச நீதிமன்றம் உத்தரவு

சூடானின் பாதுகாப்பு அமைச்சரை கைது செய்ய சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடிவிறாந்து பிறப்பிக்க உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

டார்பூரில் மேற்கொண்ட குற்றச்செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில் சூடான் பாதுகாப்பு அமைச்சர் கைது செய்யப்படவுள்ளார்.

சூடான் பாதுகாப்பு அமைச்சர் அப்டெல் ரஹிம் மொஹமட் ஹுசெய்ன் மனிதாபிமானத்திற்கு எதிரான மற்றும் யுத்தக்குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளதாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் பிரதம சட்டத்தரணி லுயிஸ் மொரினோ ஒகம்பா தெரிவித்துள்ளார்.

2003 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரையில் டார்பூரில் இடம்பெற்ற பாரிய வன்முறைச் சம்பவங்களுடன் சூடான் பாதுகாப்பு அமைச்சருக்கு தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டமைக்காக சூடானின் ஜனாதிபதி ஓமர் அல் பஷார், ஏற்கனவே சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் குற்றவாளி என அறிவிக்கப்பட்டுள்ளார்.

எவ்வாறாயினும் இந்தக் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை என சூடானின் சிரேஷ்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மேற்குலகின் கருவியாக செயற்பட்டு வருகின்றது என குறிப்பிட்டுள்ளனர்.

சூடான் பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராக பிடிவிறாந்து உத்தரவினை பிறப்பிக்குமாறு சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் பிரதம அதிகாரி கோரியுள்ளார்.

பிடிவிறாந்து உத்தரவு பிறப்பித்தல் குறித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் நீதவான்கள் ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# சிரியா மீதான பொருளாதாரத்தடையை கடுமையாக அமுல்படுத்தும் அமெரிக்க மற்றும் ஐரோப்பியஒன்றியம்

சிரியா நாட்டின் மீதான பொருளாதாரத் தடையை கடுமையாக அமுல்படுத்த அமெரிக்காவும் ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளும் முடிவெடுத்துள்ளன. இந்நாடுகளின் பிரதிநிதிகள் இதற்கான முடிவுகளை நேற்று முன்தினம் அறிவித்தனர்.

கடந்த மார்ச் மாதத்திலிருந்து சிரிய ஜனாதிபதி அல் பஷாரின் ஆட்சியை எதிர்த்து போராட்டம் நடைபெற்று வருகின்றது.

அரச படைகளுக்கும் போராட்டக்காரர்களுக்குமான மோதலில் இதுவரை 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இறந்திருக்கலாம் என்று ஐ.நா. சபை தெரிவித்துள்ளது.

போராட்டம் தீவிரமடைந்திருக்கும் நகரங்களான ஹோம்ஸ், ஹமா, தாரா ஆகிய இடங்களில் அரச படைகள் தாக்குதல் நடத்தியதாகவும் இதில் 16 பேர் உயிரிழந்ததாகவும் 20 க்கும் மேற்பட்டோர் சிறைபிடிக்கப்பட்டதாகவும் சிரியாவிலுள்ள மனித உரிமை அமைப்புக்கள் தகவல் தெரிவித்துள்ளன.

இந்த நிகழ்விற்கு பின்னரே அந்நாட்டின் மீதான பொருளாதாரத் தடையை மேலும் அதிகரிக்க மேற்கத்தைய நாடுகள் முடிவெடுத்துள்ளன.


இறப்பு விபர்ம் குறித்து கருத்துத் தெரிவித்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத் தலைவர் நவநீதம்பிள்ளை, தங்களுக்கு கிடைத்திருக்கும் தகவலின் படி இறப்பு எண்ணிக்கை மேலும் கூடுதலாக இருக்க வாய்ப்புண்டு என்று தெரிவித்தார்.

எரிவாயு, பெற்றோலியப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்களுக்கான தொழில்நுட்பக்கருவிகள் ஆகியவற்றை சிரியாவுக்கு ஏற்றுமதி செய்யவும் நிதிச் சந்தையில் சிரியாவின் கடன் பத்திரங்களை விற்பனை செய்யவும் ஐரோப்பிய கூட்டமைப்பு தடை விதித்துள்ளது.

மேலும் ஐரோப்பாவிலிருந்து சிரியாவுக்கு மென்பொருள் ஏற்றுமதி செய்யவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# சூரியனைவிட பலமடங்கு பெரிதான 18 கிரகங்கள்

## சர்வதேச விஞ்ஞானிகள் குழு



சூரியனை விட பல மடங்கு பெரிதாக 18 புதிய கிரகங்களை விண்வெளியில் கண்டு பிடித்துள்ளதாக சர்வதேச விஞ்ஞானிகள் குழு தெரிவித்துள்ளது. இது பற்றி வோஷிங்டனில் குழுவின் தலைவர் ஜான் ஜான்சன் கூறுகையில், நட்சத்திரக் கூட்டத்தை சுற்றியுள்ள மிக அதிக கிரகங்களை கண்டுபிடித்து அறிவிக்கும் முதல் முயற்சி இது. 18 கிரகங்களை கெப்ளர் ஆராய்ச்சி மூலம் கண்டுபிடித்துள்ளோம். அனைத்தும் சூரியனை விட பலமடங்கு பெரியவை. இதற்காக 300 நட்சத்திரங்களை சுற்றி தீவிர ஆராய்ச்சி நடந்தது என்றார். (அ-2)

# திருட்டுச் சம்பவங்களுடன் ஒன்பதுபேர் கைதாகினர்

(கொழும்பு)

வர்த்தக நிலையங்களில் திருட்டு சம்பவங்களில் ஈடுபட்டுவந்த மூன்று குழுக்களைச் சேர்ந்தவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பிலிருந்து மாரவில மற்றும் கொழும்பிலிருந்து காலி வரையான வீதிகளின் இரு மருங்கிலும் உள்ள வர்த்தக நிலையங்களில் சந்தேகநபர்கள் பொருட்களை திருடி வந்துள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்களம் குறிப்பிடுகிறது.

இந்தச் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஒன்பது பேர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் சந்தேகநபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-2)

# உறவுப்பால நிகழ்வையொட்டி தென்பகுதி இளையோர் மன்னாருக்கு வருகை

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் இளைஞர், யுவதிகளுக்கான வடக்கு-தெற்கு உறவுப்பால நிகழ்ச்சியின் ஒரு கட்டமாக தெற்கிலிருந்து 50 பெரும்பான்மையின இளைஞர், யுவதிகள் கடந்த வெள்ளிக்கிழமை மன்னாருக்கு வருகை தந்துள்ளதாக மன்னார் தேசி இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப்பணிப்பாளர் முனவ்பர் தெரிவித்தார்.

இவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மாவட்டமான அம்பாந்தோட்டையிலிருந்து வருகை தந்துள்ளதாகவும் இவர்கள் மன்னார் தாழ்வுப்பாடு கிராமத்திலுள்ள இளைஞர் ,யுவதிகளுடைய வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாளை மறுதினம் மன்னாரில் தங்கவுள்ள இவர்கள் சிரமதானப் பணிகள், சர்வமத நிகழ்வுகள், மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற இடங்கள் மற்றும் ஆலயங்களை பார்வையிடுதல் போன்றவற்றில் ஈடுபடவுள்ளனர்.

இதேவேளை, இந்த இளைஞர், யுவதிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று முன்தினம் சந்தித்தார். (அ-2)

# மிக அரிதான மஞ்சள்நிற வைரம் ஏலத்தில் விற்பனை

உலகில் மிக அரிதான மஞ்சள் நிற வைரம் 10.9 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

எனினும் வரி, தரகுக்கட்டணம் போன்றவற்றை சேர்த்து 12.36 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் இடம்பெற்ற ஏலத்தின் போதே இந்த அதிசிறந்த வைரம் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வைரத்தை கொள்வனவு செய்வதற்காக தொலைபேசி மூலமும் பெயர் குறிப்பிடப்படாத பலர் கோரிக்கைகளை முன்வைத்திருந்ததாக ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த வைரத்தை 11 தொடக்கம் 15 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு ஏலத்தில் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

கடந்தவருடம் தென்னாபிரிக்காவில் வைத்து இந்த வைரம் கண்டெடுக்கப்பட்டிருந்தது. (அ-2)

# ஆளும் அரசாங்கம் பொதுமக்களின் விருப்பத்திற்கு மாறாக செயற்படாது

## ஜனாதிபதி தெரிவிப்பு

ஆளும் அரசாங்கமானது பொது மக்களின் விருப்பத்திற்கு எதிரான பாதையில் ஒருபோதும் செல்லாது என ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அரசாங்கம் தவறான பாதையில் செல்லுமானால் சரியான பாதையைக் காட்டுவதற்கான உரிமை மாநாயக்கர்களுக்கு உண்டு எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறே மாநாயக்கர்களும் செயற்படுவதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அம்பலாந்தோட்டையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சமய நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

2005 ஆம் ஆண்டு அரசாங்கத்தைப் பொறுப்பேற்கும் போது பல சவால்களுக்கு தாம் முகம் கொடுத்திருப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். எனினும் அனைத்து சவால்களும் தற்போது வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் எந்த ஒரு அரசாங்கமும் பல்வேறு விமர்சனங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

இவ்வாறான நிலையில் தமக்கு இந்த பதவியில் இருந்து இதைவிட சிறந்த பதவிக்கு செல்ல முடியாது என குறிப்பிட்ட ஜனாதிபதி அரசியலில் தமக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் குற்றச்சாட்டுக்கள் தமக்கு பழக்கப்பட்ட ஒன்று எனவும் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் இதனை தாம் பொருட்படுத்தப் போவதில்லை எனவும் தெரிவித்தார். (அ-2)

# பத்தாயிரத்து 993பேர் சமூகநோய்களுக்காக சிகிச்சை

(கொழும்பு)

வருடத்தின் இதுவரையான காலப்பகுதிகளில் பத்தாயிரத்து 993 பேர் சமூக நோய்களுக்காக சிகிச்சை பெற்றுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்களில் அதிகமானோர் பெண்கள் என சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

குறித்த காலப்பகுதிக்குள் ஆறாயிரத்து 464 பெண்களும் நான்காயிரத்து 509 ஆண்களும் சமூக நோய்களுக்காக சிகிச்சை பெற்றுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# ரயிலுடன்மோதி விபத்து; மூவர் பலி

(கொழும்பு)

குருணாகல் வெல்லவ பகுதியில் முச்சக்கரவண்டியொன்று ரயிலுடன் மோதி விபத்திற் குள்ளானதில் மூவர் உயிரிழந் துள்ளனர்.

விபத்தில் தந்தை உட்பட இரண்டு பிள்ளைகள் உயிரிழந்துள்ளதாக வெல்லவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று பிற்பகல் 2.15 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வெல்லவ பமுனுபொத்த பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளனர். (அ-2)

# காணி சுவீகரிப்பு சட்டமூலம் குறித்து தீர்ப்புக் கூறுவதற்கு நீதிமன்றம் மறுப்பு

(கொழும்பு)

நகர மற்றும் கிராமிய திட்டமிடல் கட்டளைச் சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம் தொடர்பாக தீர்ப்பளிக்காமலிருப்பதற்கு உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இச்சட்டமூலம் மாகாண சபைகளின் பரிசீலனைக்கு அனுப்பப்படாமையே இதற்குக் காரணமாகும்.

உயர் நீதிமன்றத்தின் இத்தீர்மானத்தை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

பொருளாதார சமூக வரலாற்று சுற்றாடல் மற்றும் சமய காரணங்களுக்காக மாநகர மற்றும் நகர பிரதேசங்களுக்குட்பட்ட காணிகளை அரசாங்கம் சுவீகரிப்பதற்கு வழிவகுக்கும் வகையில் இச்சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரசியலமைப்பின் 154 ஜி 3 ஷரத்தில் குறிப்பிட்டவாறு இச்சட்டமூலம் ஜனாதிபதியினால் மாகாண சபைகளின் பார்வைக்கு அனுப்பப்பட்டமை தொடர்பில் பிரதி சொலிசிற்றர் ஜெனரலின்ால் அறிவிக்கப்படவில்லை என பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்க மற்றும் கே.ஸ்ரீபவன், சந்திரா ஏக்கநாயக்க ஆகிய 3நீதிபதிகள் கொண்ட குழாம் தெரிவித்துள்ளது.

இச்சட்ட மூலம் மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட ஒரு விடயம் தொடர்பானது எனவும் அது ஜனாதிபதியினால் அனைத்து மாகாண சபைகளின் பார்வைக்கும் அனுப்பப்படாமல் அது சட்டமாகாது எனவும் உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது . (அ-2)

# மீனவர்கள் விடுவிக்காவிடில் மறியல் போராட்டம்

(இராமேஸ்வரம்)

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் இன்று திங்கட்கிழமை விடுதலை செய்யப்படாவிட்டால் நாளை செவ்வாய்க்கிழமை வீதி மறியல் மற்றும் புகையிரத மறியல் போராட்டம் நடத்தப்போவதாக மீனவ அமைப்புகள் அறிவித்துள்ளன.

இது குறித்து அந்த அமைப்புகள் கூறுகையில். அப்பாவி மீனவர்களை இலங்கை கடற்படை தொடர்ச்சியாக தாக்கியும் கைது செய்தும் வருகிறது. பலமுறை கோரிக்கை விடுத்தும் இந்த பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர மத்திய அரசு இலங்கை அரசுடன் பேசவில்லை என குற்றம் சாட்டியுள்ளது. (அ-2)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளராக இருந்து
அளப்பெரும் சேவையாற்றிய உத்தமரான



**உயர் திரு.வைரமுத்து செல்வராசா**
(SLEAS-I)
(வலயக்கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்)

அவர்கள் 01.12.2011 முதல் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளராக மாற்றலாகி வந்ததையிட்டு அகமகிழ்ந்து வரவேற்பதோடு அவர்கள் மேலும் பல பதவிஉயர்வுகள் பெற்று பல்லாண்டுகாலம் சேவை புரிய வாழ்த்துகின்றோம்.

யா/ கந்தர்மடம் சைவப்பிரகாச
வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

அதிபர்,
ஆசிரியர்கள்.

## சேவைநலன் பாராட்டு



**செல்வி புனிதா சுப்பிரமணியம்**
ஆசிரியர் (SLTS-I)

**சேவை விபரம்**

12.03.1984-14.08.1989 வரை
குளி/பண்டார கொஸ்வத்த முஸ்லிம் வித்தியாலயம்

15.08.1989-05.12.2011 வரை
யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்

ஆசிரியர் சேவையில் 29 வருடங்களையும் எமது பாடசாலையில் 22 வருடங்களும் சிறந்த அர்ப்பணிப்புள்ள ஓர் ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் இருந்து 05.12.2011 இல் ஓய்வு பெறும் செல்வி புனிதா சுப்பிரமணியம் ஆசிரியர் அவர்களை பல்லாண்டு காலம் நலமுடனும் மகிழ்வுடனும் வாழ்ந்திட எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச்சமூகம்,
யா/வேலாயுதம் மகா வித்தியாலயம், பருத்தித்துறை.

காலம் உண்மையைக் கண்டுபிடித்து உலகிற்கு வெளிப்படுத்திவிடும். - லத்தீன் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## பேச்சுவார்த்தை முறிவதும் தமிழருக்குத்தான் சாதகம்

பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக் குத் தீர்வுகிடைக்குமாக இருந்தால் அது தந்தை செல்வநாயகத்தின் காலத்திலேயே கிடைத்திருக்க வேண்டும்.

பேச்சுவார்த்தை மேசைகள் தமிழ் மக்களுக்கு ஒருபோதும் சாதகமானதாக அமையவில்லை.

மாறாக,பேச்சுவார்த்தை மேசையில் தமிழ்ப் பிரதிநிதிகள் இருந்ததன் காரணமாக தோல்வியும் ஏமாற்றமுமே எங்களுங்குக் கிடைத்தன என்பது பட்டறிந்த உண்மை.

இனிமேலும் பேச்சுவார்த்தை மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமென தமிழர் தரப்பில் யார் கருதினாலும் அவர்கள் யதார்த்தம் புரியாதவர்கள் அல்லது அவர்களிடம் உள் நோக்கம் உள்ளது என்றே பொருள் கொள்ள வேண்டும்.

நிலைமை இதுவாக இருக்கையில், அரசுக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை முறிவடைந்துவிட்டது அல்லது முறிவடைகின்றது என்ற தகவல் தமிழ் மக்களைப் பொறுத்தவரை எதிர்பார்க்கப் பட்டதே.

இனப்பிரச்சினைக்குத் தீர்வை முன்வைப் பதற்குத் தெரிவுக்குழு அமைத்தல் என்ற திட்டத்தால் அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தை முறிவடைவதற்கான நிலைமை தோன்றியதாகக் கூறப் படுகின்றது.

தமிழ்மக்களைப் பொறுத்தவரை இனப்பிரச் சினைக்கான தீர்வென்பது முக்கியம்.

அதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்ற நினைப்பு எம்மிடம் அறவே இல்லை.

ஒருகாலத்தில் விடுதலைப்புலிகளின் போராட்டம் உரிமையை வென்றெடுக்கும் எனத் தமிழ் மக்கள் நம்பினர்.

ஆனால் அது நடைமுறைப்படாமல் போயிற்று. இப்போது தமிழ்மக்களின் முழு நம்பிக்கையும் சர்வதேசத்தின் மீதே உள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதிலிருந்து எவ்வகையிலும் அரசு விலகமுடியாதென்பது அறுதியிட்ட உண்மை.

எனவே அரசு எத்தனை குளறுபடிகள் செய்தாலும் சர்வதேசக் கண்கள் இலங்கையை உன்னிப்பாக நோக்கிய வண்ணம் உள்ளது.

குறிப்பாக அமெரிக்காவும், கனடாவும் இலங்கை அரசின் இரட்டை நிலையைப் புரிந்து கொண்டுள்ளன.

எனவே பேச்சுவார்த்தை முறிவடைவது கூடத் தமிழ் மக்களுக்குச் சாதகமாக அமையும் வாய்ப்பே உள்ளதெனலாம்.

ஆகையால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகவும் இராஜதந்திரத்துடன் நடந்துகொள்ள வேண்டும்.

இலங்கை அரசு இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக இருந்தால், அதற்கு இருக்கக் கூடிய ஒரேஒரு வச்சிராயுதம் சர்வதேச அழுத்தமே.

ஆக, சர்வதேச அழுத்தத்தை அதிகரிக்கச் செய்வதைத் தவிர தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேறொன்றும் அறியாதிருக்க வேண்டும் பராபரமே.

# ஜனாதிபதியிடம் முறையிட்டால் பொன்சேகாவுக்கு மன்னிப்பு கிடைக்கும்?

## ஜனாதிபதியின் பேச்சாளர் தெரிவிப்பு

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு பொது மன்னிப்பு வழங்கப்படக் கூடிய சாத்தியம் காணப் படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுமன்னிப்பு வழங்குவது குறித்து சரத் பொன்சேகாவின் குடும்பத்தாரை சந்திக்கத் தயார் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு பேச்சாளர் பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார்.

பொது மன்னிப்பு வழங்குமாறு சரத் பொன்சேகாவின் குடும்பத்தார் நேரடியாக கோரிக்கை விடுத்தால் அது குறித்து கவனம் செலுத்தமுடியும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்கெனவே அறிவித்திருந்தமை குறிப் பிடத்தக்கது.

பொன்சேகாவின் குடும்பத்தினர் வெளிநாடுகளில் முறைப்பாடு செய்வதனை விடுத்து, நேரடியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்காக, இவரது குடும்பத்தினர் வெள்ளை மாளிகையிடம் முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

சர்வதேசத்தின் ஒத்துழைப்புடனே நீதியைப் பெற முடியும் என சரத் பொன் சேகாவின் புதல்வி அப்சரா தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கருத்து வெளியிட்ட போது பந்துல ஜயசேகர இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வேறு நாட்டு ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்வது எந்த வகையிலும் நியாயமாகாது. பல்லாயிரம் மைல் தொலைவில் உள்ள வெள்ளை மாளிகைக்கு மகஜர்களை அனுப்பி வைக்காது, அனோமா பொன்சேகா நேரடியாக ஜனாதிபதியிடம், சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு கோரினால், அந்தக் கோரிக்கை தொடர்பில் ஜனாதிபதி அனுதாப அடிப்படையில் கவனம் செலுத்தக்கூடும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். எதிர்க் கட்சித் தலைவரை அனோமா பின்பற்றக் கூடாது. உள்நாட்டு பிரச்சினைகள் தொடர்பில், ரணில் விக்கிரமசிங்க வெளிநாடுகளில் முறைப்பாடு செய்து வருகின்றார். ஏனைய உலகத் தலைவர்களை போன்று அல்லாது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இலகுவில் சந்திக்க முடியும். கொழும்பு மூன்றில் அமைந்துள்ள அலரி மாளிகையில் ஜனாதிபதியை சந்தித்து சரத் பொன் சேகாவின் குடும்பத்தார் தமது கோரிக் கையை முன்வைக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவின் உறவினர் ஒருவரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்வதற்கு மனிதாபிமான அடிப் படையில் ஜனாதிபதி அனுமதியளித்தார் என்பதனை நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும் என அவர் குறிப் பிட்டுள்ளார்.

எனினும், ஜனாதிபதி, எதிர்க் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த காலத்தில் சிறைத்தண்டனை அனுபவித்து வந்ததாகவும் அப்போது அவரது தாயாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்ள நீதிமன்றின் உதவியை நாட நேரிட்டதாகவும் பந்துல ஜயசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, சரத் பொன்சேகாவை விடுதலை செய்வது தொடர்பில் அமெரிக்கா தலையீடு செய்ய வேண்டுமென கோரி இணையம் ஊடாக கையொப்பங்களை திரட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சரத் பொன்சேகாவின் குடும்பத்தார் இந்த கையொப்பங்களை திரட்டும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். ஒரு மாத காலத்திற்குள் 25 ஆயிரம் கையொப்பங்கள் திரட்டப்பட்டால் உலகின் எந்தவொரு நாட்டிலிருந்தும் முன் வைக்கப்படும் கோரிக்கைகள் குறித்தும் அமெரிக்கா தலையீடு செய்யும் என தெரிவிக்கப்படுகிறது. (எ-5)

# "தமிழ்ப் பெண்புலி" எழுத்தாளர் நிரோமி சர்ச்சையில் சிக்கினார்

அவுஸ்திரேலியாவில் வெளியிடப் பட்டு பரபரப்பை ஏற்படுத்திய "தமிழ்ப் பெண்புலி" என்ற நூலின் உண்மைத் தன்மை குறித்த சந்தேகங்கள் எழுப்பப் பட்டு வரும் நிலையில், அந்த நூலை எழுதிய நிரோமி டீ சொய்சா யாழ்ப் பாணத்தின் பிரபல ஆண்கள் பாட சாலையான சென்.ஜோன்ஸ் கல்லூரி யில் கல்வி கற்றதாக கூறியுள்ளது சர்ச் சையை ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பு ஆங்கில வார இதழான சண்டே லீடரில் வெளியாகியுள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் இது தொடர் பாக ஆராயப்பட்டுள்ளது. அதில் தெரி விக்கப்பட்டுள்ளதாவது, "தமிழப் பெண் புலி"(Tamil tigress) என்ற நூலை எழுதிய நிரோமி டீ சொய்சா தொடர்பான செய்திகள் கடந்த வாரம் இப்பக்கங் களில் அதிகம் காணப்பட்டன.

இவ்வாண்டின் ஆரம்பத்தில் இவ ரால் வெளியிடப்பட்ட புத்தகத்தில், தான் மூத்த தமிழ்ப் பெண் உறுப்பினர்களில் ஒருவராக இருந்ததாக டீ சொய்சா குறிப்பிட்டிருந்தார்.

தான் எழுதிய புத்தகத்திலிருந்து கிடைக்கப் பெறும் வருமானத்தின் ஒரு பகுதி வடக்குக் கிழக்கில் போரால் பாதிக் கப்பட்ட சிறுவர்களுக்கு புலமைப்பரி சில்களை வழங்கும் திட்டத்திற்கு வழங் கப்பட்டு வருவதாக இலக்கிய விழா ஒன் றில்நிரோமிடீசொய்சா தெரிவித்துள்ளார்.

அத்துடன் இவரது முக நூல் (Face book)பக்கத்திலும் தனது தமிழ்ப் பெண்புலி என்றநூலின்மூலம் கிடைக்கப் பெறும் வருமானத்தின் 15 சதவீதம் யாழ் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் கல்வி பயின்று 1987 ல் வெளியேறிய ஒரு தொகுதி பழைய மாணவர்களால் நடத்தப்படும் நிதியத்திற்கு அனுப்பப்படு வதாக டீ சொய்சா குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறிருப்பினும், இந்தக் கூற்று முற்றிலும் பொய்யானது. இது தொடர் பாக மேலும் ஆராயப்பட்டதன்படி, டீ சொய்சா தனது புத்தகத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற வருமானத்தை சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கோ அல் லது இலக்கிய விழாவில் குறிப்பிட்டது போன்று தான் கற்ற பாடசாலைக்கோ நன்கொடையாக வழங்கவில்லை என்பது தெரியவந்துள்ளது.

சென்.ஜோன்ஸ் கல்லூரியானது எப் போதும் ஆண்கள் பாடசாலையாக இருந்து வருகிறது என அந்தக் கல்லூரி யின் அதிபரான என்.ஜே ஞானப் பொன்ராஜா தெரிவித்துள்ளார்.

ஆகவே, டீ சொய்சா இலக்கிய விழா ஒன்றில் குறிப்பிட்டது போன்று இக்கல்லூரியானது இவர் கற்ற பாட சாலையாக ஒரு போதும் இருந்திருக்க முடியாது.

சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பேரில் சேகரிக்கப்படும் நிதி பாடசாலை யின் பழைய மாணவர்களால் நிர்வகிக் கப்படும் அமைப்பிடம் கையளிக்கப் படுகின்றது என்பதை அதிபர் ஞானப் பொன் ராஜா உறுதிப்படுத்தியுள்ளார்.

சேவை நோக்கில் மேற்கொள்ளப் படும் இத்திட்டத்தின் கீழ் ஏழு மாணவர் களுக்கு அவர்களின் கல்வித் தேவை யைப் பூர்த்தி செய்வதற்கான புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன என அதிபர் மேலும் தெரிவித்துள்ளார் என் றுள்ளது. (எ-5)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## *உனது தேவை சுயநம்பிக்கை*



ஒருவர் மீது ஒருவர் பொறாமைப்படுவதையும் வெறுப்பதையும் விட்டுவிட்டு ஒருவருக்கொருவர் பூஜிக்க கற்றுக் கொள்ள வேண்டும்.

மனதுக்கு பிடித்த வேலையை செய்ய மூடனாலும் முடியும். எந்த வேலையையும் தன் மனதுக்குப் பிடித்தாகச் செய்பவன் அறிவாளி.

பிறர் நலனுக்காகச் சிறிது பணி செய்தாலும் உனக்குள் உள்ள சக்தி விழித்துக் கொள்ளும். பிறருக்காக சிறிது சிந்தித்தாலும் உன் உள்ளத்தில் சிங்கத்தின் பலம் வந்து சேரும்.

பணத்தால் எதுவும் ஆவதில்லை. பெயரால், புகழால், கல்வியால் எதுவும் ஆவதில்லை. அன்பால் அனைத்தும் நிறைவேறும்.

எவரையும் நீ கெட்டவன் என்று சொல்லாதே நீ நல்லவன் தான். இன்னும் நல்லவனாக ஆகு என்று தான் கூற வேண்டும்.

உன்னை நீயே வெறுக்காமலிருப்பது தான் முதற் கடமையாகும். முன்னேற்றமடைய முதலில் சுயநம்பிக்கை அவசியம் தேவை.

# வவுனியாவில் 39 பேர் டெங்குநோயால் பாதிப்பு

வவுனியா மாவட்டத்தில் இந்த வருடத்தில் 45 பேர் டெங்குநோய்த் தாக்கத்துக்குள்ளானவர்களாக இனங்காணப்பட்டபோதிலும் 39 பேரே டெங்குநோய்த் தாக்கத்துக்குள்ளாகியிருந்ததாக வவுனியா பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

டெங்கினால் பாதிக்கப்பட்டவர்களில் வவுனியா மாவட்டத்தை சேர்ந்தவர்கள் 4 பேரும் ஏனைய 35 பேரும் வெளிமாவட்டங்களிலிருந்து வவுனியாவில் தங்கியிருப்பவர்களெனவும் அவர் கூறினார்.

டெங்குநோயை கட்டுப்படுத்தும் முகமாக வவுனியா மாவட்டத்தை 5 வலயங்களாக பிரித்து சுகாதார தொண்டர்கள், இராணுவத்தினர், பொலிஸார் ஆகியோரின் உதவியுடன் வீடு வீடாக சென்று டெங்குநுளம்பு உற்பத்தியாகக்கூடிய இடங்கள் அடையாளம் காணப்பட்டு அதனை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 5 வலயங்களுக்கும் ஒவ்வொரு பொது சுகாதார பரிசோதகர்களும் உள்ளடக்கியதாக குழு அமைக்கப்பட்டு நடவடிக்கை முன்னெடுக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

# லக்பிம நியூஸ் பத்திரிகை ஆசிரியர் மீது தாக்குதல்

(கொழும்பு)

கொழும்பு, கறுவாத்தோட்டத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சட்டத்தரணிகளுக்கான வருடாந்த ஒன்றுகூடல் வைபவத்தின் போது தான் தாக்குதல்களுக்குள்ளானதாக கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் லக்பிம நியூஸ் பத்திரிகையின் ஆசிரியர் ராஜ்பால் அபேநாயக்க முறைப்பாடு செய்துள்ளார்.

முன்னாள் நீதியரசர் சரத் என்.சில்வா குறித்து கருத்து வெளியிட்டமைகாரணமாகவே தான் தாக்கப்பட்டதாக சட்டத்தரணியான லக்பிம செய்தி ஆசிரியர் ராஜ்பால் அபேநாயக்க தெரிவித்துள்ளார்.

தாக்குதல் சம்பவத்தின்போது ராஜ்பால் அபேநாயக்கவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.எனக்கு யாரோ ஒருநபர் கொலை அச்சுறுத்தல் விடுத்தார். இது தொடர்பில் நான் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளேன் என அவர் கூறினார்.

விசாரணைநிலுவையிலுள்ளதெனக்கூறிய கொள்ளுப்பிட்டி பொலிஸார் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டனர். (அ-2)

# நாட்டின் துரித அபிவிருத்திக்கு இராணுவ முகாம்கள் அவசியம்

## கூறுகிறார் அமைச்சர் பசில்



(கொழும்பு)

சட்டம் மற்றும் மக்களின் பாதுகாப்பு, மக்களின் சொத்துப் பாதுகாப்பு இல்லாமலிருந்த ஒரு கால கட்டத்திலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்நாட்டைப் பொறுப்பேற்றார். பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனையூடாக புதிய இலங்கை 2005 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை பயணித்து வருவதாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் இறுதியில் அரசாங்கம் சார்பில் விவாதத்தை முடித்து வைத்து அவர் உரையாற்றினார்.

அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது,

2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட விவாதத்தில் எதிர்க்கட்சி எவ்விதமான பயனுள்ள விமர்சனங்களையும் முன்வைக்காமை கவலையளிக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் துரதிர்ஷ்டம் காரணமாக அதில் இருந்த புத்திஜீவி மற்றும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமது கடமையை நேர்மையாக செய்வதற்கு முயற்சித்த எம்.பி. ஒருவர் இன்று அரசாங்கத்துடன் இணைந்து வரவு செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்க உடன்பட்டார்.

இந்த நாட்டு மக்களின் ஆணையுடன் ஜனாதிபதி 2005 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி நாட்டைப் பொறுப்பேற்றார். அக்காலத்தில் சுனாமியால் நாடு அழிவடைந்திருந்த காலம் 30 வருட பயங்கரவாதம் காரணமாக அனைவரினதும் வாழ்க்கை பாதிக்கப்பட்டிருந்த நேரத்தில் நாட்டைப் பொறுப்பேற்ற ஜனாதிபதி முதலாவதாக பிரிவினைவாதப் பயங்கரவாதத்தை அழிக்க நடவடிக்கை எடுத்தார்.

அத்துடன் அதனைக் காரணமாகக் கொண்டு நாட்டின் நலன்புரி விடயங்களை நிறுத்திவிடாமல், அபிவிருத்தியை செயழிலக்க விடாமல் திட்டமிட்ட ரீதியில் நாட்டை முன்னேற்ற மஹிந்த சிந்தனை வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அந்த வகையில் உத்தியோகபூர்வமாக ஜனாதிபதியின் முதலாவது பதவிக்காலமாக எடுக்கக்கூடிய 6 வருடங்கள் கடந்த நவம்பர் 17 ஆம் திகதி நிறைவு பெற்றது. எனவே இந்த நாட்டை ஒரு பூமியாக ஏற்க வேண்டுமாயின் எந்த இடத்திலும் இராணுவ முகாம்கள் இருக்க வேண்டும். எனவே பாதுகாப்புச் செலவானது நாட்டின் துரித அபிவிருத்திக்கும் பாது காப்பிற்கும் மக்களின் நலன்புரிக்கும் அவசியமாகும். நாங்கள் வட்டி வீதத்தை குறைத்தோம். அன்று வட்டி வீதம் 30 வீதம் வரை உயர்ந்தது. அதனால் விவசாயிகளுக்கு, சிறிய வர்த்தகர்களுக்கு, கைத்தொழிலாளர்களுக்கு பாரிய சுமை ஏற்பட்டது.

வீடுகளை கட்டுபவர்களுக்கு, தொழிலாளர்களுக்கு பாரிய அழுத்தம் ஏற்பட்டது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்தார். (அ-2)

# விழிப்புல வலுவிழந்தோரை இணைத்துக் கொள்ளுதல்

(யாழ்ப்பாணம்)

வாழ்வகம் விழிப்புல வலுவிழந்தோர் இல்லம் பார்வையற்ற பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகளை இணைத்துக்கொள்ளவுள்ளது.

இவ் இல்லத்தில் இணைவதன்மூலம் அவர்களிற்கு நல்லதொரு கல்வி வாய்ப்பினை வழங்க முடியும்.

இவ்வாறுள்ள தமது பிள்ளைகளை இல்லத்தில் இணைத்துக்கொள்ள விரும்பும் பெற்றோரிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

இங்கு எழுத்துக்களினை வாசிப்பதில் பெருமளவு சிரமப்படுகின்ற பிள்ளைகளும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். அத்தோடு இங்கு கல்வி கற்கும் காலப்பகுதியில் பிள்ளைகளுக்கான உணவு, தங்குமிடம், கல்விச்செலவுகள் என்பன இலவசமாக வழங்கப்படவுள்ளன என சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதி வாழ்வகப் பொறுப்பாளர் ஆ.ரவீந்திரன் அறிவித்துள்ளார். (அ)

## சாவ.வைத்தியசாலை விடுதியில்

# பயன்தருமரங்களை அமைத்து பராமரிக்க வருமாறு அறிவிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வைத்தியசாலை விடுதிக்கு அருகாமையில் பயன்தருமரங்களை அமைத்து பராமரிக்கவிரும்பும் பொது அமைப்புக்கள் வைத்தியசாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு வைத்தியசாலை வளாகத்தை பூஞ்சோலையாக மாற்ற முன்வருமாறு வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதி நோயாளர்களின் நலனைக் கருத்திற் கொண்டு செவ்விளநீர், தோடை, தேசி போன்ற பயன்தருமரக்கன்றுகளை நாட்டுவதன் மூலம் நோயாளர்கள் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே நோயாளர்களின் நலனுக்கு உதவ முன்வரவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)

# மட்டக்களப்பில் அண்மைக்காலமாக கொள்ளைச் சம்பவங்கள் அதிகரிப்பு

## களுவாஞ்சிக்குடி பொலிஸ் அத்தியட்சகர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்காலமாக கொள்ளைச் சம்பவங்களும் குற்றச் செயல்களும் அதிகரித்துள்ளதாக தெரிவித்த களுவாஞ்சிக்குடி பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு குறைவடைந்துள்ளமையே 'குற்றச்செயல்கள் அதிகரிக்க காரணமெனவும் அவர் தெரிவித்தார்.

களுவாஞ்சிக்குடி ராசமாணிக்கம் மண்டபத்தில் இடம்பெற்ற களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பிரதேசத்தில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதனால் அவற்றைக் கட்டுப்படுத்தும் முகமாக ஆராயும் விசேட கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், சிவிலுடையில் யாராவது வீட்டுக்கு வந்து நாங்கள் படையினர், பொலிஸார் என தெரிவித்தால் நீங்கள் கதவுகளை திறக்க வேண்டாம். அவ்வாறு நீங்கள் திறப்பதால் அவர்கள் உண்மையில் பொலிஸாரா?படையினரா? என அறிய அவர்களது அடையாள அட்டையினை பெற்று பரிசோதனை செய்யுங்கள். அதற்கான முழு உரிமையும் உங்களுக்கு இருக்கின்றது.

அண்மையில் இராணுவம் என்று சிவிலுடையில் சென்றோர் அந்த வீட்டில் உள்ளோரை மிரட்டி 19 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளை கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.நீங்கள் இராணுவம், பொலிஸ் யாராக இருந்தாலும் அடையாள அட்டையினை காட்டுமாறு கூறி பரிசோதனை செய்யுங்கள். அவர்களில் உங்களுக்கு சந்தேகம் ஏற்பட்டால் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு அதன் பொறுப்பதிகாரிக்கு தெரியப்படுத்துங்கள்.

தனது கடமையை செய்ய பொலிஸ் தவறினால் என்னிடம் தெரியப்படுத்துங்கள் அல்லது எங்கள் உயர் அதிகாரியிடம் தெரியப்படுத்துங்கள். நானாக இருந்தாலும் அதனை கடைப்பிடியுங்கள் என்றார். (அ-2)

# அமெரிக்கா மீது தாக்குதல் நடத்த இ தொய்பா திட்டமிட்டு வருகின்றது

(வோஷிங்டன்)

அமெரிக்காமீது தாக்குதல் நடத்த லஸ்கர் இ தொய்பா தீவிரவாதிகள் திட்டமிட்டு வருகிறார்கள். இதற்காக இன்டர்போல் மூலம் ஆதரவை திரட்டி வருகின்றனர்.

பாகிஸ்தானில் இருந்து செயற்பட்டு வரும் லஸ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள் இந்தியாவில் அடிக்கடி தாக்குதல்களை நிகழ்த்தி வருகின்றார்கள். இந்த தீவிரவாத இயக்கத்துக்கு ஆதரவாக செயற்பட்டதாக அமெரிக்காவில் வசித்த பாகிஸ்தானை சேர்ந்த ஜுபைர் அகமது (வயது 24) என்ற வாலிபர் பிடிபட்டார்.

இவர் லஸ்கர் இ தொய்பா இயக்கத்திற்கு ஆதரவான வீடியோவில் பிரசாரம் செய்தது, ஆட்களை எடுப்பது போன்ற செயல்களில் ஈடுபட்டது விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவர் மீதான வழக்கு சில தினங்களுக்கு முன்பு வெர்ஜீனியா நீதிமன்றில் விசாரணைக்கு வந்த போது குற்றச்சாட்டை அவர் ஒப்புக் கொண்டார்.

எனவே அவருக்கு 15 ஆண்டு சிறைத் தண்டனையும் ரூ11/4 கோடி அபராதம் விதிக்கப்படலாம். 3 ஆண்டு சிறைத்தண்டனை நிறைவேறிய பின்னர் அவர் நாடு கடத்தப்படலாம் என்று கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து லஸ்கர் இ தொய்பா இயக்கத்தின் ஆதரவாளர்கள் அமெரிக்காவில் ஊடுருவி தாக்குதல் நடத்தக்கூடும் என்று வெர்ஜீனியா அரச சட்டத்தரணி மார்க் பிரைட் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில்,

இந்தியாவை குறிவைத்து தாக்கி வந்த இவர்கள் தற்போது மேற்கத்தைய நாடுகளிலும் குறிப்பாக அமெரிக்காவில் பரவி தங்களது இயக்கத்தை பலப்படுத்தி வருகின்றார்கள். இது மிகவும் அபாயகரமான அமைப்பு. எனவே இந்த அச்சுறுத்தலை மிகவும் தீவிர பிரச்சினையாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கருத்து வெளியிட்டார்.

கடந்த ஒரு ஆண்டில் மட்டும் வெர்ஜீனியா பகுதியில் மட்டும் தீவிரவாதிகளுக்கு எதிராக 5 வழக்குகள் உளவுப்பிரிவு பொலிஸார் தொடர்ந்து இருக்கிறார்கள். (அ-2)

# நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட்; ஆஸி 9 விக்கெட்டுகளால் வெற்றி



அவுஸ்திரேலியா வந்துள்ள நியூசிலாந்து அணி 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

இதில் அவுஸ்திரேலியா-நியூசிலாந்து அணிகள் மோதிய முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பிரிஸ்பேனில் டிசம்பர் முதலாம் திகதி ஆரம்பமாகி நடந்தது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 82.5 ஓவர்களில் 295 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்த்து.

இதையடுத்து தனது முதல் இன்னிங்ஸை விளையாடிய அவுஸ்திரேலிய அணி இரண்டாவது நாள் ஆட்டநேர முடிவில் 46 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 154 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

**கிளார்க் சதம்**

3ஆவது நாளான நேற்று முன்தினம் தொடர்ந்து ஆடிய அவுஸ்திரேலிய அணியில் ரிக்கி பொன்டிங் 78 ஓட்டங்களில் ஆட்டமிழக்க கிளார்க்குடன் ஜோடி சேர்ந்தார் மைக் ஹசி. கிளார்க் -பொன்டிங் ஜோடி 4-வது விக்கெட்டுக்கு 86 ஓட்டங்களைக் குவித்தது.

சிறப்பாக ஆடிய கிளார்க் அரைச்சதம் கடந்தார். மைக் ஹசி 15 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது விக்டோரி பந்துவீச்சில் வீழ்ந்தார். இதையடுத்து களமிறங்கினாா பிரட் ஹாடின். மறுமுனையில் சிறப்பாக ஆடிய மைக்கல் கிளார்க் டெஸ்ட் போட்டியில் தனது 17ஆவது சதத்தை நிறைவு செய்தார்.

அவர் 139 ஓட்டங்களை(ஒரு சிக்ஸர்,19 பவுண்டரிகள் உட்பட) பெற்று ஆட்டமிழந்தார்.

சிறப்பாக ஆடிய ஹடின் அரைச் சதமடித்தார். பீற்றர் சிடில் ஓட்டமேதுமின்றியும், பட்டின்சன் 12 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். ஹடின் 80 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது குப்தில் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அவர் 2 சிக்ஸர் ,6 பவுண்டரிகளுடன் இந்த ஓட்டங்களை எடுத்தார்.

கடைசி விக்கெட்டாக லியான் வெளியேற அவுஸ்திரேலியாவின் முதல் இன்னிங்ஸ் 129.2 ஓவர்களில் 427 ஓட்டங்களுக்கு முடிவுக்கு வந்தது.

ஸ்டார்க் 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

நியூசிலாந்து தரப்பில் மார்ட்டின் 3 விக்கெட்டுக்களையும், விக்டோரி, சௌத்தி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

132 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை விளையாடத் தொடங்கிய நியூசிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது.

10 பந்துகளைச் சந்தித்த தொடக்க வீரர் பிரண்டன் மக்கலம் ஒரு ஓட்டத்தில் ஆட்டமிழந்து நடையைக் கட்டினார்.

மூன்றாவது நாள் ஆட்டிநேர முடிவில் நியூசிலாந்து அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 10 ஓட்டங்களை எடுத்திருந்தது.

4-வது நாள் ஆட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடந்தது

போட்டியின் 4ஆவது நாளான நேற்று நியூசிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 150 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.


அவ்வணியின் 3 வீரர்கள் ஓட்டமெதுவுமின்றி ஆட்டமிழந்தனர். 28 ஓட்டங்களை பெற்ற நிலையில் அவ்வணியின் 5 விக்கெட்டுகள் வீழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

தனது முதல் போட்டியில் விளையாடும் அவுஸ்திரேலிய வீரர் ஜேம்ஸ் பெட்டின்ஸன் 27 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.நதன் லியோன் 19 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

அவுஸ்திரேலிய அணி வெற்றி பெறுவதற்கு இரண்டாவது இன்னிங்ஸில் 19 ஓட்டங்களே தேவைப்பட்டன. 2.2 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்தது அவ்வணி.

இந்த வெற்றியின் மூலம் 2 டெஸ்ட் கொண்ட தொடரில் அவுஸ்திரேலியா 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. இரு அணிகள் மோதும் 2-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி வருகிற 9-ந் திகதி ஹோபார்டில் நடக்கவுள்ளது.

# ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு டிராவிட் புதிய அணித் தலைவர்



இந்தியன் பிரிமியர் லீக்கில் (ஐ.பி.எல்) ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் புதிய அணித் தலைவராக டிராவிட் நியமிக்கப்பட்டுள்ளார். ஐந்தாவது பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) இருபது-20 தொடர் அடுத்த ஆண்டு ஏப்ரல் 4ம் திகதி முதல் 27 வரை நடக்கவுள்ளது.

இம்முறை ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் அணித்தலைவர் தொடர்பாக குழப்பம் காணப்பட்டது.

கடந்த நான்கு தொடர்களில் இந்த அணியின் அணித்தலைவர் மற்றும் பயிற்சியாளரக இருந்த அவுஸ்ரேலியாவின் வோர்ன் (வயது 42) ஐ.பி.எல் அரங்கில் இருந்து ஓய்வு பெற்றார். இதையடுத்து புதிய அணித் தலைவரைக் கண்டறியும் முயற்சியில் ராஜஸ்தான் அணி இறங்கியது. டிராவிட், ரோஸ் ரெய்லர்(நியூசி), போத்தா(தென்.ஆபி) கோலிங்வூட்(இங்கிலாந்து), சகலதுறை வீரர் வோட்சன்(அவுஸ்திரேலியா) ஆகியோரது பெயர்கள் பரிசீலிக்கப்பட்டன. இறுதியில் இந்திய வீரருக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் அனுபவ துடுப்பாட்ட வீரரான ராவிட் இப்பதவிக்கு தேர்வு செய்யப்பட்டார்.

**ஷில்பா உறுதி**

இதனை ராஜஸ்தான் அணியின் உரிமையாளரும் நடிகையுமான ஷில்பா ஷெட்டி உறுதி செய்துள்ளார். இது குறித்து தனது டுவிட்டர் இணையத்தளத்தில் இந்திய பெருஞ் சுவர் என வர்ணிக்கப்படும் இவர் எங்களது அணிக்கு தலைமை ஏற்பது மிகவும் பெருமையான விடயம்; வாழ்த்துகள் டிராவிட் எனக் குறிப்பிட்டுள்ளார்.

கர்நாடகாவைச் சேர்ந்த டிராவிட் (வயது38) ஏற்கெனவே பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியின் தலைவராக இருந்துள்ளார். பின் நான்காவது ஐபிஎல் தொடரின் போது ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்காக ரூ 2.3 கோடிக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டார்.

# இன்று 3-வது ஒருநாள் ஆட்டம் இந்தியா ஹட்ரிக் வெற்றி பெறுமா?

டாரன் சமி தலைமையிலான மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான 3 டெஸ்ட் கொண்ட தொடரை இந்தியா 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. 5 ஒருநாள் போட்டித் தொடரில் கட்டாக்கில் நடந்த முதல் ஆட்டத்தில் ஒரு விக்கெட்டிலும், விசாகப் பட்டினத்தில் நடந்த 2வது ஆட்டத்தில் 5 விக்கெட் வித்தியாசத்திலும் இந்தியா வெற்றி பெற்றது. இதன்மூலம் இந்தியா 2-0 என்ற கணக்கில் முன்னணியில் உள்ளது.

இந்தியா மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதும் 3-வது ஒருநாள் போட்டி அகமதாபாத்தில் இன்று (திங்கட்கிழமை) நடக்கிறது. இந்திய அணி ஹட்ரிக் வெற்றி மற்றும் தொடரை வெல்லும் முனைப்பில் உள்ளது.

மேற்கிந்திய தீவுகள் அணியின் ஆட்டம் ஒவ்வொரு போட்டியிலும் இருந்து மேம்பட்டு வருகிறது. டெஸ்ட் தொடரை இழந்த அந்த அணி ஒருநாள் தொடரை இழக்காத வகையில் கடுமையாக போராடும். லெண்டிஸ், சிம்மென்ஸ், பிராவோ, பொலார்ட், ராம்போல் போன்ற சிறந்த வீரர்கள் அந்த அணியில் உள்ளனர்.



ஓய்வில் இருக்கும் இந்திய கிரிக்கெட் வீரர் தோனி, மனைவி சாக்ஷியுடன் தனது சொந்த ஊரான ராஞ்சி விமானநிலையம் வந்தார்.

இந்திய தொடரில் வெற்றியை பெறாத மேற்கிந்திய தீவுகள் இன்றைய போட்டியிலாவது வெற்றி பெற வேண்டும் என்ற ஆர்வத்தில் உள்ளது.

பகல்-இரவாக நடைபெறும் இந்த ஆட்டம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு தொடங்குகிறது.

# தெற்காசிய கால்பந்து போட்டி இந்தியா அதிர்ச்சி; 'சமனிலை'

(புதுடில்லி)

தெற்காசிய கால்பந்து போட்டியில் இந்திய அணியால், பலம் குன்றிய ஆப்கானிஸ்தானை சமாளிக்க முடியவில்லை. போட்டி 1:1 என்ற கோல் கணக்கில் சமனிலையானது.

டில்லியில் தெற்காசிய கால்பந்து சம்பியன்ஷிப் தொடர் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த தொடக்கப் போட்டியில் உலக தரவரிசைப் பட்டியலில் 162ஆவது இடத்தில் உள்ள இந்திய அணி, ஆப்கானிஸ்தானை (178ஆவது இடம்) சந்தித்தது.

இதில் இந்திய அணி எளிதாக வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் போட்டி தொடங்கிய நான்காம் நிமிடத்தில் ஆப்கானிஸ்தானின் பலால் அரேசோ முதல் கோல் அடித்து அதிர்ச்சி தந்தார்.

இதற்கு இந்திய அணியின் சுனில் செத்ரி 10ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தார்.

இரண்டாவது பாதி தொடங்கிய 10ஆவது நிமிடத்தில் இந்திய அணிக்கு கோல் அடிக்க பொன்னான வாய்ப்பு கிடைத்தது. ஆனால் சுனில் செத்ரி ஏனோதானோ என பந்தை அடிக்க, வாய்ப்பு நழுவியது பின் ஆப்கான் வீரர் மகோதார் பைசுல்லா தனது கையால் பந்தை தொட்டதாக கூறி இந்திய அணியினர் பெனால்டி கேட்டு வாதாடினார். இதனை ஏற்க மலேசிய நடுவர் நகோர் அமிர் மறுத்துவிட்டார்.



கடைசிக் கட்டத்தில் ஆப்கான் வீரர் சஞ்சை அகமதி கோல் அடிக்க வாய்ப்பு இருந்தது. இதனை கோல்க்கீப்பர் கரன்ஜித் துடிப்பாக தடுத்ததால், இந்திய அணி பெரும் சிக்கலில் இருந்து தப்பியது. இறுதியில் போட்டி 1:1 என்ற கோல்கணக்கில் சமனிலையில் முடிந்தது.

# இலங்கைக்கு அநப...

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் விடுதலைப்புலிகளை தோற்கடித்தபோதும், இலங்கை எதிர்கொள்ளும் சவால்கள் இன்னமும் முடிபுக்கு வரவில்லை.

அவர்களின் வெள்ளைக்கொடி குற்றச்சாட்டை இன்னமும் எதிர்கொள்ளவேண்டியுள்ளது என ஜனாதிபதி தனது உரையில் கூறினார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது,

இலங்கையின் பெயரைக் கெடுக்கும் வகையில் அவர்கள் தொலைக்காட்சி ஆவணப் படங்களை ஒளிபரப்புகின்றனர்.

இராணுவ மற்றும் அரசியல் தலைவர்கள் மீது அனைத்துலக நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுகளை சுமத்த முனைகின்றனர்.

அமெரிக்காவுக்கு, பிரித்தானியாவுக்கு அல்லது அவுஸ்ரேலியாவுக்கு நாம் செல்லும் போது அவர்களின் நெருக்கடியை சமாளிக்க வேண்டியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சுக்கு எதற்காக பெருந்தொகை நிதி ஒதுக்கப்படுகிறது என்று எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்புகின்றன.

எமக்கு எதிரான உள்நாட்டு வெளிநாட்டு சக்திகளை எதிர்கொள்வதற்கு, ஆயுதப்படைகளுக்கு சம்பளங்கள், மேலதிகப் படிகளை வழங்குவதற்கு, படையினரின் குடும்பங்களுக்கான நலத்திட்டங்களுக்கு, நாட்டின் இறைமையையும் அமைதியையும் பாதுகாப்பதற்காக உயிரைக் கொடுத்த படையினரின் பெற்றோருக்கு உதவிகளை வழங்க வேண்டியுள்ளது. இதற்கெல்லாம் தான் இந்தளவு நிதி ஒதுக்கப்படுகிறது என்று அவர் மேலும் கூறியுள்ளார். (எ)

# அமெ.விமா...

வட்டாரங்களை மேற்கோள் காட்டி அல் ஆலம் தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

சிறிய சேதங்களுடன் வீழ்த்தப்பட்ட இவ் விமானத்தை ஈரானிய படையினர் கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை எமது வான்பரப்பிற்குள் அத்துமீறும் அமெரிக்க உளவு விமானங்களுக்கான பதிலடி ஈரானிய எல்லைகளுக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்காது என இராணுவவட்டாரமொன்று கூறியுள்ளதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# தொழிற்சங்கத் தலைவர்களை நீக்கியது ஜே.வி.பி.!

(கொழும்பு)

ஜே.வி.பி. சார்பு தொழிற்சங்கங்களின் 9 தலைவர்கள் அப்பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பியின் மாற்றுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

அகில இலங்கை சுகாதார சேவைகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஆர்.எம்.டபிள்யூ.ரணசிங்க, செயலாளர் ரி.ஈ.இயன் சந்திரகுமார், அனைத்துக் கம்பனி ஊழியர் சங்கத்தின் சிரேஷ்ட தலைவர் ரஞ்சித் பியதிலக, உபதலைவர் உபுல் விஜேசிங்க, இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கத்தின் தலைவர் எச்.எம்.தர்மதாஸ, அதன் மத்திய மாகாண செயல்ளாளர் ஏ.பி.கங்கொட,

இலங்கை மின்சார ஊழியர் சங்கத்தின் பிரதி பொதுச் செயலாளர் எல்.பி.கே.கொகாமுல்ல, அகில இலங்கை போக்குவரத்து ஊழியர்கள் சங்கத்தின் ஏற்பாட்டாளர்கள் டபிள்யூ.வசந்த பியதாஸ, உள்ளூராட்சி துறை தொழிற்சங்களின் தலைவர் மதுர கமகே ஆகியோரும் இவர்களில் அடங்குவர்.

தமக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து தொழிற்சங்க அங்கத்தவர்களுக்கு இத்தலைவர்கள் அறிவுறுத்துவர் என டாக்டர் ரணசிங்க தெரிவித்தார்.

# பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும் தரம் 5இல் புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் விழாவும் இன்று காலை 9.30 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் அதிபர் அ.சா.அரியகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் பா.ரகுநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (எ,9-19)

# காணாமல்போன பிள்...

யில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது 16 வயதுடைய தனது மகனான தனுராஜின் புகைப்படங்களை ஒழித்துவைத்துக்கொண்டு சாந்தகுமார் கமலா இடம்பெயர்ந்துள்ளார்.

பாடசாலைச் சீருடையில் காணப்படும் தனுராஜின் புகைப்படத்தை அவர் எம்மிடம் காண்பித்தார். காணாமல்போன தனது மகன் திரும்பவும் கிடைக்க வேண்டும் என சாந்தகுமார் கமலா கூறுகின்றார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது காணாமல்போன பிள்ளைகள் சிலரை அவர்களின் குடும்பத்தினர் தேடிக் கண்டுபிடித்ததை தொடர்ந்து சாந்தகுமார் கமலாவும் தனது மகனை தொடர்ந்து தேடிவருகின்றார்.

போர் முடிபுக்கு வந்த பல மாதங்கள் கடந்தும் தமது அன்புக்குரியவர்களைப் பிரிந்து வாழும் குடும்பங்களை மீள ஒன்றிணைப்பதில் அதிகாரிகள் கடும் முயற்சிகளை மேற்கொண்டனர். அத்துடன் காணாமல்போன பிள்ளைகளை கண்டுபிடிப்பதற்கான வேலைத்திட்டம் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டது.

போரில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காக இடம்பெயர்ந்தபோது சனநெரிசலுக்கு மத்தியில் தமது பெற்றோர்களை பிரிந்த பிள்ளைகளும் உண்டு. சிலர் விடுதலைப்புலிகளால் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

அத்துடன் வெவ்வேறு பேருந்துகளில் ஏற்றப்பட்டு பல்வேறு முகாம்களுக்கும் கொண்டு செல்லப்பட்டபோதும் இலங்கைப் படைத்தரப்பினால் கைது செய்யப்பட்டபோதும் தமது குடும்பங்களைப் பிரிந்தனர்.

போர் முடிபுக்கு வந்தபின்னர் 2 ஆயிரம் வரையிலான சிறுவர்கள் அவர்களின் குடும்பங்களுடன் மீள இணைக்கப்பட்டிருந்த போதிலும் பல பெற்றோர்கள் தமது காணாமல்போன பிள்ளைகளை தற்போது தேடிவருகின்றனர்.

2009ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அரசாங்கமும் யுனிசெப் நிறுவனங்களும் இணைந்து காணாமல்போன பிள்ளைகளைத்தேடி பெற்றோரிடம் ஒப்படைப்பதற்கான அலகு ஒன்றை டிசம்பர் மாதம் உருவாக்கியிருந்தனர்.

2011ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இவ்வலகு காணாமல்போன பிள்ளைகள் தொடர்பான 690 முறைப்பாடுகளை பெற்றிருந்தது. இவற்றில் 490 முறைப்பாடுகள் விடுதலைப்புலிகளின் கட்டாய ஆட்சேர்ப்பு திட்டத்தின் கீழ் இணைத்துக்கொள்ளப்பட்ட சிறுவர்கள் தொடர்பானது. இவர்களில் 29 சிறுவர்கள் மட்டும் அவர்களின் குடும்பங்களுடன் மீண்டும் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

ஆயினும் தமது உறவுகளைத்தேடி பல குடும்பங்கள் தினமும் முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர் என இச் சஞ்சிகை மேலும் தெரிவித்துள்ளது. (எ)

அனைவரும் கற்கக்கூடிய கட்டணம் MCS இல்
CIMA-UK
New Batches
Foundation, Operational, Management, Strategic Levels
UK, USA பல்கலைக்கழகங்களில் Master Degree



MCS
Batch1: Sat only
Batch2: Sun only
Batch3: Weedays
பதிவுகளுக்கு 07.12.2011 க்கு முன் நேரில்
Qualified Lectures panel
CIMA Passing Guarant
12 Years Experience
Supported By UNDP/JRRP
324, Palaly Road, Parameswara Junction
Full Course fee Free
All Computer Diploma courses, IELTS & Diploma in Business English, TOEFL
தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம். SMS Your name & Course to 772395895 & Get Scholorship
CIMA-UK Approved Listed College in Jaffna, Srilanka

# மரண அறிவித்தல்கள்

## மரியாம்பிள்ளை இமானுவேல் பயஸ் அடிகளார்

யாழ்.மறை மாவட்டத்தைச் சேர்ந்த மரியாம்பிள்ளை இமானுவேல் பயஸ் அடிகளார் நேற்று (04.12.2011) காலமானார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர்,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

தகவல்:
ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார்.

(சி-5121)

# ஐ.தே.கவின் தலைமை...

அழைப்பு எதிர்க் கட்சியின் மாற்றுக் குழுவான சஜித் பிரேமதாச தரப்பினரால் விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து பொது செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தாவது,

கட்சியின் யாப்பிற்கிணங்க தலைமைத்துவத் தேர்தல் ஒன்று இடம்பெறுமாயின், அதுகுறித்து எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் இடம்பெறும் மத்திய செயற்குழு கூட்டத்தின்போது தீர்மானிக்கப்படும்.

அதன்போது, கட்சித்தலைமைத்துவம் உள்ளிட்ட 5 பிரதான பதவிகளுக்கான பிரேரணைகளை முன்வைக்க முடியும்.

குறித்த தருணத்தில் கட்சியின் தலைமைத்துவத்திற்காக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பு மனுக்கள் சமர்பிக்கப்பட்டால், முதலில் ஒருமைப்பாட்டின் அடிப்படையில், பதவிகளை தெரிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை அவ்வாறு செயற்பட முடியாத பட்சத்தில் கட்சி யாப்பின் 8இல் 1ஆம் சரத்தின் கீழ் வேட்புமனு கோரி தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு கட்சியின் செயலாளருக்கு அதிகாரம் உள்ளது.

எவ்வாறாயினும், ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமைத்துவத்திற்கான பதவியை ஏற்பதற்கு முன்வருபவர் கொண்டிருக்க வேண்டிய தகுதிகள் தொடர்பான வரையறை அறிக்கையொன்று தற்போது பொது செயலாளரினால் தயாரிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், எதிர்வரும் புதன்கிழமை மத்திய செயற்குழு கூட்டம் இடம்பெறவுள்ள நிலையில், அதில்குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அத்துடன்செயற்குழு கூட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அமைய வரவு செலவுத்திட்டம் உட்பட, மூன்று முக்கிய காரணங்கள் குறித்து கவனம் செலுத்தப்படவுள்ளது. (எ-11)

விக்னேஸ்வரா கல்வி நிலையம்
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு.
2012 ஆம் ஆண்டிற்கான கல்வியாண்டு
தரம் 4 முதல் தரம் 11 வரையான வகுப்புக்கள்
அனைத்தும் 05.12.2011 (திங்கட்கிழமை)
மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகும்
(6901)

## நடராசா ஞானலிங்கம்



மண்டைதீவு 6-ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் இல.383/2, நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா ஞானலிங்கம் அவர்கள் நேற்று (04.12.2011) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா செங்கமலம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் பத்மாவதி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலம்சென்ற யோகாம்பிகையின் அன்புக் கணவரும் பகீரதன்(சுவிஸ்), பரணீகரன் (சுவிஸ்), யசோதரன்(சுவிஸ்), சர்மிளா(சுவிஸ்), காலம்சென்ற கௌசல்யா ஆகியோரின் அன்புத் தந்தையும் சாருகாசினி, ஜெயமலா, சாமினி ஆகியோரின் மாமனாரும், ஞானமணி(ஓய்வுபெற்ற ஆசிரியை), செல்வலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஞானப்பூங்கோதை, மதுரநாயகி, பஞ்சாட்சரம், பாக்கியலட்சுமி, கணேசமூர்த்தி, லட்சுமிதேவி ஆகியோரின் மைத்துனரும் அக்சயா, கிசானா, அபினாஸ் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமைக் கிரியைகள் இன்று (05.12.2011) திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.383/2, நாவலர் வீதி, ஆனைப்பந்தி.
T.P.: 0214900050

தகவல்:
குடும்பத்தினர்

(6902)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.